பக்கங்கள்: நாற்பது +IV

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 01 ஞாயிற்றுக்கிழமை (13.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 079



வாழ்வா? சாவா? 05



09 வந்து சேர்ந்தது வதாரகை



13 குடாநாடு கிடக்கிற கிடையில....



19 வெள்ளப் பேரழிவு



33 வெள்ளரசுக் கிளையில் வீதி உலா

# வடமாகாண சபைத் தேர்தலில் கேபியை நிறுத்துகின்றது அரசு

## பிள்ளையான் முதல்வராக முடிந்தால் ஏன் அவர் வர முடியாது?: -பிரதமர்

கொழும்பு, பெப்ரவரி 13

**வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் தலைவர்களில் ஒருவரான கேபி எனப்படும் குமரன் பத்மநாதனைக் களம் இறக்க அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான சமிக்ஞையை பிரதமர் டி.எம்.ஜயரத்ன வெளிப்படுத்தி உள்ளார். பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருக்க முடியுமானால் கேபி வடக்கு மாகாண முதலமைச்சராக வருவதில் என்ன சிக்கல் இருக்கின்றது என்று கேள்வி எழுப்பி உள்ளார் பிரதமர்.**



கொழும்பில் வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்குப் பிரதமர் பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) சுதந்திரக் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். அவருக்கு கட்சியின் அடிப்படை உறுப்புரிமையும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று கேபிக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை வழங்குவதில் பிரச்சினைகள் இல்லை. அவரும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக ஆக முடியும்.

கேபியைக் கொல்லுவதோ (37 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு பெயர்கள் சிபாரிசு

கொழும்பு, பெப். 13

மனித உரிமை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கான சிபாரிசுகள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமையப்பெற்ற நாடாளுமன்ற சபை நேற்றுச் சனிக்கிழமை முதல் தடவையாகக் கூடிய போதே ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதற்கிணங்க, முன்னாள் நீதியரசர் பிரியந்த பெரேரா தலைமையிலான இந்த ஆணைக்குழுவிற்கு தென் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் கலாநிதி ஜெசீமா இஸ்மாயில், முன்னாள்

(37 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வுக்கு காரைநகரில் அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 13

காரைநகர் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு உட்பட்ட சில பகுதிகள் மக்களின் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன என்று காரைநகர் உதவி அரச அதிபர் இ.ஜெயசீலன் தெரிவித்தார்.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட காரைநகர் தெற்கு மற்றும் காரைநகர் தென்மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இதுவரை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த கிராமங்களான தோப்புக்காடு, மடத்துவளவு மற்றும் பலகாடு ஆகிய கிராமங்களே இவ்வாறு மக்கள் குடியிருப்பதற்காக விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட கிராமசேவையாளர் ஊடாகக் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையுடன்

(37 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் உதவி கேட்டு கையேந்துகிறது அரசு

மட்டக்களப்பு, பெப்.13

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளுக்குச் சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச தொண்டு நிறுவனங்களைப் புறந்தள்ளி வந்த அரசு இப்பொழுது சர்வதேச தொண்டு அமைப்புக்களிடம் உதவிகளைக் கோரியுள்ளது.

மட்டக்களப்பு செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விசேட கூட்டத்திலேயே இந்த உதவி கோரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கூட்டப்பட்ட விசேட கூட்டத்துக்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களும் அழைக்கப்பட்டிருந்தன. மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீட்சிக்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் முக்கிய பங்குவகிக்க வேண்டும். அந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப உதவிகள் வழங்க வேண்டும் என்று அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(37 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்க அதிபர்கள் கோரிக்கை

மட்டக்களப்பு, பெப்.13

கிழக்கில் தொடரும் மழை, வெள்ளம் காரணமாக உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு அந்தப் பிரதேச அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளனர்.

தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளான அரச அதிபர்கள் தத்தமது பிரதேசங்களின் நிலைமைகள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலநறுவ ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தமது பிரதேசங்களில் தொடரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் இருந்து மக்கள் விடுபடாத நிலையில் (37 ஆம் பக்கம் பார்க்க)

## அரச வாகனங்களில் எரிபொருள் திருடி கள்ளச் சந்தையில் விற்பனை

கொழும்பு, பெப்.13

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் பவுஸர்களில் எரிபொருளைத் திருடி விற்பனை செய்யும் நான்கு இடங்களைத் தம்புள்ள - ஹபரனை பிரதான வீதியிலுள்ள இரு பிரதேசங்களில் மத்திய மாகாண மாவட்ட ஊழல் ஒழிப்புப்பிரிவு கண்டறிந்துள்ளது. (37 ஆம் பக்கம் பார்க்க)

## பிரசாரத்துக்கு யாழ். வருகிறது ஐ.தே.க. குழு

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் போட்டியிடும் ஐ.தே.க வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி உயர் மட்டக் குழு எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றது.

. ஐ.தே.கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய தலைமையில் வரும் இக் குழு சகல இடங்களுக்கும் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும்.

(ஓ-ஜ)

### காரைநகர் குடும்பஸ்தரின் மரணம்

## ஐ.தே.க. வேட்பாளர் உட்பட மூவர் கைதாகி மறியலில்

யாழ்ப்பாணம், பெப்.13

காரைநகரில் கிணற்றில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் மரணம் தொடர்பாக ஐ.தே.க வேட்பாளர் உட்பட மூவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் புது வீதியைச் சேர்ந்த (37 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
13 பெப்ரவரி 2011 ஞாயிற்றுக்கிழமை

# போட்டிக்குத் தயாராகிவிட்டது இலங்கை

பயிற்சியாட்டம் எஸ்.எஸ்.சியில் நேற்று. நெதர்லாந்துடன் மோதல் இலங்கைக்கு. நாணயச் சுழற்சி வெற்றி இலங்கைக்கு.

தரங்க-டில்ஷான் ஆட்டம் ஆரம்பிப்பு. வேகமாக ஓட்ட விகிதம் ஏற்றம். நெதர்லாந்து பந்து வீச்சு மோசம். அதிரடியாய் ஆடவில்லை. ஆட்டத்தின் போக்கில் சேகரிக்கப்பட்டது ஓட்டங்கள். முதலாவது விக்கெட் 117 ஓட்டத்தில் வீழ்த்தப்பட்டது. தரங்க தவறவிட்டார் அரைச்சதத்தை. சமரவீர-டில்ஷான் அடுத்த ஜோடி. ஐம்பது ஓட்டங்கள் சரியாகப் பகிர்வு. ராஜாவின் பந்தில் டில்ஷானது ஆட்டம் முடிவு. 78 ஓட்டங்கள் பெறப்பட்டது. சமரவீரா சாதித்து நின்றார். 60 ஓட்டங்களை அவர் கணக்கில் எட்டுகையில் வெளியேறினார். மத்தியூஸ் நம்பியிருந்தும் ஏமாற்றிவிட்டார். கப்புக்கெதர, சில்வா இழந்ததை மீட்டனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம். குலசேகரா துடுப்புக்கு புதுசு. இருந்தும் எடுப்பாய் கலக்கி விட்டார். 8 பந்தில் 14 ஓட்டங்கள். பின் வரிசையின் அதிரடி பலமாக்கியது அணியின் நிலையை.

351/5 இலங்கையால் பெறப்பட்டது. சிறந்த பந்து வீச்சு யாருமில்லை.

கேவீஸீ - பரிஸ் களமிறங்கினர். கிரிக்கெட்டுக்கு புதுசு இந்த அணி. இலங்கையின் பந்து வீச்சு இவர்களை கொன்று தின்றது. விக்கெட்டுகள் சரிந்தன. இரட்டை இலக்கம் எட்டுவதே எட்டாக் கனியாகியது. இடையில் ஒருவர் குறாத் அணி மானம் காக்க போராட்டம். நிராயுதபாணி அவர். செய்ய முடியவில்லை எதுவும். 76 ஓட்டங்களுடன் பெர்னாண்டோவின் பந்தில் செத்து மடிந்தார்.

195 ஓட்டங்கள். முடிவுக்கு வந்தது நெதர்லாந்தின் ஆட்டம். பெர்னாண்டோ 4 விக்கெட்டுக்கள். ஹேரத், பெரேரா தலா இவ்விரண்டு. மலிங்கவுக்கு ஒன்று. 9 பேர் பந்து வீசினர் இலங்கை சார்பில். (15)

## முழுமையாக விளையாட முயற்சிக்கிறேன் - சேவாக்

உலகக் கோப்பை போட்டியில் ஐம்பது ஓவர்களும் முழுமையாக விளையாட முயற்சிப்பேன் என்று இந்திய அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அவர் ஓய்வு நேரத்தின் போது செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது உலகக் கிண்ணப் போட்டிகள் தொடர்பில் செய்தியாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

ஒரு நாள் போட்டிகளில் நான் இது வரை ஐம்பது ஓவர்கள் முழுமையாக விளையாடியதில்லை என்று நினைக்கிறேன். அதிகபட்சமாக 43 அல்லது 44 ஓவர்கள் விளையாடியிருப்பேன். ஆனால் இந்த முறை 50 ஓவர்களும் முழுமையாக விளையாடி இந்திய அணிக்கு சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிக்கிறேன்.

எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும் என்றாலும், நெருக்கடியைப் பற்றி கவலைப்படுவதில்லை என்று கூறிய சேவாக், எந்தச் சூழ்நிலையிலும் நெருக்கடியைப் பற்றி நினைக்காமல் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துமாறு அணித்தலைவர் டோனியும், பயிற்சியாளர் கிர்ஸ்டனும் என்னிடம் தெரிவித்துள்ளனர். அவர்கள் இருவரும் என்னுடைய வழியில் என்னை விட்டுவிட்டனர். அதனால் எனக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை.

ஒட்டங்களைக் குவித்தாலும், குவிக்காவிட்டாலும் மகிழ்ச்சியாக இரு என்றே அவர்கள் இருவரும் என்னிடம் கூறியுள்ளனர். நான் முதல் ஓவரின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தாலும், அதன் பிறகு மத்திய வரிசையில் தோனி, விராட் ஹோலி, யூசுப் பதான், யுவராஜ் சிங், ரெய்னா ஆகியோர் உள்ளனர் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் முதல் 4 ஓவர்களில் பந்துகளை கணித்துவிட்டு, சிறப்பான தொடக்கத்தை அளிப்பேன் என்றார்-அவர். (15)

## டெண்டுல்கருக்காக விளையாடுவது நல்ல அணுகுமுறை அல்ல - ஸ்டீவ் வோவ்



இந்த உலகக் கோப்பையை இந்திய அணி சச்சின் டெண்டுல்காருக்காக வெல்வோம் என்று கூறும் அணுகுமுறை தவறானது. அணிக்காக, நாட்டுக்காக வெல்வோம் என்று கூறுவதே சிறந்தது என்று ஆஸ்திரேலிய முன்னள் அணித்தலைவர் ஸ்டீவ் வோவ் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பையை ஒரு தனிப்பட்ட நபருக்காக வெல்ல முடியாது. அணிக்காகவும், நாட்டுக்காகவும் விளையாடுவதே சிறந்த அணுகுமுறை. தனிநபரைக் காட்டிலும் ஆட்டம் மிகப் பெரியது என்றார் ஸ்டீவ் வோவ்

டெண்டுல்கர் இந்த உலகக் கோப்பையில் நட்சத்திரமாக திகழ மாட்டார். ஆனால் இந்திய அணியின் வெற்றியில் குறிப்பிடத்தக்க தருணங்களில் அவரது பங்களிப்பு முக்கியமானதாக அமையும்.

இந்த இந்திய அணி தன்னம்பிக்கை மிக்கது, நல்ல அனுபவம் பெற்றது, கரி கிர்ஸ்டன் இருப்பதோடு, ஆக்ரோஷமான அணுகுமுறை இந்த அணியின் மிகப்பெரிய வித்தியாசம்.

இவ்வாறு கூறிய ஸ்டீவ் வோவ், இந்தத் தொடரில் நன்றாக பந்து வீசக் கூடிய பந்து வீச்சளர்களைப் பட்டியலிட்டார். டெல் ஸ்டெய்ன், லசித் மலிங்க, பிரெட் லீ, கிரேம் ஸ்வான், ஹர்பஜன் சிங் ஆகியோரே அவரால் பட்டியலிடப் பட்டவர்கள். (15)

### Picture of the match



டில்ஷான் : நான் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டேன்...



## முடிவுக்கு வருகிறது பீட்டர்சனின் ஆட்டம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் கெவின் பீட்டர்சன், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கு பின் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

எனினும் டெஸ்ட் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் தொடர்ந்து விளையாட இருப்பதாகவும், தனது குடும்பத்துடன் அதிக நேரத்தினை செலவிடும் நோக்கத்துடனேயே இம்முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக பீட்டர்சன் ஒருநாள் போட்டிகளில் பெரிதாக பிரகாசிக்கவில்லை. மேலும் காயம் காரணமாக பெரிதும் அவதிப்பட்டு வந்தார். மேலும் ஒருநாள் போட்டிகளில் அவரது ஓட்ட சராசரி 50 லிருந்து 41 ஆக வீழ்ச்சியடைந்தது.

ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கடைசியாக இடம்பெற்ற ஒரு நாள் தொடரில் இங்கிலாந்து அணி 6-1 என தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

# புதுப்பொலிவுடன் ஆர்.பிரேமதாச ஸ்ரேடியம் நேற்றுத் திறப்பு

உலகக் கிண்ணப் போட்டிக்கள் ஆரம்பிப்பதற்கு இன்னும் சில நாள்களே எஞ்சியிருக்கும் நிலையில், இலங்கையில் இடம்பெறும் முக்கிய போட்டிகளை நடத்தும் கெத்தாராமையில் அமைந்துள்ள ஆர்.பிரேமதாசா மைதானம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையில் மிகப்பெரிய மைதானமாகிய ஆர்.பிரேமதாசா விளையாட்டரங்கு உலகக் கிண்ணப்போட்டிகளுக்காக புனரமைக்கப்பட்டது. 35 ஆயிரம் பார்வையாளர்கள் ஒரே தரத்தில் இருந்து பார்வையிடக்கூடியதாக மைதானம் புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த மைதானத்தின் புனரமைப்புக்காக 1.2 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் போட்டிகளில் அரையிறுதிப் போட்டி அடங்கலாக ஏழு போட்டிகள் இந்த மைதானத்தில் இடம்பெற உள்ளன. இலங்கை-பாகிஸ்தான் இடையே எதிர்வரும் 26 ஆம் திகதி இந்த மைதானத்தில் உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெற உள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே, வீடமைப்பு அதிகாரசபை அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோர் கலந்து கொண்டனர். (15)







உதயனின்
உலகக் கிண்ண
கொண்டாட்டம்
2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையின் தொடக்கம்



## உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

இரண்டாவது தொடர் ஆரம்பம் முதலாவதன் வெற்றியுடன் . மாற்றங்கள் மனிதனுக்கு விருந்தாய் அமைந்தால் கிரிக்கெட் அவன் விருப்புக்காய் அமைந்தது.

இம்முறையும் இங்கிலாந்தே தேர்வு. போட்டிகளை நடத்துவதற்கு. 1979 களில் சற்றே பிரபல்யம் ஒரு நாள் போட்டிகள். இருந்தும் இரண்டாவது உலகக் கிண்ணம் வெற்றிகரமாய் ஆரம்பம்.

இலங்கை, கனடா இந்தப் போட்டிகளுக்கு செல்லக் குழந்தைகளாய் வருகை. ஏனையோர் பழையவர்கள். இதனால் திமிரும் கொஞ்சம் அதிகம். அதனால் செல்லக் குழந்தைகளிடம் வாங்கியும் கட்டினர். மேற்கிந்தியதீவுகள், இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, இங்கிலாந்து இவர்களே அந்தத் திமிர் பிடித்தவர்கள்.

'புருடென்ரியல்' கிண்ணத்துக்கு வைக்கப்பட்ட பெயர். நான்கு அணிகள் ஒரு குழுவில். பந்தின் நிறமோ மாற்றம். வந்தது வெள்ளைப் பந்து. 15 ஆட்டங்கள்தான் இம்முறையும். அணிகளுக்கு இடையில் மோதல் ஜூன் 9 இல் ஆரம்பம். முதல் போட்டி இந்தியா மேற்கிந்திய தீவுகள். முதல் கோணல் முற்றும் கோணல் போல் மேற்கிந்தியதீவுகளிடம் இந்தியா அடி வாங்கியது.

செல்லக் குழந்தை இலங்கை. பதிவு செய்தது முதல் வெற்றி. தோற்றவர்கள் யார்? வேறு யாருமல்ல இந்தியாதான். முதலில் ஆட்டம் இலங்கை. 238/5 நிர்ணயித்தது. கலைக்கத் தொடங்கினர் பாவம் பாதிவழியிலேயே முடிந்து திரும்பினர். 191 ஓட்டங்கள் இலங்கையால் விட்டுக் கொடுப்பு.

முதல் அரையிறுதி இங்கிலாந்து -நியூஸிலாந்துக்கு தகுதி. இங்கிலாந்துக்கு இது இரண்டாவதுமுறை. சரிவரப் பயன்படுத்தி இறுதிக்கு முன்னேறினர். முதலில் ஆடிய இங்கிலாந்துக்கு சொந்த மண். அதனால் சிறப்பாக இடப்பட்டது அடித்தளம் முதல் இறுதிவரை. 221/8 நின்றாடி பெற்ற அவர்களின் இலக்கு. 212/9 நியூஸியின் பதில். வெற்றிக்கு போதவில்லை 9 ஓட்டங்கள். மயிரிழையில் தப்பி இறுதிக்குள் நுழைந்தது இங்கிலாந்து.

கொஞ்சம் சுவாரஸ்யம் இரண்டாவது அரையிறுதி . சமபலம் மேற்கிந்தியதீவுகள்,பாகிஸ்தான். தீவுகள் சிறப்பாக ஆடி எடுத்தனர் ஓட்டங்கள். இதனால் நிர்ணயித்தனர் பலமான இலக்கு. 293/6 . பாகிஸ்தான்பதிலுக்குத் தொடங்கி சிறப்பாக தொடங்கினர். இருந்தும் இடையில் சரிவுகள். நிவர்த்திசெய்யவில்லை. ஓட்டங்களைஎடுப்பதிலேயே காட்டினர் ஆர்வம். இதனால் தீவுகளின் களத்தடுப்புக்களில் இவர்கள் சிக்கிப் பலி.



இறுதிக்கு நுழைவது இரண்டாவது முறை மேற்கிந்தியதீவுகளுக்கு . சொந்த மண்ணின் பலத்துடன் இவர்களுக்கு சவால் விடுக்க நுழைந்தது இங்கிலாந்து.

கிண்ணம் இறுதியில் தீவுகளுக்கே சொந்தமாகியது. விவிலியன் ரிச்சட் ஆட்டத்துக்கு சொந்தக்காரர். -டிலீப்-

# 1979 சாதனையின் தொடர்ச்சி



### 1979 இரண்டாவது உலகக் கிண்ண இறுதிப்போட்டி

ஆட்டம்: மேற்கிந்தியத்தீவுகள் Vs இங்கிலாந்து — நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

முடிவு: மே.தீவுகள் 92 ஓட்டங்களால் வெற்றி — ஆட்டநாயகன்: ரிச்சட்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கிரீன்டிச் | Run out (ரன்டல்) | 09 | 31 | 0 | 0 |
| ஹைன்ஸ் | c ஹென்ரிக் b ஓல்ட் | 20 | 27 | 3 | 0 |
| விவியன் ரிச்சட் | ஆட்டமிழப்பு இல்லை | 136 | 157 | 11 | 3 |
| காலிச்சரன் | b ஹென்ரிக் | 04 | 17 | 0 | 0 |
| கிளைவ் லொயிட் | c & b ஓல்ட் | 13 | 33 | 02 | 0 |
| கிங் | c ரன்டல் b எட்மொன்ஸ் | 86 | 66 | 10 | 03 |
| முரே | c கௌவ்வர் b எட்மொன்ஸ் | 05 | 09 | 0 | 0 |
| றொபேட்ஸ் | c பிறீயலி b ஹென்ரிக் | 0 | 05 | 0 | 0 |
| கார்னர் | c ரெய்லர் b பொத்தம் | 0 | 06 | 0 | 0 |
| ஹோல்டிங் | b பொத்தம் | 0 | 02 | 1 | 0 |
| குரோவ்ட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | | | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| வில்லீ | 12 | 55 | 1 | 1 |
| கில்மோர் | 12 | 48 | 5 | 2 |
| தொம்ஸன் | 12 | 44 | 2 | 1 |
| வோல்கர் | 12 | 71 | 0 | 1 |
| கிரேம் சப்பல் | 07 | 33 | 0 | 0 |
| வோல்டர்ஸ் | 05 | 23 | 0 | 0 |

TOTAL - 291/8 (60)

விக்கெட் இழப்பு: 1-22 (கிறீன்டிச்), 2-36 (ஹைன்ஸ்), 3-55 (கலிச்சரன்), 4-99 (லொயிட்), 5-238 (கிங்), 6-252 (முரே), 7-258 (றொபேட்ஸ்), 8-260 (கார்னல்), 9-272 ஹோல்டிங்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரியூனர் | Run out ரிச்சட் | 40 | 54 | 4 | 0 |
| மக்கொஸ்கர் | c கலிச்சரன் b போவ்ஸ் | 0 | 24 | 1 | 0 |
| இயன் சப்பல் | Run out (ரிச்சட் / லொயிட்) | 62 | 93 | 6 | 0 |
| கிரேம் சப்பல் | Run out ரிச்சட் | 15 | 23 | 2 | 0 |
| வோல்டர்ஸ் | b லொயிட் | 35 | 51 | 5 | 0 |
| மார்ஷ் | b போவ்ஸ் | 11 | 24 | 0 | 0 |
| எட்வாட்ஸ் | c பெரடரெக்ஸ் b போவ்ஸ் | 28 | 37 | 2 | 0 |
| கில்மோர் | c கன்சாய் b போவ்ஸ் | 14 | 11 | 2 | 0 |
| வோல்கர் | Run out ஹோல்டர் | 07 | 9 | 1 | 0 |
| தொம்சன் | Run out முரே | 21 | 21 | 2 | 0 |
| வில்லீ | துடுப்பெடுத்தாடவில்லை | 16 | 19 | 1 | 0 |
| உதிரிகள் | | | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| யூலியன் | 12 | 58 | 0 | 0 |
| ரெபேட்ஸ் | 11 | 45 | 0 | 1 |
| போவ்ஸ் | 12 | 50 | 4 | 0 |
| ஹோல்டர் | 11.4 | 65 | 0 | 1 |
| லொயிட் | 12 | 38 | 1 | 1 |

TOTAL - 274/10 (58.4)

விக்கெட் இழப்பு: 1-129 (பெர்லி), 2-135 (பொய்கோட்), 3-183 (கோச்), 4-183 (கௌவ்வர்), 5-186 (ரன்டல்), 6-186 (லார்க்கின்ஸ்), 7-192 (பொத்தம்), 8-192 (ஓல்ட்), 9-194 (டெய்லர்), 10-194 (ஹென்ரிக்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர்

# சொந்த மண்ணில் மண் கவ்வியது இங்கிலாந்து

லோட்ஸில் இறுதி. இங்கிலாந்து, மேற்கிந்தியதீவுகள் பரீட்சைக் களத்தில். இருவரும் சமபலம் போட்டித் தொடரில். பஞ்சமில்லாத விறுவிறுப்புக்காய் திரண்டது கூட்டம். 1979 ஜீன் 23 பரீட்சை நாள்.

தலைவர்கள் மைதானத்தின் மத்தியில். போட்டுப் பார்ப்பு பூவா,தலையா . முடிவில் இங்கிலாந்து அதில் வெற்றி. தவறியது அவர் முடிவு. பணித்தார் தீவுகளை துடுப்பெடுத்தாட. கண்ணீர் வடிக்கின்றனர் இதன் விளைவுகளை இன்றும் நினைத்து இங்கிலாந்து துக்காரர்கள்.

பணிப்புக்கு பணிந்து வந்தனர் கிரீன்டிச்-ஹைன்ஸ். சொந்த மண உற்சாகத்தில் களத்தடுப்பு இங்கிலாந்திடம். கிரீன்டிச்சுக்கு அவசரம். தடக்கிவீழ்ந்து விட்டார் இங்கிலாந்து களத்தடுப்பில். இதனால் தலையிடி இங்கிலாந்துக்கு. விவிலியன் ரிச்சட்ஸ் 'சும்மா பேர கேட்டோன அதிருதில்லே'. இவரது அதிரடிகள் அதிரக் காரணம். தேடி அழைத்தது சனியனை இங்கிலாந்து.

விக்கெட் சரிவு ஒன்றன்பின் ஒன்றாக. 99/4 தடுமாறும் கட்டம். கை கொடுக்க யாருமில்லை விவிலியனுக்கு. தலைவரே கைவிட்டார். 1975 இவரின் கலக்கல். இம் முறை ஏமாற்றம். கிங். நாட்டுக்கல்ல. அந்தப் போட் டிக்கு. கிங்-விவிலியன் இணைவு. மீட்கப்பட்டது சரிவி லிருந்து தீவுகள்.

கிங் அதிரடியை எடுத்தார் கைகளில். துவசமானது இங்கிலாந்தின் பந்து வீச்சுகள். மிரண்டனர் இங்கிலாந்துக்காரர்கள். கண்டிருக்கவில்லை இதுவரை அப்படியொரு அதிரடியை. அடிகள் இங்கிலாந்துக்கு இடிகளாகின. 66 பந்துகள் வீசினர் இங்கிலாந்து அவருக்கு. 3 சிக்ஸர்கள் 10 பவுண்டரிகள். இவரது அதிரடிக்கு கிடைத்த பரிசுகள். பாவம் பதிநான்கு ஓட்டங்களால் பறிபோனது சதம். எட்மொண்ட்ஸ்தான் இவருக்கு [illegible] 238/5

விவிலியன் முடிந்ததை முடித்துக் கொண்டிருந்தார் மறுமுனையில். முரே, கிங்க்கு பதில். ஆதிக்கம் தொடங்கியது இங்கிலாந்து. முரே 5 ஓட்டங்களுடன் முடிவு கட்டப்பட்டார். முரேக்கு பின் மூவர் முட்டை போட்டனர். பொறுப்பெடுத்தார் இறுதியில்தான் விவிலியன். சதம் சாத்தியமாகியது அவருக்கு. இங்கிலாந்து விவிலியனை இறுதிவரை விட்டு வைத்தது. 157 பந்துகளை எடுத்துக் கொண்டு 138 ஓட்டங்களை சாத்தி யமாக்கினார். 11 பந்துகள் தரையுடன் தொட்டு எல்லை கடந்தன. 3 பந்துகள் வானத்தை நெருங்கி எல்லையை கடந்தன.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில்...

59 ஓவரின் இறுதிப்பந்து அவரது மூன்றாவது சிக்ஸர். 286/9 கௌர வமாய் தீவுகள் முடித்தது ஆட்டத்தை.

தீவுகளின் அதிரடியால் இங்கிலாந்து

பந்து வீச்சாளர் கள் பாவம். பொத்தம், ஹெண்டிரிக், ஓல்ட், எட் மொண்ட்ஸ் ஆளுக்கு இவ்விரண்டு விக்கெட்டுகள்.

எட்டியதுவானை ரசிகர்களின் கரகோசம் . தீவுகளுக்கு அதிர்ச்சி இங்கிலாந்தின் ஆரம்பம். அஸ்திவாரம் பலம். அதிரடி கள் ஏதும் இல்லை. காரணம் தீவுகளின் பந்து வீச்சும் களத்தடுப்பும். ஏறியது மெதுவாகவே ஓட்டங்கள். பிறீ யலி,போய்கொட் நீடித்து நின்றனர் நீண்ட நேரம். 129 ஓட்டங்கள் இங்கிலாந்து முதலாவது சரிவை எதிர் கொண்டது. ஹோல்டிங் வெளியேற்றினார் பிறீயலியை. 130 பந்துகள் அவருக்கு தேவைப்பட்டது 64 ஓட்டங் களை அணிக்கு வழங்க. அஸ்திவாரம் ஆட்டம் கண்டதால் சரிந்தது இங்கிலாந்து. 105 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் போய்கொட் 57 ஓட்டங்கள். தொடங்கியது சரிவு. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது. இதுதான் இங்கிலாந்தின் நிலைமை. முன்வரிசை பந்துகளை அதிகம் தின்றுவிட்டதால் பின்வரிசைக்கு அவசரம். ஓட்டமோ அதிகம். இருப்பதோ கொஞ்சப் பந்துகள். நிலைமையின் விபரீதத்தால் அவசரம். இதனால் ஒற்றை இலக்கமும் பூச்சியமும் அதிகம். 183/3 ஒரு நிலை. இறுதியில் ப்ந்துகள் எஞ்சியும் துடுப்பெடுத்தாட யாருமில்லை. 51 ஓவர்களில் இங்கிலாந்தின் ஆட்டம் நிறைவு. 194 ஓட்டங்களே அவர்களால் திருப்பி அளிக்கப்பட்ட பதில்.

கார்னர் தன் கைவண்ணத்தால் பெற்றுக் கொண்டது 5 விக்கெட்டுக்கள். இரண்டாவது தடவையாகவும் கிளைவ் லொயிட் கையில் கிண்ணம். ஆனால் ஆட்ட நாயகன் விவிலியன் ரிச்சட்ஸ்.

## Picture of the day

உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011



இரண்டாவது உலகக் கிண்ணத்துடன் மேற்கிந்தியத் தீவு அணி வீரர்கள்

# இந்திய - தென்னாபிரிக்க அணிகள் பலமானவை

## - ரிக்கி பொண்டிங்

பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் எந்த அணி கோப்பையை வெல்ல சாதகமான அணி என்பதைக் கூறுவதைத் தவிர்த்த ஆவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் பலமானவை என்று அறுதியிட்டு கூறியுள்ளார்.

எந்த அணி வெல்லும் என்று கூறமுடியாது. ஏனெனில் நிறைய அணிகளுக்கு கோப்பையை வெல்லும் வாய்ப்புகள் உள்ளது. இருப்பினும் இந்தியாவும் தென்னாபிரிக்காவும் பலமாக உள்ளன. இந்த அணிகள் தான் சர்வதேச கிரிக்கெட்டின் தற்போதைய ஆதிக்க அணிகள்.

ஐ.சி.சி. கிரிக்கெட் தொடர்களில் பாகிஸ்தானும், நியூஸிலாந்தும் நன்றாக செயல்பட்டுள்ளன. இலங்கை இந்த ஆட்டக்களங்களில் சிறந்த அணி.

பொதுவாக உலகக் கோப்பைக்கு முற்பட்ட போட்டிகளின் வெற்றி தோல்விகள் உலகக் கோப்பை போட்டிகளில் எந்த அணி மீதும் தாக்கம் செலுத்தாது. 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிகளுக்கு முன் கொமன் வெல்த் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் தோற்றோம், நியூஸீலாந்து அணிக்கு எதிராகவும் தோற்றோம், ஆனால் உலகக் கோப்பையை வென்றோம், எனவே முற்பட்ட போட்டிகள் எந்த விதத்திலும் தாக்கம் செலுத்தப்போவதில்லை.

சிறப்பாக விளையாடி வரும் இங்கிலாந்து அணியை 6- 1 என்ற கணக்கில் ஒருநாள் தொடரில் வெற்றி பெற்றோம் இதனால் அணிக்கு தன்னம்பிக்கை பிறந்திருக்கிறது.

அனைவரும் நன்றாக விளையாட வேண்டித்தான் களமிறங்குகிறார்கள். ஆனால் சச்சின் இந்த உலகக் கோப்பையை இந்தியா வெல்வதில் அதிக முனைப்புக் காட்டுவார்.

இது போன்ற ஒரு பெரிய தொடரில் மைக் ஹஸ்ஸியின் அனுபவமும், ஆட்டமும் எங்கள் அணிக்கு இல்லாமல் போனது துரதிர்ஷ்டமே, அதேபோல் நதன் ஹாரிட்ஸ் விளையாட முடியாமல் போனதும் துரதிர்ஷ்டம்.

ஆனால் பிரெட் லீ மீண்டும் அணியில் இருப்பது நம்பிக்கை அளிக்கிறது. லீ, ஜான்சன், பொலிஞ்சர், ஹேஸ்டிங்ஸ், ஷோன் டெய்ட் ஆகியோருடன் நாங்கள் வேகப் பந்து வீச்சில் பலமாகவே உள்ளோம் என்றார் பொன்டிங்.

(15)



# உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011



குமார் சங்கக்கார
அணித் தலைவர்/
விக்கெட் காப்பாளர்
வயது : 33
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : வலது கை ஓவ் பிறேக்



தில்கார பெர்னாண்டோ
பந்துவீச்சாளர்
வயது : 31
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை மித வேகப் பந்துவீச்சு



நுவான் குலசேகரா
பந்துவீச்சாளர்
வயது : 28
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலது கை மிதவேகப் பந்துவீச்சு



றங்கண கேரத்
பந்துவீச்சு
வயது : 32
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : இடது கை சுழற் பந்துவீச்சு



உப்புள் தரங்க
துடுப்பாட்டம்
வயது : 25
துடுப்பாட்டம் : இடதுகை



மஹேல ஜெயவர்த்தன
உதவி அணித் தலைவர்
துடுப்பாட்டம்
வயது : 33
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை மெது வேகப்பந்துவீச்சு



அஜந்த மெண்டிஸ்
பந்துவீச்சு
வயது : 25
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலது கை ஓவ் பிறேக்



திலகரட்ண டில்ஷான்
சலகதுறை ஆட்டக்காரர்
வயது : 34
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை ஓவ் பிறேக்



திலான் சமரவீர
துடுப்பாட்டம்
வயது : 34
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலது கை ஓவ் பிறேக்



அஞ்சலோ மத்தியூஸ்
சகலதுறை ஆட்டக்காரர்
வயது : 23
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலது கை மிதவேகப் பந்துவீச்சு



லசித் மலிங்க
பந்துவீச்சாளர்
வயது : 27
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை வேகப் பந்துவீச்சு



சாமரசில்வா
துடுப்பாட்டம்
வயது : 31
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : லெக் பிறேக்



முத்தையா முரளிதரன்
பந்துவீச்சு
வயது : 38
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலது கை ஓவ் பிறேக்



கப்புகெதர
துடுப்பாட்டம்
வயது : 23
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலது கை மெது வேகப்பந்துவீச்சு



திஸர பெரேரா
சகலதுறை ஆட்டக்காரர்
வயது : 21
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : வலதுகை மிதவேகப் பந்துவீச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண வாசகர் கண



## உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

# வாழ்வா சாவா?

ஸ்ரீகாந் தலைமையிலான தெரிவாளர்கள் மீது தொடர்ச்சியாகவே கண்டனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அதாவது உலகக் கிண்ண போட்டிகளை தவிர்த்து ஏனைய போட்டிகளின் போது தமிழக வீரர்கள் உள்வாங்கப்படுவதும் ரொபின் உத்தப்பா, மனிஷ் பாண்டே, பார்த்திவ் பட்டேல், திவாரி போன்ற சிறந்த வீரர்கள் ஓரம் கட்டப்படுவதும் தொடர்ச்சியாகவே நடைபெறுகிறது.

இன்னும் விரல் விட்டு எண்ணக் கூடிய நாள்களில் உலகக் கிண்ணப் போட்டிகள் தொடங்க இருக்கின்றன. இந்தியாவின் மீதான எதிர்பார்ப்பு கிரிக்கெட் ரசிகர்களின் மத்தியில் எழத் தொடங்கியுள்ளது. 1983ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளின் தொடர் வெற்றியை தடுத்து கிண்ணத்தை வென்ற இந்தியா இன்று ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு முற்றுப் புள்ளி வைத்து, கிண்ணத்தை தனதாக்கும் என்ற நம்பிக்கை ரசிகர்கள் மத்தியில் துளிர் விட ஆரம்பித்துள்ளது. இம்முறை ஆஸ்திரேலியாவை விட இந்தியா சற்று அதிக பலத்துடன் காணப்படுகிறது. அதிலும் எதிர் அணிகளை தங்கள் குகைக்குள் சந்திப்பதனால் இந்தியா எதிர் அணிகளுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவின் கடந்த இரண்டு வருடப் பெறுபேறுகள் மிக சிறப்பாகவே அமைந்துள்ளன. கேர்ஸ்டனின் வழிநடத்தலில் டோனி தலைமையில் அனுபவம், இளமை, ஆக்ரோஷம் கலந்த சிறப்பான அணியாக வலம் வருகிறது. இந்த வருட ஆரம்பத்தில் தென்னாபிரிக்கா பயணத்தின்போது பெரிதாக சாதிக்காவிட்டாலும் அந்த அணியை கடுமையாக மிரட்டி இருந்தது.

ஆரம்பத்தில் சேவாக் சச்சின் எனத் தொடங்கும் 'run machine' யூசுப் பதான் வரை நீள்கிறது. எந்த ஒரு நேரத்திலும் போட்டியின் தன்மையை மாற்றக்கூடிய சேவாக் ஒரு நாள் போட்டிகளில் சிறப்பான ஆட்டப்போக்கு தொடர்ச்சியான சிறந்த திறனும் இந்தியாவின் ஓட்டக் குவிப்பை நிச்சயமாக அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதே போலத்தான் சச்சினும் சேவாக்கை விட எதிர் அணிகளுக்கு நிச்சயமாக நெருக்கடி கொடுப்பார். அதைத் தொடர்ந்து கம்பீர், ஹோலி, டோனி, ரெய்னா, பதான் என நீண்டு செல்லும் பலமான அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசை அதிலும் தென்னாபிரிக்காவின் வேகங்களை திக்குமுக்காடச் செய்த பதான் தொடர்ந்தும் அவதாரம் எடுப்பார் என நம்பலாம். அதே போல டோனியும் சளைத்தவர் இல்லை. தனது ஆரம்பகால அதிரடிகளைத் தற்போது வெகுவாக குறைந்துக் கொண்டாலும் பந்துக்கு ஓட்டம் எடுப்பதிலும் விக்கெட்டுக்களுக்கு இடையில் ஓடி ஓட்டம் எடுப்பதிலும் அவருக்கு இணை அவரே. அதைத் தொடர்ந்து ஹர்பஜன், சஹீர், முனாப் எனத் தொடரும் பந்து வீச்சாளர்கள் குறிப்பாக ஹர்பஜன் சிங்கின் துடுப்பாட்டம் இந்தியாவுக்கு அதிக பலம் சேர்க்கும். இந்தப் 11பேருமே முக்கியமான போட்டிகளில் களமிறங்க இருக்கிறார்கள்.

யுவராஜ் சிங்கின் நிலைமை கேள்விக் குறி தான். விராட் ஹோலியின் அண்மைய பெறுபேறுகள் பாராட்டும் படியே அமைந்துள்ளன. இந்த வருட ஆரம்பத்தில் இருந்த அவருடைய இடம் கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. அத்துடன் களத் தடுப்பும் சிறப்பாகவே அமைந்துள்ளதனால் டோனிக்கு நம்பிக்கைக்கு உரிய ஒருவராக மாறியிருக்கிறார். ஆனால் யுவராஜ் சிங் இன்னமும் பெரியதாக சாதித்துக்காட்டவில்லை. அத்துடன் 3ஆம் அல்லது 4ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக யுவராஜ் சிங் பொருத்தமானவர் கிடையாது. ஆனால் விராட் ஹோலி அவ்வாறு இல்லை. யூசுப் பதானின் வரவு 5ஆவது பந்து வீச்சாளர் நிலை நிரப்புவதால் நிச்சயமாக யுவராஜ் சிங் முதல் போட்டியில் ஆடுவது சந்தேகமே அந்த நிலைமையில் தான் நெஹ்ரா, ஹர்பஜன் சிங், சகீர் கான் இடங்கள் நிச்சயம். முனாப் படேல் இடமும் கிட்டத்தட்ட உறுதி. அடுத்தவர் யார் என்ற கேள்வி எழுகிறது. 4 பந்து வீச்சாளர்கள் 5துடுப்பாட்ட வீரர்கள் ஒரு விக்கெட் காப்பாளர் ஒரு சகல துறை வீரர் என்று ஒரு பலமான ஒரு அணியாக வலம்வர அஸ்வினும் ஒரு காரணம். ஒரு நாள் போட்டிகளில் பெரிதாக அனுபவம் இல்லாவிட்டாலும் இந்திய மைதானங்களில் ஓர் கரை கண்டவர் இவரும் டோனிக்கு நம்பிக்கைக்கு உரிய ஒருவராக மாறியிருக்கிறார்.

சிலவேளைகளில் இந்தியா இரண்டு சுழல் பந்து வீச்சாளர்கள் உடன் களமிறங்கலாம். அப்போது அஸ்வினுக்கு வாய்ப்புக் கிடைக்கலாம். ஆனால் அது பெரும்பாலும் சாத்தியப்படாத ஒன்று. சாவுலாவின் தெரிவு பலராலும் விசனப்படுத்தப்பட்டது. அது உண்மையில் ஏற்கப்பட வேண்டிய விடயம் தான். எவருமே எதிர்பார்க்காத வகையில் இந்தத் தெரிவு அமைந்துள்ளது. இவர்களுக்கு பதிலாக இடதுகை மூலமான சுழல் பந்து வீச்சாளர்களான ஜடேஜா அல்லது ஓஜாவைத் தேர்வு செய்திருக்கலாம். இவர்கள் இருவரும் கொஞ்சம் அனுபவம் உடையவர்கள்.

சாவுலாவின் தெரிவு இனம் புரியாத புதிராக காணப்படுகிறது. மொத்தத்தில் ஸ்ரீகாந் தலைமையிலான தெரிவாளர்கள் இயன்ற அளவில் ஓர் மிகச் சிறந்த அணியை தேர்வு செய்துள்ளனர். இனி கதவடைப்பு செய்யப்பட்டவர்களின் வரிசையை எடுத்துக் கொண்டால் முதலாமவர் ரோஹித் சர்மா. இவர் சேர்க்கப்படாதது ஆமோதிக்க வேண்டிய விடயம் தான். இவர் தனக்குக் கிடைத்த பெரும்பாலான வாய்ப்புகளை தவறவிட்டிருந்தார். அத்துடன் இவரும் சேர்க்கப்பட்டால் டோனியும் சேர்த்து 8 தொழில் முறை துடுப்பாட்ட வீரார்கள் என்ற எண்ணிக்கைக்கு வழி கோலும். அது நிச்சயமாக அணியின் சம நிலையை பாதிக்கும். என்னைப் பொறுத்தமட்டில் 6 முழுநேர பந்து வீச்சாளர்கள் தேவை என்ற காரணத்தில்தான் சாவுலா சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீகாந் தலைமையிலான தெரிவாளர்கள் மீது தொடர்ச்சியாகவே கண்டனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அதாவது உலகக் கிண்ண போட்டிகளை தவிர்த்து ஏனைய போட்டிகளின்போது தமிழக வீரர்கள் உள்வாங்கப்படுவதும் ரொபின் உத்தப்பா, மனிஷ் பாண்டே, பார்த்திவ்பட்டேல், திவாரி போன்ற சிறந்த வீரர்கள் ஓரம் கட்டப்படுவதும் தொடர்ச்சியாகவே நடைபெறுகிறது. அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாகவே மேலதிக விக்கெட்காப்பாளர் தேர்வு செய்யப்படவில்லை. அவ்வாறு ஒருவரைத் தேர்வு செய்வதானால் அது தினேஷ் கார்த்திக் ஆக நிச்சயம் இருக்கும். ஆகவே தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையாவதைத் தடுக்கவே ஸ்ரீகாந் தலைமையிலான தெரிவாளர்கள் மேலதிக விக்கெட் காப்பாளர் தேர்வு குறித்து வாய் திறக்கவில்லை.

இவ்வாறு என்னதான் பலமான அணியாக களமிறங்கினாலும் ஆங்காங்கே ஒரு சில சிக்கல்களும் இருக்கத் தான் செய்கின்றன. இந்த வரிசையில் முதலாவதாக இந்தியாவின் முக்கியமான 'run machine' இரண்டும் இன்னமும் உபாதைகளில் இருந்து விடுபடவில்லை. அதேபோல டோனியின் இந்த வருட பெறுபேறுகள் திருப்தியாக அமையவில்லை. இறுதி 5 போட்டிகளில் ஒன்றில் கூட 50 ஓட்டங்களை தாண்ட வில்லை. அத்துடன் இன்னமும் இறுதி 11 பேர் உறுதியாகவில்லை. நாள்கள் நகர நகர போட்டிகளின் கடினத் தன்மை வெகுவாக அதிகரிக்கும். அப்போது அடிக்கடி வீரர்களை மாற்றுவது ஓர் ஆரோக்கியமான விடயம் அல்ல. அத்துடன் அணியின் களத்தடுப்பு பெரிதாக பேசும் அளவில் இல்லை. அதே போல் தொடர்ச்சியாக 45நாள்கள் நடைபெறுவதால் வீரர்களின் உபாதைகள் நிச்சயமாக செல்வாக்கு செலுத்தும். அப்போது மாற்று வீரர்கள் குறித்து கேள்விகள் எழும்? மொத்தத்தில் சேவாக்கின் அதிரடியும் ஹர்பஜன், சகீரின் பந்து வீச்சும் கைகொடுக்கும் பட்சத்தில் இந்தியாவுக்கான வாய்ப்புக்கள் தென்படலாம். மாறாக 2007 போல் மண்கவ்வினால் ரசிகர்களின் அதீத அன்புத் தொல்லைக்கு மீண்டும் ஆளாக வேண்டிவரலாம்.

எது எவ்வாறாக இருந்த போதிலும் இந்தியாவின் ஒரே அசைக்க முடியாத பலம் டோனியின் 'கூல்' அது தான் விடைதரவேண்டும். ★ ★ ★

**பாலசுப்பிரமணியம் சாரங்கன்**
**42, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Study in UK
Study in AUSTRALIA
Study in NEW ZELAND
Study in MALAYSIA
Study in SINGAPORE

One Stop Destination for Education Information

iCS 107 B -1/1, Galle Road, Colombo-06.
(Opposite to Colombo plaza NOLIMIT.)
தொடர்புகளுக்கு 011 2553520 077 3013060


# புங்குடுதீவில் இன்று பொதுமக்களுக்கான இலவச சேவைகள்

யாழ்ப்பாணம், பெப். 13

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சேவைத்திட்டம் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் பொது மருத்துவ பரிசோதனையும் மருத்துவ வழங்கலும், விழிப்புணர்வும், நீரிழிவு இரத்தப்பரிசோதனையும், கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் அத்துடன் முதியோர் கௌரவிப்பு, குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கல் எனப் பல்வேறு சேவைத் திட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்கப் பட்டுள்ளது. (ஒ-9)


# STUDYING IN UK

World Class Education at an affordable cost



ADMISSIONS FOR MARCH/APRIL/JUNE 2011 INTAKES

NO WIN* NO FEE

IELTS is not mandatory*

OUR PARTNER COLLEGES IN PARTNERSHIP WITH

OUR PARTNER COLLEGES
- Greenwich School of Management London
- British Institute of Technology & E-commerce
- College of Technology London
- Guildhall College
- E College London
- City of London Academy
- Oxford College International
- 360GSP College
- SDS College London
- Scott's College London
- Nelson College London
- Winston College

Hotline: 077 3691913

For More Details
IES, 479-1/1, Galle Road, Colombo-06.
TP | 011 4378835 / 011 5766722 M | 0773691913,
@ | subitha@ies.lk, Web : www.ies.lk
LONDON OFFICE : 165B, HIGH STREET, EASTHAM, LONDON E6 1JB

* Terms and Condition Apply



## வீடு விற்பனைக்கு

திரேட்டர் வீதி, இணுவில் கிழக்கில் அமைதியான சூழலில் 4 பரப்புக்காணியுடன் கூடிய சகல வசதிகளும் நிறைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0773604712, 021 5672567



யாழ்.மண்ணில்... திண்டுக்கல் ஐ.லியோனியின்

## நகைச்சுவைப் பட்டிமன்றம்



17.02.2011
யாழ்.வீரசிங்கம் மண்டபம்
மாலை 3 மணி

அச்சுவேலி இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம்
மாலை 6.30 மணி

18.02.2011
வடமராட்சி நெல்லியடி
ம.மகா வித்தியாலயம்
மாலை. 5 மணி

ரிக்கெற் 200/-, 300/-, 500/-
ரிக்கெற் மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் கந்தசாமி சிவலிங்கம்

மண்ணில் 1951.11.16

விண்ணில் 2011.01.16



கடந்த 16.01.2011 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தசாமி சிவலிங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் எதிர்வரும் 15.02.2011 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அவரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திப்பதோடு அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி: திருப்பூர், மயிலிட்டி.
தற்போதைய முகவரி: வியாபாரி மூலை, பருத்தித்துறை.

(சி/576016)

பிள்ளைகள் - சி. ஆனந், சி.ஜெகன், சி. பகீரதன், சி. செந்தாளன்.


# 3½ வருட உத்தரவாதமான மாணவர் விசா

இன்று வெளிநாடு செல்வதில் பல தடைகள் இருந்தாலும் எதுவித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும் உடனடியாக செய்துகொள்ளக் கூடிய முறையில் அனைத்து வித செலவுகளையும் Visa கிடைத்த பின் செய்துகொள்ளக் கூடிய முறையில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனம் எங்கள் நிறுவனமாகும்.

1. எம்மால் குறைந்த செலவில் 3½ வருட Visa உத்தரவாதமாகப் பெற்றுத்தரப்படும்.
★ நீங்கள் எமைத் தொடர்புகொண்டு எம்மிடம் பதிவு செய்தபின் சட்டத்தரணியூடாக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு Visa பெறும் ஆவணங்கள் கையேற்கப்படும்.
★ College Fees, Sponsor Fees தூதரக Visa கட்டணம், தேவையான ஆவணங்களுக்குரிய கட்டணம், சேவைக் கட்டணம் (Consulting Fees) என்பன முற்றிலும் Ani international Education Consultant Service இனால் செலுத்தப்பட்டு, Visa உங்கள் கையில் கிடைத்த பின்னரே, நீங்கள் பணம் செலுத்தும் வசதி செய்து தரும் ஒரே நிறுவனம்.

எம் நிறுவனத்தின் நேரான வழிகாட்டலில் 3½ வருட Visa பெற்றுக்கொண்டவர்களின் விபரம்


இரத்தினம் பிரகாஷ்
அளவெட்டி
021 2240563, 0775937698


தியாகராஜா துஷ்யந்தன்
கரவெட்டி
021 4904909, 0772844325


செல்வரட்ணம் யுவராஜ்
சுன்னாகம்
021 3213839, 0750414749


தவலக்ஷ்மி தவபாலன்
நல்லூர்
021 2223147, 0777171470


செலின் அழகரட்ணம்
யாழ்ப்பாணம்
0772626813


சண்முகராஜா திலகரஞ்சன்
கோப்பாய்
021 3007151, 0779789278


மகேந்திரன் நிஷாலினி
(கிளிநொச்சி) திருகோணமலை
026 2224721, 0776281698

UK Boarder Agency இன் இறுக்கமான கட்டுப்பாடுகள் 30.04.2011 இல் அமுலாவதால் அதற்கு முன்னரே UK பயணமாவதற்குரிய அரிய சந்தர்ப்பம்!!
இன்றே தொடர்புகொள்ள....

15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த

## அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட் சர்விஸ்

269/3, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
Tel: 021 4921831 Tele/Fax: 021 4921832 Hot Line: 0772568122



## For Any Visa Purpose

GENUINE FINANCIAL SPONSORSHIP

From Trusted and Recognized Banks

UK / CANADA / AUSTRALIA
ITALY/ FRANCE / NEW ZEALAND

100% VISA GUARANTEED

Contact Now :
0727113777


## மரண அறிவித்தல்

### முத்துலிங்கம் ஜெயகிருஷ்ணா



யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் ஜெயகிருஷ்ணா (02.02.2011) புதன்கிழமை கொழும்பில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிமுத்து முத்துலிங்கம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வரும், சிவபாதசுந்தரம், ரவிச்சந்திரன், சிவாஜினி, பிரபாகரன், நமணன், ஜெயவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இரத்தினம்மா, காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, தையல்நாயகி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
திருமதி முத்துலிங்கம் (தாய் - கனடா)
0779072160, 0774011275

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# தேர்தல் கடமைகளின்போது காவல்துறையின் பக்கசார்பு

உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் நீதியாகவும் அமைதியான முறையிலும் நடத்தப்படவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி தேர்தல் ஆணையாளரைக் கேட்டிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக காவல் துறையினர் இரண்டு விதமான நடைமுறைகளைக் கையாள்கிறார்கள். அரசாங்க தரப்பினர் தொடர்பாக ஒருவித விதிமுறைகளையும் எதிர்க்கட்சியினர் விடயத்தில் இன்னொருவிதமான விதிமுறைகளையும் அவர்கள் கடைப்பிடிப்பதாக அக்கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய குற்றஞ்சாட்டி கண்டித்திருக்கிறார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது பொலிஸார் நடந்துகொள்ளும் முறைகள் குறித்து எப்பொழுதுமே குற்றச் சாட்டுக்களும் முறைப்பாடுகளும் எழுவது வழக்கம்.

ஆனால் கடந்த காலத்தில் அரச ஊடகங்களும், பொலிஸ் தரப்பினரும் மிகமோசமாக அரசு சார்ந்து செயற்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது.

அண்மையிலும் கூட சுதந்திரதினத்தன்று எதிர்க்கட்சியினர் கொழும்பில் நடத்திய மெழுகுவர்த்தி ஊர்வலப் போராட்டங்களின்போது குண்டர்கள் உள்புகுந்து தாக்குதல்களை நடத்தினார்கள். பொலிஸ்தரப்பினர் தாக்குதல்களை பார்த்துக்கொண்டே பேசாமல் இருந்தனர் என்று பலராலும் கூறப்பட்டது. குண்டர்கள் ஒருபுறம் தம்மை யார் என்று காட்டிக் கொள்ளாமல் முகமூடிகள் அணிந்துகொண்டு காட்டுமிராண்டித் தனமாக தாக்குதல் நடத்தியபோது பொலிஸாரும் ஈவிரக்கமின்றி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது குண்டாந்தடி பிரயோகம் செய்ததாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கேலிச்சித்திரம் வெளியிட்டிருந்தது.

கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் அரச சொத்துக்கள் மற்றும் ஊடகங்கள் அரச ஆதரவாளர்களால் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருப்பதை உறுதிசெய்யுமாறு தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தேர்தல் சட்டம் எவருக்கும் சாதகமாக இல்லை - அது எங்களுக்கும் சாதகமாக இல்லை. எனவேதான் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் சட்டத்துக்கு அமைவாக செயற்படும்படி கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை யாரும் குறை கூற இடமில்லை, தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சியானது ஆட்சி அதிகாரத்தில் இருந்தால் என்ன, எதிர்த் தரப்பில் இருந்தால் என்ன, சட்டத்தின் முன் அக்கட்சிக்குரிய வாய்ப்புகளும் வசதிகளும் மட்டுமல்ல பாதுகாப்பும் இருக்கவேண்டும். தேர்தல் சட்டங்களும் விதிகளும் இவைகளை உறுதிசெய்கின்றன. எனவே தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் மட்டுமல்ல சிற்றூழியர்களும் இதனை நன்கு விளங்கிக்கொண்டிருப்பது அவசியம். குறிப்பாக பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் தரப்பினர் இதில் முக்கியமாக சிறந்த பயிற்சி பெற்றிருப்பது அவசியம். முதலில் உயர் அதிகாரிகள் பக்க சார்பில்லாமல் நடந்து மற்றவர்களுக்கு உதாரணமாக இருப்பது அவசியம். தேர்தலில் சம்பந்தப் படுபவர்கள் தமக்கு வேண்டியவர்கள், தாம் விரும்பும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அரசியல் தலைவர்கள் என்பதெல்லாம் சட்டத்தின் முன் செல்லமாட்டா. ஆனால் நடப்பதென்ன? பெரும்பாலான அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு அஞ்சுகிறவர்களாக தம் கடமைகளில் சட்டப்படி நடக்க தயங்குகிறார்கள். காரணம் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சமே. அவ்வாறு நடந்துள்ள சம்பவங்களும் உண்டு.

இம் மாதிரியான நிலைமை ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் முதலில் அரசியல்வாதிகள் திருந்தவேண்டும். பொது சேவையாளர்கள் எல்லாமக்களுக்கும், கட்சிகளுக்கும், சமயங்களுக்கும் பொதுவானவர்கள். அவர்களுக்குரிய சட்டங்கள், விதிகளுக்கு அமைவாகவே செயற்படுவார்கள் - செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவேண்டும் - அவ்வாறு செய்யாதவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

ஆக, இந்த விதமான நிலைமையொன்று அதாவது அரச ஊழியர்கள் மட்டுமல்ல அரசியல்வாதிகளும் கூட அரச சாதனங்களை, ஊடகங்களை, சொத்துக்களை தமக்கு சாதகமாகப் பாவிப்பதில்லையென்று ஓர் உறுதிப்பாட்டை எடுத்துக்கொள்ள முடியுமானால் இந்த நாடு உலக அதிசய நாடுகளில் ஒன்றாக மாறிவிடும் - ஜனநாயகம் என்பது உன்னதமானதொரு நிலைக்கு உயர்ந்து [illegible] அவ்வாறான ஒரு காலம் வருமா!

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இயன் மருத்துவரை நியமிக்குக

சாவகச்சேரி, பெப்.12

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இயன் மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினரை இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் கேட்டுள்ளனர்.

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற யுத்த வேளையில் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட பலர் இயன் மருத்துவ சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு செய்கின்றனர். வவுனியா, அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு இயன் மருத்துவ சிகிச்சைக்காக செல்லத் தயங்கும் மக்கள் யாழ்ப்பாணத்திற்கே வருகை தருகின்றனர்.

ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள சாவகச்சேரி வைத்தியசாலையில் இயன் மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கும் பட்சத்தில் வன்னிப் பிரதேச மக்களுடன் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி பிரதேச மக்களும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வாய்ப்பாக இருக்கும். அத்துடன் பிரயாண நேரங்களும் செலவுக்கும் குறைவு மெனவும் கருத்துத் தெரிவித்தனர். (த-207)

# 9 மாணவர்களுக்கு கௌரவம்

சாவகச்சேரி,பெப்.12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற ஒன்பது மாணவர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தனர்.

பரீட்சையில் வணிகப் பிரிவில் 3 ஏ பெறுபேறு பெற்ற கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கும் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவருக்கும் இந் நிகழ்வில் ஆரம்பிக்கப்பட்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவும் வழங்கப்பட்டன. கச்சாய் வினோபா முன்பள்ளி நிலையத்தின் அனுசரணையுடன் யாழ்.உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் தேசிய கணக்கியல் டிப்ளோமாப் பிரிவு மாணவர்களால் இந் நிதியம் லயன்ஸ் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி, மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவச்சலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இவற்றை மாணவர்களுக்கு வழங்கினர்.

மேலும் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களுக்கு இந் நிகழ்வில் சப்பாத்துகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட உதவிச் செயலாளர், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மாவட்ட ஆளுநர் நேற்று முன்தினம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட வேளையில் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# பஸ் பயண முகவர்களினால் பயணிகள் பாடு பெரும் சிரமம்

பளை,பெப்.13

யாழ்ப்பாணத்தில் உள்ள பயண முகவர் மூலம் கொழும்புக்கு இரு வழிக் கட்டணம் செலுத்துவோர் கொழும்பிலிருந்து வரும் போது பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பயண முகவரால் ஏற்பாடு செய்யப்படும் பஸ்ஸில் ஏறும் பயணிகளை மாலை 6மணி தொடக்கம் இரவு 9 மணிவரை கொழும்பின் பல பகுதிகளுக்கு சுற்றி வந்து பயணிகள் சேராததால் மற்றொரு பஸ்ஸில் ஏறுமாறு தெரிவிக்கப்படுகிறது. அடுத்த பஸ்ஸில் போதிய பயணிகள் போதாது என்றால் வேறொரு பஸ்ஸில் ஏறுமாறு கூறப்படுகிறது.

முதல் இரு பஸ்களிலும் முதல் பத்து இருக்கைகளுக்கு பதிவு செய்வோர் மூன்றாவது பஸ்ஸில் ஏறி அதே இருக்கையில் அமர்ந்தால் அந்த பஸ்ஸில் அந்த இருக்கைகளுக்குப் பதிவு செய்தவர்கள் இருக்கையை விட்டு எழும்புமாறு சண்டை பிடித்து எழுப்பி விடுகின்றனர். இதனால் பயணிகளிடையே மோதல் ஏற்படும் நிலை தோன்றுகின்றது. பயணமுகவர்கள் அங்கிருந்து சென்றுவிடுவதால் தீர்வுகாண முடியாமல் கடைசி இருக்கைகளில் இருக்க வேண்டிய நிலை சிலருக்கு ஏற்படுகின்றது.

பயண கட்டணத்துடன் பதிவுக்கட்டணத்தையும் அறவிடும் பயணமுகவர்கள் பயணிகளிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்காமல் மறைந்து விடுவது பயணிகளிடையே ஆத்திரத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு இருவர் கொடிகாமம் பொலிஸிடம்

தென்மராட்சி, பெப்.13

கொடிகாமம் பகுதியில் 15 வயது சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 42 வயது குடும்பஸ்தரும் அவருக்கு உதவிய 19 வயது இளைஞரும் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினையடுத்து வரணி, இடைக்குறிச்சியைச் சேர்ந்த குடும்பஸ்தரையும் அராலி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைஞரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த இருவரையும் கடந்த 10 ஆம் திகதி பொலிஸார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தச் சிறுமியிடம் உரிய விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

(த-207)

# பருத்தித்துறையில் தேர்தல் பிரசாரம்

வடமராட்சி, பெப்.13

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தமது பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளார்கள்.

கூட்டமைப்பு வேட்பாளர்களில் ஒருவரான சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் வேட்பாளர்கள் ஒன்றுகூடி வல்லிபுரக்கோயிலில் விசேட வழிபாடுகளை மேற்கொண்ட [illegible] நகர பகுதியில் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனவரி செலுத்தாமைக்குத் தண்டம் மார்ச் 31க்கு பின்னரே நியாயமானது

யாழ்ப்பாணம்,பெப்.13
இந்த வருட ஆரம்பத்தில் இருந்து வாகன உரிமையாளர்களிடம் வாகன வரி அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதற்கான தண்டம் அறவிடும் நடவடிக்கைகளை மார்ச் 31 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்வதே நியாயமானது.

இந்த விடயத்தை ஆளுநர் என்ற வகையில் தாங்களும் வட பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபரும் சாதகமாகப் பரிசீலித்துப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் துணைச்செயலாளர் சி.வி.கே.சிவஞானம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

வருட ஆரம்பத்திலிருந்து வாகன உரியையாளர்களிடம் வாகன வரி செலுத்திய அனுமதிப்பத்திரத்தைப் பொலிஸார் பரிசோதனை செய்வதனால் வாகன உரிமையாளர்களுக்கு அதிக அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

வாகன அனுமதிப்பத்திரம் பெறுக் கொள்ளாமைக்காகத் தண்டப் பண அறவீட்டுக்கும் இவர் கள் உள்ளாகின்றனர். இந்தக் கடமையை பொலிஸார் நிறை வேற்றுவதனை நாம் எதிர்க்கவில்லை.

எனினும் மக்களுக்கு வழமையான கால அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம். அதிகரித்த நெருக்குதல்களை இங்குள்ள பிரதேச செயலகங்கள் எதிர்கொள்வதை நாம் நிச்சயமாகப் புரிந்து கொள்கின்றோம்.

ஒவ்வொரு வருடத்தின் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் பெறப்படும் அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் மீதே பிரதேச செயலகங்கள் விறந்துக் கட்டணத்தை அறவிடுகின்றன.

மூன்று மாதகால அவகாசத்தைப் பிரதேச செயலகங்கள் வழங்குவது இதிலிருந்து தெளிவாகிறது.

எனவே பொலிஸார் தண்டனை நடவடிக்கைகளை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் அமுல் செய்வதே நியாயமானது.

இந்த விடயத்தை தாங்களும் வடபிராந்தியப் பொலிஸ் மா அதிபரும் சாதகமாக பரிசீலித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் வடமாகாணத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையே காணப்படும் இரண்டு வேறுபாடுகள் பற்றி இவ்விடயத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது எனக் கருதுகிறோம்.

மோட்டார் வாகன அனுமதிப் பத்திரத்தை முன்னைய வருட இறுதிப் பகுதியில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்தே அனுமதிப்பத்திரத்தை பெறலாம்.

ஏனைய மாகாணங்களில் பெறப்படும் அனுமதிப் பத்திரங்கள் பன்னிரண்டு மாதங்களுக்கு வலுவானதாக இருக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெறப்படும் அனுமதிப்பத்திரங்கள் அந்த வருடத்துக்கு மட்டும் செல்லுபடியானதாக உள்ளது.

இந்த முரண்பாடுகளை நீக்குவதற்கு உரிய கவனம் செலுத்த வேண்டும் எனக் கோருகிறோம் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

## பருத்தித்துறை - யாழ்.வீதியில் பாதுகாப்புக் கடவை அமைப்பு

வடமராட்சி,பெப்.13
வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதியைக் கடப்பதற்கான மஞ்சள் கோடுகள் யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் வரையப்பட்டு வருகின்றன.

கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடியில் பாடசாலையைக் கடப்பதற்கு வசதியாக மஞ்சள் கோடு வரையப்பட்டுள்ளன. தற்போது கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக மஞ்சள் கோடுகள் வரையப்படுகின்றன.

தொடர்ந்தும் மக்கள் சென்று வரும் அரச அலுவலகங்கள், முக்கிய சந்திகள் முன்பாகவும் வீதியைக் கடப்பதற்கான மஞ்சள் கோடுகள் வரையப்படவுள்ளன. (த-236)

## என்றும் கல்விக்காக...



உதவக் காத்திருப்பு: லண்டன் அன்னை பார்வதி அமைப்பு வட இலங்கைச் சர்வோதயத்தின் அனுசரணையுடன் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் பயிலும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்றை வழங்கியது. சர்வோதயத்தின் பொறுப்பாளர் செல்வி க.புஸ்பமணி சைக்கிளை வழங்குகிறார். (த-7)

## நெல்லியடிக் கடைகளில் பொலிஸார் திடீர் சோதனை

நெல்லியடி,பெப்.13
நெல்லியடி நகர்ப் பகுதியில் உள்ள கடைகளில் நெல்லியடிப் பொலிஸார் திடீர் சோதனைகளை நடத்தினார்கள். இந்தச் சோதனையின்போது நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடாத கடைகளில் உரிமையாளர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அவர்களுக்குத் தலா 1000 ரூபாவை குற்றப்பணமாக அறவிட்ட நீதிமன்றம் சம்பந்தப்பட்ட நிறுத்தல் அளவைக் கருவிகளைப் பிரதேசசபைகள் மூலம் முத்திரையிடுமாறும் உத்தரவிட்டது. (த-319)

# தாழ்ந்த வயல்களில் வெள்ளம் நெல் அறுவடையில் தாமதம்

யாழ்ப்பாணம்,பெப்.13
குடாநாட்டின் தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளமையால் அந்தப் பகுதிகளில் நெல் அறுவடை தாமதமாவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை பெரும்போக நெற்செய்கையில் பெருமளவான விவசாயிகள் ஈடுபட்டனர். தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல்களிலும் நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டது.

எனினும் கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளம் தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல்களில் தேங்கியுள்ளது.

தேங்கியுள்ள வெள்ளம் இதுவரை வற்றாமையால் அந்த வயல்களில் உள்ள நெல்லை அறுவடை செய்யமுடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் வெள்ளத்தையும்பாராமல் விவசாயிகள் நெல்லை அறுவடை செய்து அவற்றை வேறு இடங்களில் வெயிலில் உலரவிடுகின்றனர்.

இதேவேளை-
மேட்டு நிலப் பகுதியில் உள்ள வயல்களில் நெல் அறுவடை இப்போது மும்முரமாக இடம் பெற்று வருகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்திலும் நெல் அறுவடை மிக மும்முரமாக நடைபெற்று வருகின்றது. வல்லை, கப்புது, குடத்தனை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடந்த ஒருவார காலமாக நெல் அறுவடை செய்யப்படுகின்றது.

கடந்த காலங்களில் பெய்த பெருமழையினால் நெல் வயல்களில் வெள்ளம் தேங்கி நின்றதால் அறுவடை தாமதமடைந்தது. சில இடங்களில் வெயில் எறித்து வெள்ளம் வடிந்து காய்ந்ததைத் தொடர்ந்து அறுவடை வேகமாக இடம் பெறுகின்றது. காரைநகர் பிரதேச வயல்களிலும் நெல் அறுவடை தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. எனினும் நெல் அறுவடை செய்தவற்கான கூலியாள்கள் பற்றாக் குறையினால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வயல் நிலங்களில் உள்ள நீர் வற்றாமை, கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை, வேலையாள்களின் அதிகரித்த கூலி என்பவற்றினால் காரைநகர் பிரதேச விவசாயிகள் பலத்த சிரமங்களின் மத்தியிலேயே அறுவடையை மேற்கொள்கின்றனர். (த-26,236,250)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மலசலகூடங்கள் அமைப்பு

தென்மராட்சி, பெப்.13
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கென இரண்டு மலசலகூடங்கள் வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் மலசலகூடம் இல்லாமல் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கடந்த வாரம் உதயனில் செய்தி பிரசுரிக் கப்பட்டிருந்தது.

இதனையடுத்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திசாலைக்கு வருகைதந்து செய்து பார்வையிட்டு நோயாளர்களுடன் கலந்துரையாடிச் சென்றார்.

பின்னர் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மலசலகூடம் அமைப்பதற்கான நிதி யின்மூலம் உடனடியாக மேற்கொண்டதன் பயனாக மலசலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-207)

## காரைநகர் வங்கியில் ஏ.ரி.எம். வசதி

காரைநகர்,பெப்.13
காரைநகர் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் ஏ.ரி.எம் இயந்திரம் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

வங்கி முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரச அதிபர் சி.த.ஜெயசீலன் கலந்துகொள்ள உள்ளார். (த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்து சேர்ந்தது வடதாரகை



நேற்று குறிகாட்டுவான் துறைமுகத்தை வந்தடைந்த வடதாரகை II இன் தோற்றம் இது. படகினுள்ளே பயணிகள் சிரமமின்றி அமரக்கூடிய வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன இருக்கைகள்.

நெடுந்தீவு,பெப்.13

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே சேவையில் ஈடுபடுவதற்காகக் கட்டப்பட்ட புதிய படகான 'வடதாரகை II' நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குக் குறிகாட்டுவான் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தப் படகு கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் இருந்து கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு புறப்பட்டு திருகோணமலை ஊடாக குறிகாட்டுவான் துறைமுகத்தை வந் தடைந்தது.

இந்தப் படகு நாளை திங்கட்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படும் என படகை எடுத்து வந்த இலங்கைக் கடற்படை ஓட்டிகளான குணசிங்க, நவரட்ண ஆகியோர் தெரிவித்தனர்.

படகில் தண்ணீர் வசதிகள் மலசல கூட வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன் 100 பயணிகளுக்கு மட்டும் என அறிவித்தலும் போடப்பட்டுள்ளது.

படகின் கீழ்த் தட்டில் அதிக இருக்கைகள் போடப்பட்டுள்ளதுடன் மேல் தட்டில் குறைந்த அளவிலான இருக்கைகளும் உள்ளன.

படகின் ஒரு புறத்தில் பயணிகள் கூடுதலாக இருக்கக் கூடாதெனவும் படகு சமாந்தரமாக இருக்கக் கூடியதாக பயணிகள் இருக்க வேண்டும் எனவும் முக்கிய அறிவித்தலும் அதில் இடப்பட்டுள்ளது.

இந்தப் படகு நல்லமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பராமரிப்புக்கள் உரிய முறையில் இடம் பெற வேண்டும் எனவும் படகை ஓட்டி வந்த கடற்படையைச் சேர்ந்த குணசிங்க தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களும் படகைப் பார்வையிட்டனர்.

திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் படகு கையளிக்கப்படினும், சேவை ஆரம்பமாவது குறித்த முடிவு அமைச்சர்களின் அறிவிப்பிலேயே தங்கியுள்ளதாகவும் தெரிகின்றது. (த-111)

## இந்தியத் தூதரக அதிகாரியுடன் மீனவர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிக்கும், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் துணைத் தூதரகத்தில் இடம் பெற்றது.

தூதரகத்தின் அதிகாரி எஸ். மகாலிங்கம், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்திய மீனவர்களால் வட பகுதிக் கடல் வளம் அழிந்து செல்கிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு இந்திய-வடபகுதி மீனவர்களிடையே சந்திப்பு ஒன்றை ஏற்படுத்திக் கலந்துரையாடுவதற்கான வசதி செய்துதர முடியும் என இந்தியத் தூதரக அதிகாரி அங்கு தெரிவித்துள்ளார்.(த-14)

## சுதேச மருத்துவத் திணைக்களம் ஆடியபாதம் வீதியில் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,பெப்.13

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் யாழ்ப்பாணத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் திருகோணமலை வரோதய நகரில் அமைந்துள்ள விவசாயக் கட்டடத் தொகுதியில் இயங்கி வந்த இந்தத் திணைக்களம் தற்போது 103/1, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் இயங்கி வருவதாகச் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் வடமாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

இதுவரை திருகோணமலையில் இயங்கி வந்த வடமாகாண சபையின் அனைத்துத் திணைக்களங்களையும் யாழ்ப்பாணத்துக்கு நகர்த்தும் திட்டத்தின் ஓர் அம்சமாகச் சுதேச மருத்துவத் திணைக்களமும் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## இராச வீதி குடியிருப்பாளருக்கு கேபிள் தொலைபேசி இணைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

கோப்பாய் இராச வீதியில் குடியிருப்பவர்களுக்கு விரைவில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கேபிள் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

இந்த இணைப்புகளை வழங்குவதற்கான முன்னேற்பாடாக தொலைபேசிக் கம்பங்கள் நடும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

கோப்பாயில் உள்ள தொலைபேசிப் பரிவர்த்தனை அலகின் ஊடாக விரைவில் இந்தப் பகுதிக்கான கேபிள் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தற்போது குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் கேபிள் தொலைபேசி இணைப்பை விஸ்தரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## மிதிவெடி விழிப்புணர்வு

'சொண்ட்' நிறுவனத்தின் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டத்தின் ஊடாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு மிதிவெடி அபாயம் பற்றி விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கும் சிறுவர்களுக்கும் மிதிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் மேடைநாடகம் இளவாலை வடக்கு சேர். பொன் கனகசபை வித்தியாசாலையில் அண்மையில் அரங்கேற்றப்பட்டது. இதில் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (த-311)

## பொருள்களை ஏற்றி இறக்க நேர நடைமுறை

நெல்லியடி,பெப்.13

வடமராட்சிப் பிரதேசத்தில் கடைகளுக்கு முன்னால் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுவரும் வாகனங்கள் இரவு 7.00 மணி தொடக்கம் காலை 7,00 மணிவரையே தமது வாகனங்களில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வைத்து மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு-

பிரதான வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டுப் பலகைகளை நிறுவுதல், அரச அலுவலகங்கள், பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்கள், வடமராட்சியில் உள்ள அனைத்துப் பாடசாலைகள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு முன்னால் பாதசாரிக் கடவைகளை நிறுவுதல்.

பொதுமக்கள் கூடும் இடங்களில் வீதிப்போக்குவரத்துப் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்தல். வாகனத் தரிப்பிட அறிவுறுத்தல் பலகைகளை நிறுவுதல்.

இந்தக் கூட்டத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திஸ்ஸகங்கார, கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசச் சபைசெயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களங்கள் ஆகியவற்றின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-319)

## காரைநகர் கலாசார மண்டபம் அமைக்க காணி கொள்வனவு

காரைநகர்,பெப்.13

காரைநகர் பிரதேசத்தில் கலாசார மண்படம் அமைப்பதற்காகக் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் காணி கொள்வனவு செய்யப்பட்டு காரைநகர் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் க. சோமசேகரம் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்தில் கலாசார மண்டபம் அமைப்பதற்கான அனுமதியை கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய போதிலும் கட்டடம் அமைப்பதற்கான காணி இன்மையால் அதனை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு காரைநகர் அபிவிருத்திச்சபை காரைநகர் பிரதேச மக்களிடம் நிதி சேகரித்து நன்கு லட்சம் ரூபா செலவில் காரைநகர் பிரதேச செயலகத்துக்கு அண்மையில் உள்ள நான்கு பரப்புக் காணியை கொள்வனவு செய்து வழங்கி உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-250)

## படைமுகாம் அகற்றப்பட்டது

தென்மராட்சி,பெப்.13

கடந்த 1996 ஆம்ஆண்டு தொடக்கம் மீசாலை புத்தூர் சந்தியில் அகற்றப்பட்டுள்ளது.

கடந்த வாரம்அந்தப் பகுதியில் படையினர் தாம் தங்கியிருந்த வீடுகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளித்து விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## தெற்கு நோக்கி சாரணர் சைக்கிள் சுற்றுலா

தென்மராட்சி,பெப்.13

இலங்கை சாரணர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடக்கிலிருந்து தெற்கு வரையிலான சைக்கிள் சுற்றுலா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

வடக்கு பருத்திமுனையிலிருந்து (பருத்தித்துறை) ஆரம்பித்து எட்டு நாள்கள் பயணிக்கும் சைக்கிள் சுற்றுலா தெற்கில் காலி தேவேந்திரமுனையை சென்றடையும்.

இலங்கையின் அனைத்துச் சாரணர் மாவட்டங்களின் சாரணர்கள், திரிசாரணர்கள் 100 பேரின் பங்களிப்புடன் சைக்கிள் சுற்றுலா 662 கிலோ மீற்றருக்குப் பயணிக்கவுள்ளது.

இலங்கை சாரணர் சங்கத்தின் ஒருங்கமைப்பு ஆணையாளர் பிரபால் குலரத்ன தலைமையில் இந்தச் சைக்கிள் சுற்றுலா இடம் பெறும். ஒவ்வொரு சாரணர் மாவட்டத்திலிருந்தும் [illegible] சாரணர்கள் அல்லது திரிசாரணர்கள் வீதம் இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணம் சென்று, அங்கிருந்து நாளை திங்கட்கிழமை புறப்பட்டு பளை, கிளிநொச்சியில் தங்கி நாளை மறுதினம் அங்கிருந்து புறப்பட்டு மாங்குளம் ஊடாக- வவுனியாவுக்கும், 16 ஆம் திகதி அனுராதபுரம் சென்று பின்னர் தொடர்ச்சியாக 17 ஆம் திகதி தம்புள்ள, அளுவிகார ஊடாக 18 ஆம் திகதி கண்டி சென்று அங்கிருந்து கேகாலை சென்று 19 ஆம் திகதி நிட்டம்புவவை அடையும்.

பின்னர் களனி, கொழும்பு, மொரட்டுவ, பாணந்துறை களுத்துறையை அடையும். பின்னர் 20 ஆம் திகதி பேருவளையில் ஆரம்பமாகி அம்பலாங் கொடை, காலியை அடைந்து 21 ஆம் திகதி புறப்பட்டு வெலிகம, மாத்தறை சென்று அங்கிருந்து 22 ஆம் திகதி தேவேந்திர முனையைச் சென்றடையும். (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆவணங்கள் இல்லாமல் சிறாட்டிக்குள மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு,பெப்.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறாட்டிக்குளம் கிராமத்து மக்கள் சட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்றனர்.

இப்பகுதி மக்கள் சட்ட ஆவணங்களைப் பெறுவதற்கு மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனைக்கோ அல்லது, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கோ செல்லப் போக்குவரத்து வசதியின்மையால் சட்ட ஆவணங்களைப் பெறுவதில் பின்னடித்து வருவதாகவும் உடனடியாக சட்ட ஆவணங்களை வழங்கக் கூடிய வகையில் அரச நிறுவனங்களும் தொழிற்படாமையால் ஆவணங்களைப் பெறமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் 65 வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் சட்ட ஆவணங்கள் இன்றியே காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

போர் நடைபெற்ற காலத்தில் இப்பகுதி மக்களின் ஆவணங்கள் எல்லாம் அழிவடைந்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அரச அலுவலர்கள் தமது பகுதிக்கு வந்து புதிதாகப் பதிவு செய்து சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறும் அப்பகுதி மக்கள் மேலும் கோரிக்கை விடுக்கின்றனர். (6)

தானம்...



ஊக்குவிப்பு : சுயதொழிலை ஊக்குவிக்குமுகமாக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் வட்டக்கச்சியைச் சேர்ந்த குடும்பத்தலைவரை இழந்த திருமதி சாந்தாவுக்கு வழங்கிய ஒரு தொகுதிக் கோழிக்குஞ்சுகளை கிளிநொச்சி அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ரேணுகா கௌரிதிலகன் கையளிக்கிறார். (236)

# முல்லை வயல்களில் பாம்புகள் அறுவடை செய்யத் தயக்கம்

முல்லைத்தீவு,பெப்.13

முல்லை மாவட்டத்தில் உள்ள வயல் நிலங்களில் பாம்புகள் காணப்படுவதால் நெல் அறுவடை செய்யும் விவசாயிகள் பெரும் அச்சத்தினை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாகப் பெய்த மழை வெள்ளம் காரணமாக வயற்பாம்புகள் வயல்களுக்குள் இறங்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நெல் அறுவடையினை மேற்கொள்ளும் விவசாயிகள் கூலிக்கு ஆள்களைப் பிடித்து வேலை செய்வதில் சிரமம் ஏற்படுவதாகவும் கூலிச் செலவு கூடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வெள்ளம் சூழ்ந்து காணப்படும் வயல் நிலங்களில் பாம்புகளும் உள்ளதால் வயல் அறுவடையில் ஈடுபடும் விவசாயிகள் வயல் நிலங்களில் இறங்க முடியாமல் வெள்ளம் வடியும் மட்டும் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயல் நிலங்களில் உள்ள பாம்புகள் விசப் பாம்புகளாக இருக்குமோ என்ற அச்சத்தில் என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் தவிப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## முசலி பிரதேசத்துக்கு வன்னி எம்.பி பயணம்

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரிப்புக் கிராமத்தை அண்டிய பகுதிகளுக்கும், மருதமடு கிராமத்துக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அருட் தந்தையர்கள் உள்ளிட்ட குழுவினர் படகு மூலம் பயணம் ஒன்றினை கடந்த புதன்கிழமை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன் மருதமடு பலநோக்கு மண்டபத்தில் மக்களைச் சந்தித்ததுடன் இக்கிராம மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

# மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு வீதியோட்டப் போட்டி

கிளிநொச்சி,பெப்.13

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களிடையே வீதியோட்டப் போட்டி நடைபெற்றுள்ளது.

ஆண்-பெண் இருபாலருக்குமான வீதியோட்டப் போட்டி கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முழங்காவில் முருகன் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பமாகி நாச்சிக்குடா, குமுழமுனை ஊடாக மீண்டும் பாடசாலையைச் சென்றடைந்தது.

இப்போட்டியை இராணுவ அதிகாரி லெப்கேணல் லியன் கமகே ஆரம்பித்து வைத்தார் எனவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புப் படையினர், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல அரசாங்க அலுவலர்களின் விடுமுறை மாத இறுதிவரை ரத்து

கிளிநொச்சி,பெப்.13

நாட்டில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை வழங்கும் நோக்குடன் சகல அரச உத்தியோகத்தர்களுக்கான விடுமுறைகளை ரத்துச் செய்யக் கோரும் விசேட பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஒன்று கடந்த வாரம் அரச உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த நாள்களில் நாட்டின் பல பிரதேசங்களில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக குளங்கள் மற்றும் நீர்தேக்கங்கள் திறந்துவிடப்பட்டுள்ளதால் 12 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாலும் வீடுகள் பல அழிந்துள்ளதாலும் இம்மக்களுக்கு சேவை செய்யும் முகமாகவே விடுமுறையில் சென்ற அரச உத்தியோகத்தர்களின் விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச அலுவலர்கள் உரிய திணைக்களத்தின் தலைவரிடம் அனுமதியைப் பெற்று விடுமுறை பெறவேண்டும் எனவும் இடர் நிவாரணப் பணிக்கு அரச அலுவலரின் விடுமுறை தடையாக ஒருபோதும் அமையாதபோதே மிக முக்கியமான தேவைக்கு விடுமுறைக்கான அனுமதி வழங்க முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொதுச் சுற்றறிக்கையானது சகல அமைச்சினதும் திணைக்களங்களின் செயலாளர்களுக்கும் சகல திணைக்களத்தின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விதிப்பு 01.03.2011 வரை நடைமுறைப்படுத்தப் படவுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(501)

# பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பு

முல்லைத்தீவு, பெப்.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் பட்டதாரிகள் மனிதவள அமைப்பினால் அப்பகுதி மாணவர்கள் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதியினைப் பெறுவதற்கான வாய்ப்பினை இழந்த மாணவர்களின் நலன் கருதி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இந்தச் சேவையைச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கல்விச் செயற்பாட்டுடன் இணைந்து பட்டங்களைப் பெற ஆர்வமுள்ள மாணவர்களை தங்களது விருப்பு, பாடத் தெரிவு, பயிலும் மொழித்தேர்வு என்பன தொடர்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக இவ்வமைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு பட்டதாரிகள் மனிதவள அமைப்பின் தலைவர் ச.பார்த்தீபன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திணைக்களங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களும் இப்பட்டப் படிப்பினைத் தொடர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

முல்லைத்தீவு,பெப்.13

ஒட்டுசுட்டான் பிரதேச பெரியசாளம்பன், சின்னச்சாளம்பன் பகுதி விவசாயிகளின் வாழ்வாதார நிலைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் வசிக்கும் விவசாயிகள் அண்மையில் பெய்த மழை காரணமாக நெற்பயிர்ச் செய்கையில் பெரும் நட்டம் அடைந்துள்ளதால் வாழ்வு நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாழ்வான பகுதிகளைச் சேர்ந்த இவ் விவசாயிகளின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதுடன் எதுவித நிவாரணம் இன்றியும் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே இவ்விழப்பில் இருந்து மீள விவசாய உதவிகளையோ அல்லது வாழ்வாதார உதவிகளையோ செய்து தரும்படி தொண்டு நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (500)

## எப்போது விடிவு?...



புதிய பாதை : முல்லை மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையால் வாய்க்கால் ஒன்றில் அதிகமான வெள்ளம் பாய்ந்தோடுவதால் தென்னங்குற்றிகளை குறுக்கே போட்டு கடக்கின்றனர். (500)

## முல்லை மாவட்டத்தில் மணல், கற்கள் எடுப்பதில் சிரமம்

முல்லைத்தீவு,பெப்13

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட் டான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டு வேலைகளுக்கு மணல், கற்களை இலகுவாக பெறுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவ வேண்டும் எனக் கோருகின்றனர்.

போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டுத்திட்டம் மூலம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு கட்டப்படும் வீடுகளுக்கான மணல், கற்களை எடுப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இக்கட்டட வேலைக்கு இலகுவான முறையில் பொருள்களை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (500)

# சீராகப் புனரமைக்கப்படாத கற்சிலைமடு வீதி

முல்லைத்தீவு,பெப்.13

புதுக்குடியிருப்பு பிரதான வீதியிலிருந்து கற்சிலைமடு பழைய குடியிருப்பு ஊடாக 2 ஆம் கண்டம் சென்றடையும் வீதி புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் அவ்வீதி செவ்வனே செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ் வீதி செல்லும் வழியில் குளத்தின் அலைகரை உள்ளதால் அவ்விடத்திற்குத் தேவையான மண்போட்டு உயர்த்தப்பட்டு வீதிப் புனரமைப்பு செய்யும் படி அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இப்பாதை இரு மாதங்களுக்கு முன்னர் புனரமைப்புச் செய்யத் தொடங்கிய போதும் இழுபறி நிலையில் தாமதம் அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முழுமையாகப் புனரமைப்புச் செய்யாத இவ் வீதி கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழை காரணமாக மிகவும் சேதமடைந்துள்ளதாகவும் பேருந்துகள், கனரக வாகனங்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் பயணங்களை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, இவ்வீதியை செவ்வனே, மிகவும் காத்திரமான முறையில் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

(500)

# கால்நடைகளை வேறிடங்களுக்கு கொண்டு செல்வதற்குத் தடை

## நாம்பன் மாடுகளுக்கு விதிவிலக்கு

கிளிநொச்சி,பெப்.13

கிளிநொச்சி மாவட்டத்தின் கால்நடை வளத்தினைப் பாதுகாக்கும் வகையில் கால்நடைகளை வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கான தடை அரச திணைக்கள அதிகாரிகளால் விதிக்கப்பட்டுள்ளன.

கடந்த கால இடப்பெயர்வின் காரணமாக பல்வேறு இடங்களிலும் கால்நடை வளங்கள் குறைவடைந்து காணப்படுவதால் கால்நடைகளின் தேவையினைக் கருத்தில் கொண்டு கால்நடைகளை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கான தடையினை பிரதேச செயலர், கால்நடை வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட அரச திணைக்கள அதிகாரிகள் விதித்துள்ளனர்.

மாவட்டத்தின் போசாக்கு, பால் தேவை என்பவற்றைக் கருத்தில் கொண்டே இந்த தடை விதிக்கப்பட்ட போதிலும் உழவுத் தேவை, மற்றும் இதர தேவைகளைக் கருத்தில் கொண்டு நாம்பன் மாடுகளை கொண்டு செல்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு சரியான முறையில் கால்நடைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு தங்களிடம் உள்ளது எனவும் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

## நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன்குள அபிவிருத்திக்கென 300 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இக்குள அபிவிருத்திக்கு ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றே நிதியினை வழங்கவுள்ளதாகவும் இந்தக் குளம் அபிவிருத்தி செய்யப்பட்டு எஞ்சிய நிதியில் குளத்தின் வாய்க்கால்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (313)

## பிரசார நடவடிக்கை

வவுனியா,பெப்.13

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை அமைதியான முறையில் மேற்கொள்ளுமாறு பொலிஸ் அத்தியட்சகரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை இந்த மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளுக்கும் போட்டியிடும் வேட்பாளர் மத்தியில் உரையாற்றும் போதே வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமர் சிறி சேனாரத்தின இவ்வாறு தெரிவித்தார். (313)

## பீம ஏகாதசி உற்சவம்

பளை,பெப்.13

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் பீம ஏகாதசி உற்சவம் நாளை திங்கட்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகத்துடன் பூஜைகள் நடைபெற்று ஏகாதசி புராணப் படிப்பும் பயன் சொல்வதும் இடம்பெறுவதுடன் விசேட சொற்பொழிவும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(207)

# பளைப் பிரதேசத்தில் மின் இணைப்பு ஆரம்பம்

பளை,பெப்.13

பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் குடியிருப்புக்கள், அரச திணைக்கள அலுவலகங்கள், பாடசாலைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் பணிகள் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி கிளையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மின்சாரம் பெற்ற குடியிருப்புக்களுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கப்படுவதுடன் புதிய மின் இணைப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் மின் இணைப்புகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மின்கட்ட [illegible] [illegible] இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர் பிரதி வியாழக்கிழமைகளில் பணியாற்றவுள்ளதாகவும் பொதுமக்கள், வர்த்தகர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை அந்த உத்தியோகத்தரிடம் பெறவும், மின் கட்டணம் செலுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

...ப்பள்ளி வீதி, புத்தளம் என்னும் முகவரியுடைய ...வராசா ஜனந்த என்பவருடைய தேசிய அடையாள அட்டை (872441182V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0772032615 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## காணி வீடு விற்பனைக்கு

மானிப்பாய், மாவடி ஒழுங்கையில் 4¾ பரப்புக் காணியுடன் கூடிய 4 அறை வீடு, தனி வழிப்பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 071 8431908 (தரகர் தேவையில்லை)
தொடர்பு: நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை

## ‘உணர்வரிய மெய்ஞ்ஞானம்’ வெளியீடு

சைவப் புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு எழுதிய ‘உணர்வரிய மெய்ஞ்ஞானம்’ என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம், ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார். (த-38)

## காணி விற்பனைக்கு

சில்லாலை நல்லாயன் வாசிகசாலைக்கு அருகில் மூன்று பரப்பு வீட்டுக்காணி கிணற்றுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0789484194

## இடமாற்றம்

கௌதமி நகையகம், 246, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் இயங்கி வந்த பிரபல சோதிடர் த. அழகேசனின்

**அம்மன் சோதிடம்**

03.02.2011 தொடக்கம்

**இல. 149/9, கஸ்தூரியார் வீதி**

என்னும் முகவரியில் நடைபெறுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தொ.பே:0783015186, 0750407934

இப்படிக்கு,
உரிமையாளர், த.அழகேசன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06. 06. 1921 — மறைவு 13. 02. 2010

**அமரர் நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எற்வேட் (J.P)**

(இணக்கசபை, பிரஜைகள் குழு முன்னாள் தலைவர்)

எமது குடும்பத்தின் தலைவராய்
ஒளிவிளக்காய்
எமைக் காத்து அரவணைத்த
எங்கள் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நெடுந்தீவு - 13
021 321 3640, 021 321 9797

## வீடு வாடகைக்கு / குத்தகைக்கு

யாழ்.நகர் முதலாம் குறுக்குத் தெருவில் மாடிவீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பப்படும்.
0756541877

## மணமகள் தேவை

யாழ். Roman Catholic வயது 39, 5'6' வெளிநாட்டில் Shipping Companyயில் உயர் பதவி வகிக்கும் நற்பண்புள்ள எவ்வித தீய பழக்கங்களும் அற்ற மணமகனுக்கு, ஓரளவு படித்த, நற்பண்பும் மிக்க மணமகளை குடும்பத்தினர் தேடுகின்றனர். மதம் மாற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விளம்பரம் இல: 4114 C/o: உதயன், யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

கைதடி கண்டி வீதியில் அரசினர் வயோதிபர் இல்லத்துக்கும், வைத்திய சாலைக்கும் முன் அமைந்த ஒழுங்கையில் கண்டி வீதியில் இருந்து 100 யார் தூரத்தில் 4 ¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0775440293

## காணி விற்பனைக்கு

சில்லாலை, பாலைக்கட்டையடி, சென். ஜோசவ் வீதியில் 3 ½ பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0789484194

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, நல்லூரைச் சேர்ந்த அரச சேவையில் தொழில் புரியும் மணமகனுக்கு 1971ஆம் ஆண்டுக்கும் 1977ஆம் ஆண்டுக்குமிடையில் பிறந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். குறிப்பு, படம் என்பவற்றுடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: S.Jeeva, 521/3, Galle Road, Wellawatte, Colombo - 06. T.P. 0722888632, 0726987811.

## வாடகைக்கு

இல.110, யாழ்.வீதி, மானிப்பாயில் நல்ல சூழலில் அமைந்துள்ள ஒரு மாடிக் கட்டடம் (1600 சதுர அடி) வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு: மா. கந்தசாமி,
தொ.பே.: .021 2255055,021 2225140.

## மணமகள் தேவை

* 76இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும் 20¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 77 இல் பிறந்த 7இல் செவ்வாய் 18¼ பாவமுடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடா பிரஜா உரிமை பெற்ற பட்டதாரி மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: காலக்கண்ணன் திருமணைச் சேவை
இல.171/7 மனோன்மணி அம்மன் கோவிலடி நல்லூர்,
0776070862

## IT Lectures Wanted

Higher Diploma/ BIT
Qualification for TEC SriLanka
Branches of Jaffna,
Kilinochchi, Mullaitivu,
Mannar, Vavuniya,
Trincomalee, Batticaloa
**narc@tecsriLanka.com.lk**

## வேலையாள்கள் தேவை

பிரபல மின்சார இலத்திரனியல் வியாபார நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
வயது எல்லை: 18-30
குறிப்பு: அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

*காலம்: 14.02.2011 (திங்கட்கிழமை)*
*நேரம்: மு.ப. 11.00 - பி.ப. 3.00வரை*
[illegible]
111, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனை பிரதிநிதிகள்

PVC குழாய் மற்றும் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகிய நாம் எமது விற்பனை அணிக்கு தகுதியான விற்பனை பிரதிநிதிகளை யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை பிரதேசங்களிற்கு எதிர்பார்க்கின்றோம்.

**தேவையான தகுதிகள்**

- 30 வயதிற்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்
- குறைந்தபட்ச கல்வித்தகுதி க.பொ.த சாதாரணதரம் அல்லது க.பொ.த உயர்தரம்
- விண்ணப்பதாரர் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தை கொண்டிருத்தல்

### பயிற்சி விற்பனை பிரதிநிதிகள்

- க.பொ.த சாதாரணதரம் அல்லது க.பொ.த உயர்தரம் நிறைவு செய்து பாடசாலையிலிருந்து வெளியேறியோர்.
- விண்ணப்பதாரர் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

கவர்ச்சியான சம்பளப்பொதியுடன் கமிஷன் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்
மேலதிக தகவல்களுக்கு 077-3457822(ராசலிங்கம்)

**கமல் பி.வீ.சீ இன்டஸ்டிரீஸ் (தனி) நிறுவனம்
56,கதவல மாவத்தை,
இரத்மலானை.**

## தவறிவிட்டது

பிறேமசந்திரன் சந்திரரஜனி என்பவருடைய கைப்பை (Hand bag) கறுப்பு ஆனைக்கோட்டை புக்கைதின்னிப்பிள்ளையார் ஆலயத்துக்கும் தட்டாதெரு சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. அதற்குள் வெளிநாட்டு அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் உள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடனடியாகத் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**திருமதி அரியமலர் கனகரட்ணம் “செல்வகிரி”**
புக்கைதின்னிப் பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கை
ஆனைக்கோட்டை.
021 2225062, 0776059341- பிரதீபன், 0773269486.

## CHURCH OF THE AMERICAN CEYLON MISSION

A SERVICE OF THANKSGIVING
FOR THE LIFE OF

**Ruth Bunker**

(Wife of late Sydney K Bunker- Former President of the American Ceylon Mission, Former President of Jaffna College,- Mother of Miss Grace Bunker- Missionary of Jaffna College & Uduvil Girls College)

Will be held on Sunday the 13th of February, 2011
at 4.00 pm in the Manipay CACM Church
All are cordially invited

**Rev.A.K.Surendran**
**Secretary, CACM – Jaffna Region**

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை

**திருமதி ரூத் பங்கர்**



(இவர் முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரியின் தலைவரும் முன்னாள் அமெரிக்கன் மிஷன் தலைவருமான காலஞ்சென்ற சிட்னி பங்கரின் மனைவியும் முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரிகளின் மிஷனரி செல்வி கிரேஸ் பங்கரின் தாயுமாவார்)

அவர்களின் வாழ்வுக்கு
**நன்றி செலுத்தும் வழிபாடு**

*13.02.2011 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.*

**வண.A.K.சுரேந்திரன்**
செயலாளர்,
அமெரிக்கன் மிஷன் திருச்சபை, யாழ்.பிராந்தியம்.

There will be a Memorial Service for the life of Ruth Bunker on Sunday, the 13th, at 2.00p.m in the United Church of Chapel Hill, 1321 Martin Luther King Jr. Rd., Chapel Hill, NC 27514.

(299)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னவன் சீதாப்பிள்ளை



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னவன் சீதாப்பிள்ளை 11.02.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாதன் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாதன் - ஐயாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னவனின் அன்பு மனைவியும் கனகு, துரையப்பா (ஜேர்மனி), ஓங்காரவடிவேல், காலஞ்சென்ற நடேஸ்வரி மற்றும் வெற்றிவேல்(ஜேர்மனி), உருத்திராதேவி, குகவதனி,கேதீஸ்வரன், வசந்தன்(ஜேர்மனி), தங்கரூபன், சுசிலதா ஆகியோரின் பாசமிகு தாயும் வள்ளி, பிரியங்கா(ஜேர்மனி), தர்மவதி, பாக்கியநாதன், புனிதவதி (ஜேர்மனி), ஹரிதாஸ், மரியதாசன், தனலெட்சுமி, ஜெயந்தி(ஜேர்மனி), பிரேமலா, விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் ஊருண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
021 321 8585

தகவல்: கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாடு கிடக்கிற கிடையில...



நாளைக்குக் காதலர் தினம். உலகம் முழுவதும் உள்ள காதல் காய்ச்சல் பீடித்தவர்கள் நாளைய தினத்தை கோலாகலமாகக் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். விடுதிகள் (Hotels), பூங்காக்கள், கடற்கரைகள் மாத்திரமன்றி அச்சு, மின்னியல் ஊடகங்கள் கூட நாளைய நாளை சிறப்பிக்கத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ரோஜாப் பூ விற்பனையாளர்கள், வாழ்த்து அட்டை விற்பனையாளர்கள் என அனைவரும் காதலர் தினத்தையொட்டி ஒரு கை பார்த்துவிடுவதென கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இப்படியென்றால் இந்தத் தினத்தின் கதாநாயகர்களாக விளங்கும் இளைய - பதின்ம வயதினர் - இன்னும் பலத்த 'டென்ஷ'னோடு நாளைய புலர்விற்காகக் காத்திருக்கின்றார்கள்.

நாளைக்குக் காதல்கள் பரிமாறப்பட இருக்கின்றன.

''நாங்கள் என்ன குறைஞ்ச ஆக்களோ'' எனும் விதத்தில் யாழ்ப்பாண இளைய சமுதாயமும் தமது வித்துவத்தைக் காட்ட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. நாளைக்குக் காலை குடாநாட்டு வீதிகளில் வலம் வந்தீர்களேயானால், உங்கள் வாகன 'டயரி'ல் மிதிபடுகிற மாதிரி வாழ்த்தோ கவிதையோ வரையப்பட்டுக் காணப்படலாம். நாளைய தினத்தைச் சிறப்பிக்கிறவர்களின் ஆங்கில முதலெழுத்துக்கள் கூட அழகாக எழுதப்பட்டு (கவனம் அது உங்கள் மகளுடைய அல்லது மகனுடையதாகக் கூட இருக்கலாம்) உங்கள் மிதியடி ஆசீர்வாதத்திற்காக காத்துக் கொண்டிருப்பதை நீங்கள் அனுபவிக்கலாம்.

இத்தகைய அரிய, பெரிய காரியத்தைச் செய்வதற்காக நமது இளைய சமுதாயம் இன்றிரவு தீந்தை (Paint) வாளிகளுடன் வசந்தம் வீசத் தவறிய வீதிகள் தோறும் அலைந்து தமது கைங்கரியத்தைக் காட்ட இருக்கிறது. போதாக் குறைக்கு வீட்டு மதில்கள், கைவிடப்பட்ட கட்டடச் சுவர்கள், மின்சாரக் கம்பங்கள் என்பவற்றிலும் - உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு முந்தி - ஏதாவது கருமம் நாளைக்கு அரங்கேறியிருக்கும். பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிலையங்கள் என்பவற்றிலெல்லாம் நாளைக்கு ஏதாவது 'நரித்தனம்' நடைபெறாமல் விடாது என்றே நம்பப்படுகின்றது.

காதல் உணர்வுகளுக்குள் ஓர் உணர்வாகப் புகுந்து நின்று உவகையும் தருகின்றது. ரகளையும் செய்கின்றது. அது இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் என்று எல்லாவற்றினுள்ளும் வேர் நுழைத்து விழுது பரப்பி நிற்பதனால்தான், அதனுடைய அடிமுடி தேடுவது பெருத்த காரியமாகிப் போய்விட்டது.

### வலன்ரைன் என்கிற சோகம்

காதலர் தினம் என்று சிறப்பிக்கப்படும் 'வலன்ஸ் டைன்ஸ் டே' எப்படி உருவானது?

'வலன்ரைன்' எனும் கிறிஸ்தவ மதகுருவை நினைவுகூரும் நாளாகவே இது அமைகிறது. உரோம சாம்ராஜ்ஜியத்தை கிளாடியஸ் II ஆட்சி செய்த காலத்தில், திருமணமாகாத ஆண்கள் சிறந்த படைவீரர்களாக இருப்பதைக் கண்டார். எனவே இளம் ஆண்கள் திருமண பந்தத்தில் இணையக் கூடாதென சட்டம் பிறப்பித்தார்.

> அதிகளவிலான
> மனவெழுச்சிகளுக்கு
> உள்ளாகும் கட்டிளமைப்
> பருவ வயதினரில்
> கிரகப்பிரவேசம் செய்கின்ற
> காதல், கத்தி நிலையை
> ஒத்திருக்கிறது. கத்தியை
> நன்மைக்கும்
> பயன்படுத்தலாம். தீமைக்கும்
> பயன்படுத்தலாம். அது
> கத்தியை கையாளுகின்ற
> நபரின் புத்தியில்தான்
> தங்கியிருக்கின்றது.

அக்காலத்தில் அங்கிருந்த இந்த 'வலன்ரைன்' பாதிரியார் அரசனின் இந்த நிபந்தனையால் கவலையுற்று படைவீரர்களுக்குத் திருமணங்களை இரகசியமாக நடத்தி வைத்தார். எனினும் இவர் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டார்.

### [illegible]

அப்பேர்ப்பட்ட அவலத்தைப் பின்னணியாகக் கொண்ட இந்தத் தினம் தான் நாளைக்கு அகக்களிப்புடன் கொண்டாடப்பட இருக்கின்றது.

மேற்குலகு சார்ந்த இந்தத் தினம், படிப்படியாக நமது கீழைத்தேய நாடுகளுக்கும் பரவி ஏதோ முக்கியமான ஒரு தினத்தைக் கடைப்பிடிப்பது போல பரபரப்புடன் பின்பற்றப்பட்டு வருகின்றது.

பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எதிர்காலத்தில் நிலைமை மோசமடைவதைத் தவிர்க்கவும் என ஐ.நா. சபை அங்கீகரித்துள்ள பல சர்வதேச தினங்கள் இன்று கண்டுகொள்ளப்படாமலே இருக்கின்றன.

### மறக்கப்பட்ட தினங்கள்

ஐப்பசி 16இல் அறிவிக்கப்பட்டுள்ள வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினத்தையோ, கார்த்திகை 16இல் நினைவு கூரப்படும் சகிப்புத் தன்மைக்கான சர்வதேச தினத்தையோ கார்த்திகை 25இல் அறிவிக்கப்பட்டுள்ள பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு சர்வதேச தினத்தையோ இன்று எவரும் கண்டுகொண்டதாகத் தகவல் கிடையாது.

என்று அத்தினமோ, அன்றைய தினத்தில் மாத்திரம் பத்திரிகையில் ஒரு கட்டுரை, வானொலி செய்தியில் ஒரு தொகுப்பு, ஒரு பேரணி, ஒரு சுவரொட்டி என அன்றே நினைவு கூரப்பட்டு அன்றே மறக்கப்ப[illegible]கவே இவை இருக்கின்றன. அத்தகைய தினங்களில் சில எங்களைப் பற்றியவையாகவும் கட்டாயம் எங்களுக்கு தெரிந்திருக்க வேண்டியவையாகக் கூட இருக்கின்றன. ஆனால், நாம் அவற்றைப் பற்றிக் கவலையே படுவதில்லை.

காதலைப் பற்றிக் குறிப்பிடுவது இபத்தியின் நோக்கமன்று ஆதலால் நீங்கள் காதலைப் பற்றி தெரியாதவராக இருந்தால்(?) இன்றைய, நாளைய பத்திரிகைகளில் வருகின்ற கவிதைப் பகுதியை பார்த்தோ அல்லது தொலைக்காட்சி வானொலி என்பவற்றை முடுக்கிவிட்டோ காதல் பற்றிய அறிவை (?) வளர்த்துக் கொள்ளலாம்.

அதிகளவிலான மனவெழுச்சிகளுக்கு உள்ளாகும் கட்டிளமைப் பருவ வயதினரில் கிரகப்பிரவேசம் செய்கின்ற காதல், கத்தி நிலையை ஒத்திருக்கிறது. கத்தியை நன்மைக்கும் பயன்படுத்தலாம். தீமைக்கும் பயன்படுத்தலாம். அது கத்தியை கையாளுகின்ற நபரின் புத்தியில்தான் தங்கியிருக்கின்றது.

### நன்மையா? தீமையா?

காதலினால் நன்மை விளைந்தால் (?) உண்மையில் அது வரவேற்கத்தக்கது. மாத்திரமன்றி அதுவே அதன் சுபாவம் என்று கூறி ஒதுக்கிவிடலாம். ஆனால் தீமை விளைந்தால்...(?)

குடாநாட்டு இளம் வயதினரின் இன்றைய நிலை, எவராலும் திருப்தி அடையக்கூடிய வகையில் இல்லை. அதற்கு வலுசேர்க்குமாப்போல் அண்மையில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வெளியிட்ட அறிக்கை தாங்கி வந்த விடயங்கள் குடாநாடு குட்டிச்சுவராகிப் போவதை எண்பித்து நிற்கின்றன.

18 வயதிற்கு கீழ்ப்பட்ட, 247 பேர் கர்ப்பம் தரித்திருக்கின்றனர். 54 பேர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 14 பேர் திருமணம் செய்யாமலே குடும்பமாக வாழ்ந்து வருகின்றன[illegible] ரீதியான துஷ்பிரயோகத்தினால் 11 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி வரையிலாக உள்ள தகவல்களை வைத்து மேற்படி அறிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



இந்த அறிக்கை மாத்திரமன்று, நாளாந்த நடைமுறை வாழ்வில் நாம் சந்திக்கின்ற பல சம்பவங்களும் கூட , யாழின் இளைய சமுதாயம் பற்றிய பெருத்த கேள்வியை எழுப்புகின்றன.

இன்றைக்கு வீதிகளில் இறங்கினோமானால் - சில காலங்களுக்கு முன்பு இராணுவ வாகன தொடரணி போனதை ஞாபக மூட்டுமாப்போல் - மோட்டார் சைக்கிள் இளைஞர்களின் சவாரிப் பாய்ச்சலையே காணக் கிடைக்கிறது. அதிலும் தலைக்கவசம் அணியாத தலைகளும் உள்ளடக்கம். சரி அப்படி அணிந்திருந்தாலும் அதனுள் செல்லிடப்பேசி ஒன்று செருகிவைக்கப்பட்டிருப்பதும் பிரயாணத்தின்போது சுவாரஸ்யமாக அனுபவிக்கக்கூடிய ஒன்றாக மாறிவிட்டது.

### இளசுகளின் தான்தோன்றித்தனம்

தினசரிப் பத்திரிகைகளைப் புரட்டி விபத்துச் சார்ந்த அதுவும் குடாநாட்டுப் பத்திரிகைகளில் அடிக்கடி இடம்பிடிக்கும் மோட்டார் சைக்கிள் விபத்துச் செய்திகளை வாசித்து பார்த்தீர்களானால், அதில் அடைப்புக்குறிக்குள் பாதிக்கப்பட்டவரின் வயதைக் குறிப்பிட்டிருப்பார்கள் அல்லவா? அந்த வயதுப் பெறுமானம் 18 தொடக்கம் 30 வரைக்கும் பரவலாகக் காணப்படும்.

எங்காவது திருடர் பொலிஸாரால் பிடிக்கப்பட்டதாகவோ பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டதாகவோ செய்தி இருக்கிறதா, அடைப்புக்குறிக்குள் மேற்சொன்ன வயதுப் பெறுமானம் காணப்படும்.

மாலை மயங்கும் நேரத்தில் குடாநாட்டு நகர்ப்புற மதுபானக் கடைகளை நோட்டம் விட்டுப் பாருங்கள். நல்லூர் திருவிழாவின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் வரிசையாக நெருக்கி சைக்கிள்களை அடுக்கி வைத்திருப்பது போல சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் தொகையாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை வைத்தே உள்ளே உள்ள திருவிழா நெருக்கடியை ஊகித்துக்கொள்ளலாம். தென்பகுதியிலிருந்து வந்த சிங்களச் சுற்றுலாப் பிரயாணிகளா இதில் ஈடுபடுகிறார்கள்? இல்லை. யாழ்ப்பாண இளைய சமுதாயமென யாரை மேலே இனங்காட்டினேமோ அவர்களே இவர்கள்.

பொது இடங்களில் கூடிநின்று தெரு

(32ஆம் பக்கத் தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.மண்ணில் யாழ்.மக்களுக்காக

கொழும்பில் இருந்து வந்து உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் தரமான/மலிவான பின்வரும் சேவைகளை நியாயமானமுறையில் வழங்க உள்ளோம். உங்களுக்குத் தேவையான தரமான, மலிவான, அழகான வாழ்நாள் பாவனையுடைய வீட்டுத் தளபாடங்கள் வேண்டிய டிசைன்களில் செய்து தரப்படும். குசினிப் பொருத்துக்கள் அலுமினியப் பொருத்துக்கள் மாபிள் பதித்தல், தரமான வெயிலுக்கு மங்காத பொலிஷ் (Water Base PU) போன்ற சகல தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.

**யாழ்.தளபாட மாளிகை**

**இல.296, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

Tel:0772395000, Fax: 021 222 7662
E-mail: jfphnh@gmail.com

## விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் 2011 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரணதரப் பயிற்சிநெறிக்கு வெளிவாரி மாணவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப் படுகிறது.

**தகைமைகள் :** கல்விப்பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் கணிதம்,தமிழ் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பயிற்சிக்காலம்:** 06 (ஆறு) மாதம்

**விண்ணப்பிக்கும்முறை:** விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 2011.02.21 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலாளர், மாவட்ட கூட்டுறவுச் சபை, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் எதிர்வரும் 2011.02.25 திகதி நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கும் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்டச் செயலாளர்
முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபை.

### ரூபா 50 ஆயிரம் பிணையில் அபராதம்

கொடிகாமம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மாட்டினை அழித்து இறைச்சி விற்பனை செய்ய முற்பட்ட நபரை பொலிஸாரும் பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து சென்று பிடித்தனர்.

இந்த நபரை கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கினை மார்ச் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-207)

# உடனடி பயணம்



# சவூதி அரேபிய ராஜ்யத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

**Cosy Hotel & Restaurant, No 15, Sirambiady Lane, Off Stanley Road, Jaffna.**
**Tel : 021-222 5899, 021-222 7100**
என்ற முகவரியில் 2011 பெப்ரவரி 21, 22, 23 திகதிகளில்

## WALK-IN-INTERVIEWS

| பதவிகள் | தேவையான எண்ணிக்கை | சம்பளம் (சவூதி சியால்) | கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| பொறியியலாளர்கள (சிவில், இயந்திரவியல், மின்சாரவியல்) ENGINEERS - Civil / Mechanical / Electrical | 25 | பேசி தீர்மானிக்கலாம் | இலவசம் |
| கட்டுமான பணியாளர்கள் - MASONS | 100 | 1,000 | 60,000 |
| தச்சு பணியாளர்கள் - CARPENTERS | 115 | 1,000 | 60,000 |
| குழாய் பணியாளர்கள் - PLUMBERS | 120 | 1,000 | 60,000 |
| மின்சாரவியல் பணியாளர்கள் ELECTRICIANS | 100 | 1,000 | 60,000 |
| மோட்டார் வாகன திருத்துநர்கள் MOTOR MECHANICS | 50 | 1,200 | 60,000 |
| டீசல் வாகன திருத்துநர்கள் DIESEL MECHANICS | 50 | 1,500 | 60,000 |
| கூலியாட்கள் - LABOURERS | 300 | 600 | 36,456+டிக்கட் |
| உலோக ஒட்டுநர்கள் - WELDERS | 40 | 1,200 | 60,000 |
| தீந்தை பூசுவோர் - PAINTERS | 90 | 1,000 | 60,000 |
| கனரக வாகன சாரதிகள் HEAVY VEHICLE DRIVERS | 100 | 900+Trip Allowance | 60,000 |
| குளிரூட்டி தொழில்நுட்பவியலாளர்கள் A/C TECHNICIANS | 45 | 1,000 | 60,000 |
| உருக்கு பொருத்துநர்கள் - STEEL FIXERS | 50 | 1,000 | 60,000 |

1 சவூதி ரியால் = 31 ரூபா
* Government Approved Charges Only

**இலவசம்**
- ✓ உணவு ✓ தங்குமிடம் ✓ இருவழி பயண சீட்டு
- ✓ காப்புறுதி ✓ மருத்துவ செலவு ✓ மேலதிகநேர கொடுப்பனவு

## DINESH MANPOWER AGENCIES (PVT) LTD.

No. 10, Masjid Road, Kirulapone, Colombo 06, Sri Lanka.
Tel: 0117388791 / 0117388792 / 0113181409 /0113181471.
Mobile : 0777-760122, 0777-906716.
E-mail : info@dineshgroup.lk. Website : www.dineshgroup.lk
HOTLINE : 078 566 8565

AL/583/ADVT/01/11

எங்கள் கம்பனி இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டது. எமக்கு வேறு கிளைகள் எதுவும் இல்லை.

### உடனடி வேலை வாய்ப்பு

One World in Innovage சர்வதேச கம்பனிக்கு முகாமைத்துவ பயிற்சிக்காக பின்வருவோர் தேவை

(Ass manager, Supervisor, Administration) இவ்வாறான வேலைவாய்ப்புகள் தேவை, 6 மாத பயிற்சி, பயிற்சியின்போது 15000/- 25000/= வரை பெறமுடியும். தங்குமிட வசதி இலவசம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பயிற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகைமை - G.C.E O/L., சாதாரண அறிவு
இடம் - யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்னால் உள்ள காரியாலயத்தில்
காலம் - எதிர்வரும் (14.02.2011) - (15.02.2011)
நேரம் - மு.ப 9.30 தொடக்கம் ந.ப. 12.00 வரை
(110706) தொடர்பு 0771363797

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் i Phone 4 உடன் விற்பனைக்கு. தொடர்பு : 0773649454

### தேவை

பள்ளி முன்னிலைப் பிள்ளைகளை வீட்டில் வைத்து பராமரிக்கக் கூடிய பெண்கள் தேவை. விவரங்களுடன் நேரில் வரவும்.

பணிப்பாளர்
**சென்றல் நேசிங் ஹோம்**
350, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

### வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 705 2686,0112361697
(ஒரு மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்)

### வீடு வாடகைக்குண்டு

சுதுமலை தெற்கில் 3 அறைகள்,அடிப்படை வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பத்தினர் விரும்பத்தக்கது. தொண்டு நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படும். தொடர்பு: 072 966 8721

### வீடு வளவு விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு (பட்டினசபை,- TRANSFORMER) அருகிலுள்ள ஒழுங்கையில் 7 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0212270027, 0776452487.

### தேங்காய் விற்பனை

ஊர்த் தேங்காய் மிக மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.
தொடர்பு: **மலிசியாம் சென்ரர்**
61, இராமநாதன் வீதி, கலட்டி,
தொ.பே.: 0773001763.

### வீடு வாடகைக்கு

யாழ். நகரிலிருந்து 4.5 K.M தூரத்தில் கொக்குவில் குளப்பிட்டியில்,K.K.S வீதிக்கு மிக அருகில் சகல வசதிகளுடனான வீடு உடன் வாடகைக்குண்டு. நிறுவனங்கள், வங்கிகளின் வதிவிடமாகவும் பயன்படுத்த உகந்தது.
தொடர்பு:
0718334503, 0212221989, 0714433026.

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 16.02.2011 இல் விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**ராஜீவ்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
தொ.பே: 0776090926,
(301) 021222 2867

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சப்பறத்தின் கீழ் பிச்சைக்காரரின் 'தண்ணி' அட்டகாசம்

நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழல் மிகவும் புனிதமானது. ஆலயத்தின் முன்றிலிலுள்ள வேம்பு உள்ளிட்ட மரங்கள் தரும் குளிர்ச்சியான நிழலும் வெண் பஞ்சுக் குவியலாகப் பரவிக் கிடக்கும் மணலும் நல்லைக் கந்தனின் சக்தியால் எங்கும் பரவியுள்ள அதிர்வலையும் அந்தப் புனிதத்தை ஏற்படுத்துவதாக உள்ளன.

படித்தவர்கள், பேராசிரியர்கள், உத்தியோகத்தர்கள், வயது முதிர்ந்தவர்கள், இளம் சமூகத்தினர், குடும்பஸ்தர்கள் எனப் பலரும் புனிதமான ஆலயச் சூழலில் மாலைப் பொழுதில் கிடைக்கும் அந்த சுகத்தை அனுபவிப்பார்கள். நல்லைக் கந்தனின் ஆலயச் சூழலில் கிடைக்கும் சுகத்தை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் ஆனந்தத்தின் எல்லை.

ஆலயச் சூழலில் சிலமணிநேரம் அமர்ந்திருந்து நல்லைக் கந்தனை நினைத்துவிட்டால் போதும், எமக்கிருந்த துன்ப துயரங்கள் நொடிப்பொழுதில் சிதறடிக்கப்பட்டுவிடும். மனச்சுமை அகன்று உள்ளம் புத்துணர்வு பெறுவதனை அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொள்ளமுடியும்.

தேர் முட்டியிலுள்ள வில்வ மரத்தடியில் வயது முதிர்ந்தவர்கள் சிலர் அமர்ந்திருந்து முருக நாம பஜனை பாடுவார்கள். அதனைக் காண்பதும் கேட்பதும் பாக்கியமே என நினைப்பவர்களும் உள்ளனர். நாட்டில் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இன மதம் கடந்து சிங்கள மக்களும் நல்லைக் கந்தனின் ஆலயச் சூழலில் கிடைக்கும் சுகத்தை அனுபவிக்கத் தவறுவதில்லை.

அதுசரி, ஏன் நல்லைக் கந்தனின் ஆலயச் சூழலின் மகிமை பற்றி இப்படியெல்லாம் அடுக்கிக் கொண்டு போகிறேன் என நினைப்பீர்கள். அது எனக்குப் புரிகிறது. நான் விடயத்துக்கு வருகிறேன். புனிதமாக உள்ள அந்த ஆலயச் சூழலுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொள்பவர்கள் குறித்துத்தான் எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தப்போகிறேன்.

சில இளசுகள் தமக்குரிய பொழுதுபோக்கும் இடமாகவும் சில்மிஷங்களை அரங்கேற்றும் இடமாகவும் ஆலயச்சூழலை மாலைவேளையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது ஒரு புறமிருக்கட்டும். அதைவிட மனத்துக்குக் கஷ்டமான வெறுப்பை உண்டுபண்ணும் செயல்களும் அங்கு இடம்பெற்று வருகின்றன.

''காலை முழுவதும் படிப்பு பின்னர் மாலை முழுவதும் விளையாட்டு'' எனப் பழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா என பாரதியார் குறிப்பிட்டார். ஆனால் நல்லூர் சூழலில் என்ன நடக்குது தெரியுமோ? ''காலை முழுவதும் பிச்சை எடுப்போம் பின்னர் மாலை முழுவதும் தண்ணியடிப் போம்'' என வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். இவர்கள் வேறு யாருமல்ல ஆலய சூழலில் கொளுத்தும் வெயிலில் இருந்து பிச்சை எடுக்கும் சில பிச்சைக்காரர்கள்தான்.

இந்தப் பிச்சைக்காரர்களின் குடித்தனத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். அதைக் கேட்டுவிட்டு நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

குறிப்பாக நான்கு அல்லது ஐந்து பிச்சைக்காரர்கள் ஆலய சூழலில் செய்யும் அடாவடித்தனங்கள் முருக பக்தர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தினமும், அந்தப் பிச்சைக்காரர்கள் காலை முதல் மாலைவரையும் ''அம்மா பிச்சை'' ''ஐயா பிச்சை'' எனக் கேட்டுப் பிச்சைப் பணத்தைச் சேர்த்துக் கொள்வார்கள்.

இந்தப் பிச்சைப் பணத்தின் ஒரு பகுதியை வசூலிக்கும் கைங்கரியத்தில் ஒரு பிச்சைக்காரன் ஈடுபடுவான். அப்போது மாலை மங்கி இருள் சூழத் தொடங்கிவிடும். வசூலித்த பணத்துடன் அந்த நபர் சாராயக்கடை நோக்கிச் செல்வார். எந்தக் கடைக்குப் போகப்போகிறார் என்று யாருக்கும் தெரிந்திருக்காது என நினைக்கிறேன். நடந்து சென்றவர் சில மணிநேரம் கழித்து மீளவும் அவ்விடம் வருவார். தள்ளாடித் தள்ளாடி வரும் அந்தப் பிச்சைக்கார நபர், வீதியால் தானும் தன் பாடுமாகச் செல்பவர்களைப் பார்த்து 'யாரடா றோட்டை ஆட்டுறது' என போதை தலைக்கேறிய நிலையில் கேட்பதனையும் அவதானிக்க முடியும்.

மதுபோதையில் முணுமுணுத்தபடி வரும் அந்த நபரைக் கண்டதும் ஏனைய பிச்சைக்காரர்கள் எழுந்து அவன் பின்னே செல்வார்கள். அவர்கள் எங்கு செல்கிறார்கள் என நினைக்கிறீர்களா? அதிக தூரமல்ல தேர்முட்டியின் பின்புறமுள்ள இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பெரிய சப்பறப்பீடத்தினுள்ளே செல்வார்கள். அப்பீடத்தினுள்ளே சென்று ஒன்று கூடுவார்கள். அதனுள் உயர் ரக மதுபானங்களை அருந்தியும் சிகரெட் புகையினை உள்ளெடுத்தும் இன்பம் காண்பார்கள். 'சைற் ஈற்ஸ்' ஆக மீன்பொரியல், இறால் பொரியல், மாட்டு இறைச்சி ஆகியவற்றையும் எடுத்துக்கொள்கின்றனர்.

இவ்வாறான சம்பவம் அடிக்கடி அந்தச் சப்பறப்பீடத்தினுள்ளே நடந்தேறி வருகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அப்பீடம் 'மினிபாராகவும்' மாற்றப்பட்டு விடுகிறது. பகல் பொழுதில் அந்தச் சப்பறம் உள்ள இடத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டால் குறுக்கு மரங்களில் சாராயப் போத்தல்கள் சில அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதனை அவதானிக்கமுடியும்.

அத்துடன் அந்தப் போத்தல்களில் சில உடைந்து நொருங்கிய நிலையில் மணல் மீது சிதறிக் கிடப்பதனையும் காணமுடிகிறது. பார்த்தீர்களா, கேட்டீர்களா இந்தப் பிச்சைக்காரர்களின் அடாவடித்தனத்தை.

பிச்சைக்காரர்கள் சும்மா இருக்கக்கூடாது என்று அவர்களுக்கு உழைப்பதற்கான வழியை யாழ்.மாநகர சபை ஏற்படுத்திக் கொடுத்தும், அந்த நபர்கள் அவற்றை புறக்கணித்துவிட்டுப் பிச்சை எடுப்பதே எமது பணி எனவும் அந்தப் பணத்தைக் கொண்டு மாலை முழுவதும் தண்ணியடிப்பதனையும் வழக்கப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். சித்தர்களும் யோகிகளும் மகான்களும் அமர்ந்திருந்து தியானித்து ஆன்மீக அலையைப் பரவ விட்டு புனிதப்படுத்திய நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலின் புனிதத் தன்மைக்கு மாசு ஏற்படுத்தும் இந்த பிச்சைக்காரர்களுக்கு எதிராக யாழ் மாநகர சபையும் பொலிஸாரும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லவா? இதுவே உங்கள் வேண்டுதலாகவும் இருக்கும் என நான் நம்புகிறேன்.

**—சக்தி**

# அழகு என்பது என்ன?

தமிழ் மக்கள் மரபில் புதுமணத் தம்பதிகளை வாழ்த்தும் போது 16 பேறும் பெற்று சிறப்புற வாழ வேண்டுமென வாழ்த்துகிறோம். அந்தப் 16 பேறுகளில் அழகையும் ஒரு பேறாகக் கொண்டனர் ஆன்றோர். அழகுக்கு எவ்வளவு சிறப்பான இடம் கொடுக்கப்படுகின்றது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா? புறப்பொருள்கள் எதிலும் வனப்பைத் தேடுகின்றது மனம். இயற்கைக் காட்சி, தெய்வவடிவம், ஓவியம், சிற்பம், ஆண், பெண் வனப்பம், கட்டடம், விற்பனைப் பொருள்கள் என்று எங்கும் எதிலும் ஓர் அழகையும் அலங்காரத்தையும் காணத்துடிக்கிறது உள்ளம்.

அழகு, அழகு என்கிறோம் நாம். ஆனால் அழகு என்பதுதான் என்ன? என்ற கேள்விக்குப் பதில் கூற முடிகிறதா என்பதைப் பார்ப்போமா? அழகு என்ற சொல்லுக்குள் இரு பொருள்கள் சம்பந்தப்படுகிறது. இப்பொருள்கள் இணைவதால் அல்லது சந்திப்பதால் உருவாகும் ஒரு அலையே (உணர்வே) அழகு எனலாம். புறப்பொருளும் உயிரினங்களின் மூளை அல்லது மனமும் சம்பந்தப்படுவதை ஆழ்ந்த சிந்தனையால் அலசி உணர்ந்து தெளிவு பெறலாம். புறப்பொருளை காட்சி என்று எடுத்துக் கொண்டால் காட்சியைக் காண்பது கண் அல்லது கட்புலனாகும். யௌவனத்தைக் காண்பது கட்புலனே தவிர வேறு புலன் அன்று. எனவே காட்சிக்கும் கண்ணுக்கும் இடையே தோன்றுவது அழகு அல்லது வனப்பு அல்லது யௌவனம் ஆகும். காட்சியைக் கண் பார்த்ததும் செய்தி கட்புல நரம்பு மூலம் மூளைக்குச் செல்ல, மூளை செய்தியைப் பெற்றுத் தேர்வு ஒன்றை நடத்தி, தேர்வின் பெறுபேறாக ஒரு திருப்தியை அல்லது ஒருவித பூரிப்பான உணர்வை மின்னல் வேகத்தில் வெளியேற்றுகிறது. இந்த உணர்வையே அழகு எனலாம். இதனை இன்னொரு முறையில் குறிப்பிடுவதாயின் காட்சிப் பொருளுக்கும் மனதிற்கும் இடையே தொடர்பு ஏற்பட்டு உண்டாகும் உணர்வாகும். அழகு பற்றி இன்னும் ஆழமாக ஊன்றிச் சிந்திப்பதன் மூலம் அதன் உட்கிடக்கையில் உள்ளதை அறியும்போது ஒரு நிறைவை அல்லது பூரணத்துவத்தைத் தரும் எனக் கருதுகிறேன்.

இயற்கைப் பொருள்களான சூரியன், சந்திரன், முகிற்கூட்டங்கள், நிலாவெளி, ஆறு, கடல், மலை, தென்றல், தாவரங்கள், பூக்கள், மிருகங்கள் போன்றவற்றை இணைத்தும், தனித்தும் காட்சியாகப் பார்க்கும் போது தான் அழகு என்ற ஒப்பற்ற மகிழ்ச்சியான ஒரு உணர்வு மனதுக்கு ஒரு திருப்தியை அல்லது மனதிற்கு ஒருவித இனம்புரியாத இன்பத்தைத் தருகிறது. கதிரவனின் எதிரே மலை மேல் ஓடிப்பாயும் அருவியைப் பாருங்கள். மாலையோ, காலையோ, ஆதவனின் எதிரே கடல் மேல் செங்கதிர்கள் பாயும் போது தோன்றும் காட்சியைப் பாருங்கள். காலை, மாலைப் பொழுதில் துந்துமியாக மழை பெய்து கொண்டிருக்கும் நேரம் சூரியனுக்கு எதிரேயுள்ள முகிற்கூட்டத்தில் வானவில் தோன்றும் விந்தையைப் பாருங்கள். இக்காட்சிகள் யாவும் மனிதனுக்கு ஏதோ ஒரு புரியாத மன ரம்மியத்தைத் தருகிறதல்லவா? எந்த மொழி இலக்கியத்திலும் கலாரசனையைக் கூட்டுவதற்கு அழகுணர்வைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் கவிஞர்கள்.

### கவரும் பொருளும் கவரப்படும் பொருளும்

அழகின் ஒரு அம்சமான (கவர்ச்சி) கவரும் பொருள், கவர்வதற்கான சில தன்மைகளைக் கொண்டிருத்தலை நாம் ஒரு விடயத்தை ஊடுருவிப் பார்க்கும் போது புலனாகும். வடிவம், அளவு, பொருத்தம், வர்ணம் முதலியவற்றைக் கொண்ட காட்சிப் பொருள்களே மன உணர்வைத் தூண்டுகின்றது. அதன் விளைவாக அப்பொருள் உள்ளத்தை ஈர்க்கின்றது. தோகையை விரித்தாடும் மயிலாக இருக்கட்டும், துள்ளி ஓடும் வாலிபக் கலைமானாக இருக்கட்டும், இவற்றைப் பார்க்கும் போது மனம் குளிர்கின்றது. அழகுப்பொருள்களை இயற்கை படைக்கும் போது கவர்ச்சியையும் கவரப்படும் செயன்முறையையும் வெறுமையாகப் பயன் அற்றதாகப் படைக்கவில்லை என்பதைக் கூர்ந்து சிந்திப்பதன் [illegible] முடியும். [illegible] மலர்கிறன என்பதை அறிவியல் நோக்கில் பார்க்க முனைவோம். அப்போதுதான் இயற்கையின் உள்நோக்கத்தை எம்மால் புரிந்துகொள்ள முடியும். நிறப்பூக்கள் பகல் பொழுதில்தான் மலரும். இவை அழகாக இருப்பதால் பூச்சிகள், சிறிய குருவிகள் (தேன்குருவி), தேனீக்கள் போன்ற உயிரினங்கள் மலரைத் தேடி மலர்கள் மேலே உட்கார்ந்து தேனைக் குடிக்கின்றன. இந்த நிகழ்வால் குறிப்பிட்ட உயிரினங்களின் அசைவால் மகரந்தப் பொடி அங்கும் இங்கும் பறந்து மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்கு வழிபிறக்கிறது.

இதன் பயனாக அந்தத் தாவரத்தின் இன விருத்தி அல்லது சந்ததி விருத்தி தொடர் சங்கிலியாவதற்கு வகை செய்யப்படுகிறது. அத்தோடு வண்ண வண்ண நிறங்களும் பொருத்தமான ஒழுங்கமைப்பும் உயிரினங்களைக் கவர்வதில் ஒரு பொதுத்தன்மையாக (இயல்பு) அமைவது இயற்கையின் பொது விதி போலும். ஏனெனில் ஒவ்வொரு ஜீவராசிக்கும் இனச்சேர்க்கைக்கென குறிப்பிட்ட காலம் உண்டு. அக்காலங்களில் அந்தஜீவன்கள் மிக மிக வனப்பான உடலையும் அழகான நிறங்களையும் கொண்டிருக்கும். பெரும்பாலும் ஆண் கவரும் பொருளாகவும் பெண் கவரப்படும் பொருளாகவும் இருக்கின்றன. சில வகை ஓணான்கள், இனச்சேர்க்கைக் காலத்தில் அதன் புறத்தோல் நிற மாற்றத்துக்கு உட்படுகின்றது. இம்மாற்றத்தால் பெண் ஓணான் கவரப்பட்டு உடற்சேர்க்கையில் ஈடுபடுகின்றன. இப்போது எமக்கு ஒன்றைப் புரியவைக்கின்றது இயற்கை. அதாவது அழகையும் கவர்ச்சியையும் சில நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறது. இங்கே உயிரினங்களின் காம உணர்வைத் தூண்டி, புணர்ச்சியை ஏற்படுத்தி கரு உண்டாவதற்குப் பாதை சமைத்துக் கொடுக்கின்றது இயற்கை. மேற்சொன்ன விடயங்கள் மானுடர்க்கும் பொருந்தும் அல்லவா? சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

இதேபோன்று அழகிய நிறமும் மதமதப்பும் கொண்ட பழங்களை மனிதர்களோ, மிருகங்களோ, [illegible] கண்ணால் காணும் [illegible]பட்டு அப்பழங்களை புசிப்பதற்காகப் பறித்து, உண்ணக்கூடிய பாகத்தை உண்டு அதன் விதைகளை எறிந்து விடுகின்ற இச்செயல்முறை விதைப் பரம்பலுக்கு ஏதுவாகிறது. எனவே இயற்கை அழகை, கவர்ச்சியைப் பயன்படுத்தித் தன் பல நோக்கங்களை நிறைவு செய்கிறது. அழகு காட்சிப் பொருளாக மட்டுமல்ல உலக இயக்கத்திற்கும் உறுதுணையாகிறது என்பதை அறிந்துகொள்ள முடியும். இயற்கை தனது பணியைச் செவ்வனே ஆற்றும் அதே நேரம் மனிதனும் தன் கைவண்ணத்தைக் காட்டத் தவறவில்லை.

இயற்கை எவ்வாறு உயிரினங்களுக்குள்ளேயே அழகையும் கவர்ச்சியையும் ஏற்படுத்தி இனவிருத்தி செய்யும் நோக்கத்தைப் பூர்த்தி செய்கிறதோ அதே பாணியில் மனிதனும் தன் நுண்ணறிவினால் தமது பல நோக்கங்களைப் பூர்த்தி செய்கின்றான். இயற்கை அழகைப் பார்த்த மனிதன் அதனைப் பிரதி எடுப்பது போன்று ஓவியமாகவும் சிற்பமாகவும் படைத்து வருகிறான். ஓவியத்தையும் சிற்பத்தையும் மதநோக்கத்துக்காகவும் அரசியல் நோக்கத்துக்காகவும் வியாபாரத்தை விஸ்தரிப்பதற்காகவும் பிரயோகிக்கின்றான் மனிதன். சவர்க்காரம், மதுபானம், சிகரெற் போன்ற பொருள்களை விளம்பரம் செய்யும் போது பெண்களை, நடிகர், நடிகைகளை, கிரிக்கெட் வீரர்களையும் சேர்த்து விளம்பரப்படுத்தி மக்களைக் கவர்கிறார்கள். வர்த்தகப் பொருள்களை தகுந்த இடங்களில் விதம் விதமாக ஒழுங்குபடுத்தி வைத்துக் காட்சிப்படுத்துகிறார்கள் வர்த்தகர்கள். இப்படி எத்தனையோ செயற்பாடுகளை மனிதன் செயற்படுத்தி மனிதனுடைய உணர்வுக்கும் ரசிப்புக்கும் ஏற்றவகையில் காட்சிப்புலத்தை அமைத்து அழகுக்கு அழகு சேர்க்கிறான். இயற்கைக் காட்சியாயினும் சரி செயற்கைக் காட்சியாயினும் சரி காட்சியும் மனமும் இணைந்து உருவாகும் அல்லது எழும் உணர்வே அழகாகும். எனவே அழகு என்பது கட்புலக் கவர்ச்சி உணர்வேயாகும்.

**சி.அருணகிரிநாதன்,**
**வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Yamaha DT xxxx (Recing) மோட்டார் வண்டி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778297928

## விற்பனைக்கு

மாமர விறகுகள், உடைத்த கொங்கிறீற் கற்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு 0776194363.

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியில் 7 பரப்பளவுள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 0779072160. தரகர் தேவையில்லை.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 37 வயதுடைய பூரம் 4ஆம் பாதம் தனியார்துறையில் நல்ல தொழில் (Pharmacist) புரியும் தீய பழக்கங்கள் அற்ற மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு: 0773911456

## வீடு வாடகைக்குண்டு

யாழ். வண்ணார்பண்ணையில் பிரப்பங்குளம் ரோட்டில் பெரிய வளவுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0757052686, 0112361697 (பி.ப.ஒரு மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்)

## English - Personal classes

உயர்நிலை ஆங்கில வகுப்புகள் மற்றும் IELTS வகுப்புகளுக்குத் தொடர்பு கொள்க.

0776271488

## வீடு விற்பனைக்கு

K.K.S Road இந்து அருகில், கோண்டாவில் பேருந்து, கோண்டாவில் சந்திக்கும் இடையில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:

0777406087, 0776636127, 0114854576

## வீடு வாடகைக்கு

கணேஸ்வரம், அளவெட்டியில் மின்சாரவசதி, குளியல் அறை, மலசலகூடம் ஆகியவற்றோடு வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0213201282

## ஈர விழிகளில் ஈராண்டு...





மண்ணில்
30.08.1981

விண்ணில்
13.02.2009

**இ.ராஜ்குமார்** (ராஜ்)

மண்ணில்
11.01.2003

விண்ணில்
13.02.2009

**ரா.நிதுஷா** (நிது)

**2009ஆம் ஆண்டு ஏற்பட்ட கொடூர யுத்தத்தின் போது!**

மனையாளை நினைக்கலையே
மகளாரைப் பார்க்கலையே
துணையாரும் நமக்கிலையே- எம்
துயர்துடைப்பார் யாருமிலையே
அப்பா! உமைத்தேடி நான் ஓடுகிறேன்
அக்கா! உமை நினைந்து தான் வாடுகிறேன்

தப்பாமல் வருவீரோ? தாவி எனை அணைப்பீரோ
இப்பாரில் யாருண்டு எமைத்தேற்ற
இனி யார் வருவார் எம் துயர் ஆற்ற?

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மகள், மாமி, மாமி, தங்கை, அம்மம்மா,
R.கலைச்செல்வி (செல்வி) R.நிதுஷா (நிது)

யாழ்ப்பாணம்.

## மனித உரிமைகள் கற்கை நிலையம் பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராதனை நிலையத்தினால் 2011ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள மனித உரிமைகள் பற்றிய கற்கை நெறிகளுக்குத் தகுதிபெற்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மனித உரிமைகள் சான்றிதழ்க் கற்கைநெறி (சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம்). இது 08 ஞாயிற்றுக்கிழமைகளில் (40 மணித்தியாலம்) மனித உரிமைகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு குறுங்காலக் கற்கை நெறியாகும். இவ்வருடத்தில் நடைபெறவுள்ள கற்கை நெறிக்கான பெயர்ப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

**தகுதிகள்**

1. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், மற்றும் மனித உரிமைகள் அல்லது சனசமூக அபிவிருத்திப் பரப்பில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் செயற்பாட்டாளராக இருத்தல். **அல்லது**
2. க.பொத.(சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்து 05 வருடகாலச் சேவை அனுபவம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனமொன்றில் சேவை புரிபவராக இருத்தல். **அல்லது**
3. க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு ஓர் அரச அல்லது தனியார் நிறுவனத்தில் 2 வருடகாலம் சேவையைப் பூர்த்தி செய்தவராக இருத்தல். **அல்லது**
4. பேராதனைப் பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு ஏதேனும் பல்கலைக்கழகத்திலோ பதிவு செய்யப்பட்ட உள்வாரிப் பட்டதாரி மாணவராக இருத்தல்.

கற்கை நெறிக்கான கட்டணம்: ரூபா 5000.00

2. மனித உரிமைகள் டிப்ளோமா கற்கை நெறி ( சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம்) இக் கற்கைநெறி 12 மாத காலத்துக்கு சனிக்கிழமைகளில் (224 மணித்தியாலங்கள்) நடைபெறும். இது 3 கட்டாயப் பாட அலகு களையும் 4 தெரிவுக்குரிய பாட அலகுகளையும் சுயாதீன ஆய்வுக் கற்கைகளையும் கொண்ட ஒரு கற்கை நெறியாகும்.

**தகுதிகள்**

1. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் ஜனசமூக அபிவிருத்தியோடு தொடர்பான செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதில் பங்கு பற்றியமை பற்றிய அனுபவத்தை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல். **அல்லது**
2. எமது நிலையத்தினால் அல்லது எமது நிலையத்தின் ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் நடத்தப்படும் மனித உரிமைகள் சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்திருத்தல். (பேராதனைப் பல்கலைக் கழகத்திலோ அல்லது வேறு பல்கலைக்கழகம் ஒன்றிலோ மனித உரிமைகள் பாட அலகைக் கற்றிருத்தலும் இப்பகுதிக்குள் உள்ளடங்கும்). **அல்லது**
3. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் தாம் பணிபுரியும் அரச, அரச சார்பற்ற அல்லது தனியார் நிறுவனம் ஒன்றின் தலைவர், விண்ணப்பதாரி இக்கற்கை நெறியை முடித்ததன் பின்னர் தமது நிறுவனத்தில் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவார் என்று குறிப்பிடும் எழுத்து மூலமான ஒரு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
4. முப்படைகளின், பொலிஸ் திணைக்களத்தின் அல்லது சிறைச்சாலைத் திணைக்களத்தின் அதிகாரியாக இருத்தல்.

கற்கை நெறிக்கான கட்டணம்: ரூபா 12,000.00

**கவனிக்குக:**

மனித உரிமை பற்றிய அறிவு தேவைப்படுகின்ற அரசாங்க சேவை, ஆசிரியர் சேவை, பொலிஸ் சேவை, முப்படைகள் மற்றும் சிறைச்சாலைச் சேவை என்பவற்றில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தமது தகுதிகளையும் அனுபவத்தையும் உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளோடு விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை கீழுள்ள முகவரிக்கு 2011ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் தபால் உறையின் இடது மேல்மூலையில் கற்கை நெறியின் பெயரைத் தெளிவாக எழுதுக. விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிய விரும்புவோர் தமது முகவரியிடப்பட்ட ஒரு தபால் அட்டையை இணைத்து அனுப்பவும். கற்கைநெறி ஆரம்பிக்கப்படும் சரியான திகதி, உரிய காலத்தில், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

**பணிப்பாளர், மனித உரிமைகள் கற்கை நிலையம்,**
**இல.04, கன்னங்கரா கட்டடம், கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**


## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,பெப்.13

உடுப்பிட்டி, இமையாணன் துவாளி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.(ம-236)

* * *

கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்குத் தீர்த்தமும் இடம்பெறும்.(ம-135)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.13

நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலயத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவராத்திரி தினம் வரை நடைபெறவுள்ளது.

மஹோற்சவ காலங்களில் தினமும் காலை 8 மணிமுதல் விஷேட ஹோமத்துடன் கூடிய அபிஷேகம், பூஜை வழிபாடுகள் இடம் பெறும். சிவராத்திரியன்று நான்கு சாமமும் விஷேட அபிஷேகமும் பூசையும் இடம்பெறும்.

### உயரம் பாய்தலுக்கான மெத்தை அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறைசார் மாணவர்களின் நலன்கருதி ஒரு லட்சத்து 15ஆயிரம் ரூபா பெறுமதியான உயரம் பாய்தல் மெத்தையொன்றினை நலன் விரும்பியொருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த கல்லூரியின் நலன்விரும்பி சோமகாந்தன் குடும்பத்தினர் இந்தக் கைங்கரியத்தைச் செய்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது சோமகாந்தன் தம்பதிகளுக்கு மாலை அணிவித்து கல்லூரிச் சமூகம் கௌரவிப்பினை வழங்கியுள்ளது.


## பழைய காளி கோயில் என விளங்கும் கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி

**திருவருள்மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில்**



இன்று 13.02.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும்

17.02.2011 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இரதோற்சவமும்

18.02.2011 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

அம்பிகை அடியார்கள் இந்நிகழ்வில் பங்கு கொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக!

**அம்பிகை அடியார்கள்.**

## போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்
யாழ்.நகரில்

1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தரும்
3. சகல ரோக நிவாரணியாகத் திகழும்

போலியானது | சரியானது

**சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில்** போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க இன்றிலிருந்து தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ண மூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே, பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
**Sithara Product**
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) ARPR/No:228

யாழ்.மாவட்ட ஏக விநியோகத்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
குறிப்பு: சந்திரச் சந்திக்கு அருகில்



U.S motor
SPARE PARTS Company

## US மோட்டார் வாகன உதிரிப்பாக கம்பனி யாழ்.குடாநாட்டு ஜப்பானிய வாகன உதிரிப்பாக வர்த்தகர்களுக்கு கராஜ் உரிமையாளர்களுக்கு வழங்கும் ஓர் நற்செய்தி

சகலவிதமான ஜப்பானிய பாவித்த வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை தமது ஜப்பானிய அலுவலகம் மூலமாக நேரடியாக இறக்குமதி செய்து விநியோகம் செய்வதில் US மோட்டார் உதிரிப்பாக கம்பனி கடந்த 15 வருடங்களாக முன்னோடியாக திகழ்கின்றது.

US மோட்டார் உதிரிப்பாக கம்பனி தமது சேவையை யாழ்.குடாநாடு மற்றும் வன்னி, வவுனியா மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க இருப்பதால் எமது ஜப்பானிய வாகன உதிரிப்பாக கம்பனிக்கு விற்பனை முகவர்கள்/ விநியோகஸ்தர்களை நியமிக்க இருக்கின்றோம்.

எம்முடன் இணைந்து எமது விற்பனை முகவர் விநியோகஸ்தர்களாக செயற்பட விரும்பும் வர்த்தகர்கள்/வர்த்தக நிறுவனங்கள் கராஜ் உரிமையாளர்கள் பின்வரும் எமது பிரதிநிதியுடன் உடனடியாக தொடர்புகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு: இராமநாதன்
தொ.பே: 0773874661

**US மோட்டார் உதிரிப்பாக கம்பனி**
**US Motor Spare Parts Company**
**இல.223, ஹில் வீதி, தெகிவளை.**

தொ.பே: 0714822643, 0112715726.
தொலைநகல்: 0112 734953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேயின் மனமறியாத தாய்

இராமாயணப் பாத்திரங்களுள் பரதன் அனுதாபத்துக் குரியவன். இராமன் ஒருவனே இவனைச் சரியாகப் புரிந்து வைத்திருந்தான். கைகேயின் சூழ்ச்சியால் கிடைத்த அரசைப் பரதன் ஏற்றுக் கொள்ளமாட்டான் என்ற திடமான நம்பிக்கை இராமனிடம் இருந்தது.

இராமனாதியோர் காடேறிய நிலையில் அவர்களை மீள அழைக்கும் நோக்குடன் பரதன் படையுடன் வருகிறான். பரதன் மீது இம்மியளவேனும் நல்ல அபிப்பிராயம் இல்லாத இலக்குவன், பரதனையும் படைகளையும் கொல்லப் போவதாகச் சூளுரைக் கின்றான்.

*''மதித்திலன் பரதன், நின்மேல் வந்தான் மதில்*
*பதிப்பெருஞ் சேனையின் பரப்பினான்''* என்றான்

ஆனால் இலக்குவனுடைய முன் கோபத்தை யும் அதனால் பகன்ற வீரவுரைகளையும் கண்ட இராமன் தனக்குரித்தான பொறுமையுடன் விடை பகர்கிறான்.

*''பெருமகன் என்வயின் பிறந்த காதலின்*
*வரும் என நினைக்கையும் மண்ணை என்வயின்*
*தரும் என நினைக்கையும் 'தவிர' தானையால்*
*பொரும்'' என நினைக்கையும் புலமைப் பாலதோ?*

என்பது இராமனது வாதம்.

''இலக்குவனா, பெருமகனாகிய பரதன் என்னிடத்திலுள்ள பேரன்பு காரணமாகவும் அயோத்தி அரசை மீள என்னிடம் தருவதற்காகவும் வருகிறான் என்று நினைப்பதைத் தவிர என்மீது போர் தொடுக்க வருகிறான் என நினைப்பது அறிவுடைமையாகுமோ?'' என வினவுகின்றான்.

**இலக்கியக் காட்சி – 79**

இராமாயணக் கதை அமைப்பின் படி பரதனுடைய நடமாட்டம் இடையிடையே தான் தென்படுகிறது. இராமன் காடேறும் வரை பரதன் பற்றிக் கம்பர் அதிக கவனத்தைச் செலுத்தவில்லை. இராமன் காடேறிய பின் கேகய நாட்டில் இருந்து மீண்டு வந்த பரதன் அனுதாபத்திற்குரியவனாகவே உலா வருகிறான்.

பெற்ற தந்தைக்குப் பிதிர்க்கடன் செய்யும் உரிமையை இழக்கிறான். இலக்குவனால் வெறுக்கப்படுகிறான். தனது பெற்ற தாயான கைகேயியைப் பார்த்து,

*''படர் எலாம் படைத்தானைப் பழிவளர்க்கும்*
*செவிலியை.....''*

எனக் குறிப்பிடும் நிலைக்கும் ஆளாகிறான். கைகேயியைப் பார்த்துத் துன்பங்களை எல்லாம் உண்டாக்கியவளை, பழியாகிய குழந்தையை வளர்க்கும் செவிலியை என இழிமொழி கூறுகிறான் பரதன்.

பரதனது துன்பியல் நிலைக்குக் காரணம் யார்? எனச் சிந்திப்பது நம்மவர் விழிப்புணர்வுக்கும் உதவியாக அமையும். கைகேயி பரதனைப் பெற்றவளே ஒழிய வளர்த்தவள் அல்லள். அரசனது செல்வாக்கினால் அவள் இராமனையே தன் மகனாகக் கருதி வளர்த்தாள். பரதனை கோசலையே வளர்த்தாள். பரதன் கோசலையுடைய மகன் என்ற கருத்தே கைகேயிடமும் காணப்பட்டது.

இராமன் முடி சூடப் போகிறான். கோசலைக்குப் புதுவாழ்வு வரப்போகிறது எனப் பொறாமைத் தீயை பற்றவைக்க முயல்கிறாள் கூனி. ஆனால் கைகேயி கொடுத்த விடை முரணாக அமைகிறது.

*''மன்னவர் மன்னனேல் கணவன், மைந்தனேல்*
*பன்னரும் பெரும் புகழ்ப் பரதன், பார்தனில்*
*என் இதன் மேல் அவட்கு எய்தும் வாழ்வு?''*

எனக் கேட்கிறாள். ''கோசலைக்கு எப்படிப் புதுவாழ்வு வரமுடியும்? கணவன் தசரதன் அரசர்களுக்கு அரசன். எடுத்துரைப்பதற்கு அரிய பெரும் புகழ் கொண்ட பரதன் அவள் மகன். இவற்றைவிட வேறென்ன புதுவாழ்வு அவளுக்குக் கிட்டும்'' என்கிறாள் கைகேயி.

சக்கரவர்த்தியாரும் வாரிசுரிமை பெற்ற இராமனை வளர்த்தெடுக்கும் பேறு வாய்க்கப் பெற்றமையால் கைகேயி இராமனிடம் உள்ளதைப் பறிகொடுத்தாள் என்பதற்கு அப்பால் பரதனைப் புரிந்து கொள்ளவும் தவறினாள்.



கூனியுடைய சூழ்ச்சி இராமன் மேல் வெறுப்பை உண்டாக்கியது. ஆனால் பரதன் பெற்ற தாயைப் போற்ற முடியாத நிலையையும் ஏற்படுத்திவிட்டது.

இராமனைக் காட்டிற்கு அனுப்பிய சம்பவங்கள் நேர்ந்த போது பரதன் கேகய நாட்டிற்குச் சென்றிருந்தான். ஆனால் அயோத்திக்கு மீளும் பரதன் தன் சொல்லைக் கேட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வான் என்ற அதீத நம்பிக்கை கைகேயிடம் காணப்பட்டது.

இவ்வாறு பரதனுடைய மனத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாமையால் கைகேயி இராமன் மீதுள்ள அன்பைத் துறந்தாள். சக்கரவர்த்தியாகிய கணவனின் இறப்பிற்குக் காரணமானாள். இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் தள்ளப்பட்டாள். பெற்ற மகன் பரதனால் ''பாழ்த்த பாவி'' எனப் பழித்துரைக்கும் நிலைக்கும் ஆளானாள். தான் பெற்றெடுத்த சேயின் மனத்தையறியாத குற்றமே கைகேயியைச் சூழ்ந்த இருளுக்குக் காரணமாகும். பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் கவனிக்க வேண்டிய மிக முக்கிய பாடம் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளல் ஆகும். அதிலும் தாயுடைய பங்கு மிகப் பிரதான மானதென் பதை இந்தக்காட்சி உணர்த்தி நிற்கின்றது.

**ச.லலீசன்**
(விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)



# "இசைவான வாழ்வே இன்பம்"

**''தேவா** உம்மை ஒரு விடயம் இன்று நான் கேட்கப் போகின்றேன். தப்பாகப் புரிந்து கொள்ள வேண்டாம். அதற்கான விடையைக் கூற வேண்டும்'' என்று யோகண்ணை என்னைப் பார்த்து கேட்டார். அவர் கடந்த நாற்பத்தெட்டு வருடத்தில் வாரத்தில் நான்கு தடவையாவது மாலை நேரங்களில் வந்து கதைப்பது வழக்கம். இந்த நாற்பத்தெட்டு வருடத்தில் கேட்காத என்ன கேள்வியைக் கேட்கப்போகிறார் என்று நினைத்தேன். சிலவேளைகளில் அவர் பெரிய பீடிகை போட்டு சில சாதாரண விடயங்களைக் கதைப்பதுண்டு. அவ்வாறுதான் இன்றுமென்று யோசித்து ''தாராளமாகச் சொல்கிறேன்'' என்றேன். மனிதன் உடனே என்னைக் கிண்டிகிளறுகின்ற மாதிரியான ஒரு வினாவைத் தொடுத்தார். ''நான் மட்டுமல்ல பொதுவாக எல்லோருமே மகாதேவருடைய மரணச்சடங்கின் போது கேட்ட கேள்விதான் இது. வாமதேவர் தான் மட்டும் பெண் பிள்ளை மாதிரி ஒதுங்கி வாழ்ந்து கொண்டு பிள்ளைகளை மட்டும் அசகாய சூரன் மாதிரி வளர்த்து வைத்திருக்கின்றார்'' என்று கூறிக்கொண்டே போனார். ''அண்ணை கேள்வியைக் கேள்வி மாதிரிக் கேட்கவேண்டும். உமது கேள்விதான் என்ன?'' என்று நான் கேட்டேன்.

''நீங்கள் வீட்டை விட்டே வெளியே வராமல் வாழ்ந்த மனிதர். ஆனால் பிள்ளைகளை எல்லா விடயங்களுக்கும் அனுப்பி பங்கு பெற வைக்கின்றீர்கள். ஒன்றில் உங்களை உங்கள் பெற்றார் வளர்த்த முறை தவறா? அல்லது நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்க்கும் முறைதான் சரியா? உங்கள் விடை என்ன?'' என்றார்.

எனக்கு வியர்த்துப் போய்விட்டது. என்னுடன் மட்டும் இருந்த சில விடயங்களை வெளியே கூறவேண்டி இருக்கின்றதென்று பலவாறு யோசித்தேன். இறுதியில் எனது வாழ்க்கை ஒரு படிப்பனையாக உலகிற்கு இருக்கட்டும் என்று நினைத்து விடை கூற துணிந்தேன். ''யோகண்ணை! இதற்கு விடை கூறினால் அது பாரதக் கதையை விட பெரிதாகத் தான் வரும். எனக்கும் எனது மனைவிக்கும் மட்டும் தெரிந்த சில விடயங்களை உமக்கும் கூறவேண்டி உள்ளது. என்னைப் போல் ஓர் ஆண்பிள்ளையும், அம்மாவைப் போல் ஒரு பெண்ணும் இந்த பூமியில் பிறக்கக் கூடாது என்றது தான் எனது பிரார்த்தனை. எத்தனை அந்தரங்கள், பழிப்புகள், புறக்கணிப்புகள் உள்ள வாழ்க்கை தான் எனது அம்மாவின் வாழ்க்கை.''

தந்தை களுத்துறை, தாய் இந்தியா, பிறந்தது கொழும்பு, கணவன் யாழ்ப்பாணம் இப்படியாக எல்லாம் புதுப்புது இடங்கள். ஐம்பது வயதுவரை களுத்துறையில் சீவியம். அதற்குப் பின் யாழ்ப்பாணத்தில் சீவியம். இப்படியாக சொந்த பந்தமற்ற புது இடத்தில் கணவனையும், பிள்ளையையும் நம்பியே அம்மாவின் சீவியம் சென்றது. யாழ்ப்பாணத்தின் மொழி, கலாசாரம் எதுக்குமே அம்மா பழக்கப்பட்டவர் அல்ல. அன்பான தாய், தந்தை இருவரையும் இழந்து தனிமையைப் பல விதத்திலும் அம்மா அனுபவித்து வாழ்ந்தார்.

அப்படிப்பட்ட அம்மாவுக்கு ஒரேயொரு பிள்ளையாக அதுவும் ஆண்பிள்ளையாய் பிறந்து நான்பட்ட வேதனைக்கும், சோதனைக்கும் அளவே இல்லை. அது எனக்கும் கடவுளுக்கும் தான் தெரியும்'' என்றேன். ''கடவுளே! எவ்வளவு லட்சத்திற்கு உரிமையாளராக, வசதியாக வாழ்ந்த நீங்கள் இப்படிக் கூறுகிறீர்கள்'' என்று ஒரு விதமான அவநம்பிக்கையுடன் யோகண்ணை கேட்டார். ''அண்ணை! நீங்கள் எனது வெளி வாழ்க்கையைத் தான் பார்த்தீர்கள். உள் மனதில் எத்தனை பரிதவிப்புகளுடன், ஏமாற்றங்களுடன் நான் அம்மாவின் சந்தோஷம் ஒன்றிற்காக அதாவது ஒருவரும் இல்லாத எனது தாயை மனம் நோக விடக்கூடாது என்றதற்காக எனது ஆசைகளை, உணர்வுகளை கட்டிப் போட்டு, உரிமைகளைக் கை விட்டு மரக் கட்டையைப் போல் வாழ்ந்து வந்தேன்'' என்றேன்.

''உங்களுக்கு இவ்வளவு மனநோ இருந்திருக்கு என்பது இப்போ தான் அறிகிறேன். உண்மையில் உங்களுக்குத் தியாக மனப்பாங்குண்டு'' என்றார் அவர். ''அம்மா அப்பாவிற்கு மூன் றாம் தாரம். இந்த ஊரில் மூன்றாம் தாரமாக யாரும் பெண் கொடுக்கமாட்டார்கள். எனவே அப்பாவிற்குத் தம்பியையா தாத்தா களுத்துறையில் உள்ள ஒரு முதலாளியின் மகளைச் செய்து வைத்தார். அந்தப் பெண்ணுக்கும் வயது நாற்பதாகியும் மணம் முடியாது இருந்தது. இறைவன் போட்ட திட்டத்தின் படி எல்லாம் நடக்கும். அப்பாவிற்கு அப்போது வயது நாற்பத்தெட்டு. அந்தப் பெண்தான் எனது அம்மா. அப்பாவிற்கு முதல் தாரம் திருமணம் முடித்து எட்டு மாதத்தில் நெருப்புக் காய்ச்சல் காரணமாக இறந்து விட்டா. பின்பு தான் தம்பியையா தாத்தாவின் மகள், அதாவது உங்களது மாமி மகாதேவரின் தாயைச் செய்தார். அவவுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் மூன்றாவதாக மகாதேவரும் பிறந்தார். மகாதேவருக்கு வயது ஆறு நடக்கும் போது அவாவையும் காலன் கவர்ந்து கொண்டான். தம்பியையா தாத்தா, பிள்ளைகள் மூவரையும் ஊருக்கு அழைத்து வந்தார். பின்புதான் எனது அம்மாவை அப்பாவிற்கு தானே முன்னின்று செய்து வைத்தார். அந்தக் காலத்திலும் தம்பியையா தாத்தாவின் உயர்ந்த மனப்பாங்கு போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். அவர் ஒரு கனவானாவர்'' என்றேன்.

உடனே யோகண்ணை ''வாமதேவா! எனக்கு இதுவொன்றும் தெரியாது. எனக்குப் பதினாறு வயதாக இருக்கும் போது நீர் ஊருக்கு வந்தீர். அப்போ உமக்கு வயது பதினொன்று, ஆறாம் தரத்தில் படித்துக் கொண்டு இருந்தீர்'' என்றார்.

''அம்மாவுக்குத் தப்பியையா தாத்தாவையும், அன்னம் பாட்டியையும் தான் தெரியும். வேறொருவரையும் தெரியாது. அதன் காரணமாக அவ யாரையும் நம்பமாட்டார். யார் மீதும் சந்தேகம் தான். இதனால் தான் அம்மா மிகவும் தனிமையை உணர்ந்தார். மில்ரன் கூறுவது போல் சொர்க்கத்தை நரகமாக்குவதும், நகரத்தைச் சொர்க்கமாக்குவதும் மனம் தான். அம்மாவிற்குச் சொர்க்கத்தை உணர முடியவில்லை. மாறாக அதை நரகமாக்கிவிட்டார். அத்துடன் என்னையும் துணையாக வைத்துக் கொண்டார். பயம் காரணமாகத் தான் என்னை ஒரு இடமும் போகவிடமாட்டார். எப்போதும் நான் அவருடன் இருப்பதையே விரும்புவார்'' என்றேன்.

''அப்ப இந்தக் காரணத்தால்தான் ஊரைவிட்டு வெளியே செல்லாமலும் வந்த நல்ல வேலைகளுக்கும் போகாமலும் இருந்தீரோ? இது எனக்குத் தெரியாது. நீர் கோழைத்தனத்தால் போகாமல் கடத்தினீர் என்றுதான் நான் நினைத்துக் கொண்டு இருக்கின்றேன்'' என்று தனது உண்மையான அபிப்பிராயத்தை யோகண்ணை கூறினார்.

''அம்மாதான் தன் வேலைக்குப் போகாமல் மறித்தவ என்பதை ஒருவரும் அறியக்கூடாது என்று விரும்பினார். பிரதானமாக மகாதேவ அண்ணைக்கு இவ்விடயம் தெரியவே கூடாதென்பர். நான் தான் வேலைக்குப் போவதை விரும்பவில்லை என்றே பிறருக்குக் கூறிவந்தார். எனக்கு வேலைக்குக் கடிதம் வந்தால் அம்மா சாப்பிடாது அழுதுகொண்டே இருப்பார். நான் ஏன் என்று கேட்டேன்.''

''நீ வேலைக்குப் போனால் நான் சாகவேண்டியது தான்.

*(24 ஆம் பக்கம் பார்க்க)*

**பா.பாலச்சந்திரன், சுன்னாகம்**

**உதயன்**
25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
**வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பெற்ற சிறுகதை 5**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையே இரங்கிடுவாய்....!



அடைமழையே மக்களுக்கு விடைகொடு மழையே
இடைவிடாது இராப்பகலாய் இரண்டு திங்கள்
தடையின்றிப் பொழிந்து தந்தாய் பெருவெள்ளம்
படையாய்ப் புகுந்து படைத்திட்டாய் பேரழிவை

இயற்கையுன் சீற்றத்தால் ஈரொன்பது மாவட்டப்
பயிர்ச்செய்கை வெள்ளத்தால் பாழாய்ப் போனதனால்
துயரத்தில் துடிக்கின்றார் தூக்கமின்றி எம்மக்கள்
இயற்கையே இரங்கிடுவாய் துயர்துடைக்க உதவிடுவாய்

விலங்குகள் விலக்கல்ல வெள்ளத்தின் விலங்கிற்குக்
கலங்குகின்றார் பலர் விலங்குகளை இழந்து
நிலமதிலே வெள்ளத்தால் நிம்மதியைத் தொலைத்து
குளமான கண்ணீரில் குளிக்கின்றார் எம்மக்கள்

வெள்ள நிவாரணம் வேண்டுவோர்க்கு வழங்க
உள்ளதை உவகையொடு உரியஇடம் கொடுப்போம்
இல்லார்க்கு உதவின் இறையருள் பெறலாம்
வெள்ளநிலை விலகிட வேண்டிடுவோம் இறைவனை

க.அருணைநாயகர்,
குளப்பிட்டி.

# கடவுள் எங்கிருக்கிறார்...?

பாவங்கள்
புண்ணியங்கள்
பல் பிறப்பின் கதைகள்
சொர்க்கங்கள்
நரகங்கள்
தீர்ப்புக்கள் பற்றி
கதைகள் பல விருக்க
நம்பிக்கைகள் இருந்தன
கடவுளின் மேல்...
ஆதாரப்படுத்தப்பட்ட
அடுக்கடுக்கான கதைகளில் எல்லாம்
இறைவன் நீதியாளனாக
நிறைந்திருப்பது புரியும்...
ஆனால்...
கலியுகத்தில் மட்டும்
கடவுளின் உதயம்
காட்சியற்றுப் போயிருக்கக்
காரணம் புரியவில்லை....
எல்லையிட முடியா இடர்கள்
தொல்லைகளின் நீட்சியமாய் கவலைகள்
இனி இல்லை யென்ற வலிகள்
எல்லாமும் ஏற்று
இன்றும் கதறுகிறோமே
கடவுள் எங்கிருக்கிறார்
கலிதீர்க்க....?
பிஞ்சுகள் கருக்கப்பட்டு
காய்கள் சிதைக்கப்பட்டு
கனிகள் களவாடப்பட்டு
மரங்களோ வேரறுக்கப்பட்டும்
காப்பாற்றத் துணை வரவில்லை
கடவுள் எங்கிருக்கிறார்
கலி தீர்க்க..?
நம்பிக்கைகள் சிதைவடைந்து
ஆண்டுகள் பல கடந்தாச்சு
ஆனாலும் ....
ஒளிக்கீற்றாய்க் கூட
ஒரு தடவை வரவில்லை
கடவுள் எங்கிருக்கிறார்
கலிதீர்க்க.....?

பா. பொன் நிலவன்,
மீசாலை.

# காற்றாடி

நீ குளிர
தான் சூடாகும்
சூரியன்

# தீ

உலகையே
ஒளிரவைக்கும்
அழியவைக்கும்

# பேனா

நீ மற மறுக்கும்
வார்த்தைகளையும்
வரையும்

# அன்பு

நீ வைத்தால்
இருக்கும்
நீ வைக்கலாம்
எதிர்பார்க்க
முடியாது?

# கண்கள்

உன்னைச் சுற்றி
வட்டமிடும்
காவலன்

# உதிரம்

நீ வாழ
பாய்ச்சப்படும்
செந்நீர்

# கதிரை

உன்னை
அடிக்கடி
சுமக்கும்
கர்ப்பவதி

# பூக்கள்

சின்னக்
குழந்தையின்
புன்னகை

# பரீட்சை

உன் பலத்தைப்
பார்க்க
நடத்தப்படும்
போர்!

# உணவு

தேவைப்பட்டால்
கிடையாது
இருக்குமிடத்தில்
தேவையில்லை

# மின்சாரம்

இருந்தால்
சந்தோஷம்
அதன் மீதிருந்தால்
துக்கம்

# நண்பர்கள்

இனிமை
சேர்க்கும்
குளிர்களி

# குழந்தை

கடவுள்
போட்ட
மாறுவேடம்



# நம்பிக்கைத் துரோகம்

தினமொரு வடிவில்
தினமொரு
நாட்டில் அபலைச்
சகுந்தலைகட்கு;
வேட்பாள துஷ்யந்தர்கள்
கொடுக்கும் வாக்குறுதிகள்!
தேனூறும் திருவாசகமாய்
காதில்
இனித்திடும்!
தேர்தலில் வென்றுவிட்ட
துஷ்யந்தர்கள்
சாக்கடையில் தள்ளிடுவர்
சகுந்தலைகளை!
கண்ணீருடன் வீதியில்
இருப்பார்கள் இவர்கள்
சிம்மாசனம் மீது
உல்லாசமாய் இருப்பார்கள்
அவர்கள்

மகேமோவன்

# யாசிப்புக்கள்

நான் யாரம்மா?
மகளின் வினாவதனால்
திடுக்கிட்டு
நிமிர்ந்திட்டேன்



தத்தித் தவழ்ந்து
என் மடியில்
உறங்கிய
பூஞ்சிட்டா
இப்படியாகக்
கேட்கிறது?

நீ என்
பிள்ளையம்மா
மூன்றே வயதான
பாலகியை
அணைக்கின்றேன்

என்ன நினைத்தாளோ
அவளும் என் தோளை
இறுகப் பிணைந்தபடி
உறக்கத்தில் அமிழ்கிறாள்

இடையிடையே பாதக்கொலுசு
இசைமீட்க
விழித்தெழுந்து எனைப் பார்த்து
குறுஞ்சிரிப்புச் சிரித்தெனைச்
சிலிர்க்க வைத்தாள்!

அவளின் உதடுகளின்
நளினத்திலெனை
மறந்து ரசித்தலுற்றேன்
கலக்கமது எனதுள்ளே
கனதியாய்க் கனக்கிறது!

நாளைய சவால்களை
எதிர்கொள்ளத் துணிச்சலொன்று
இவளுக்கு வந்திடுமா
என்பதுவாய்ப் பார்க்கிறேன்!

என் பார்வையதன் அர்த்தம்
புரியாமலேயே
மீண்டும் மழலைபேசி
எனதுள்ளே சலனத்தை
அதீதமாய்த்தான் ஊற்றுகிறாள்

திடுமென
உறக்கம் விழிபிதுக்க
தனை மறந்து
பஞ்சுப் பொதியாய்
எனையணைத்து
மீண்டும் துயிலத் தொடங்குகிறாள்

இந்தத் தித்திப்பு
அடுத்த ஜென்மத்திலும்
தொடர்ந்திடுமா என்பதுவாய்
பிஞ்சுக் கரம்பிடித்து
நானோ யாசிக்கிறேன்

திரு சண்பா

# மனதோடு மழைகாலம்



மனத்திரைகள் எங்கிலும்
மௌனமுற்றிருக்கும்
அழியாத ஞாபகங்கள்
அலைமோதிக் கொள்கிறது
நெஞ்சத்தினோடு
எனது இருப்பின்
நிச்சயங்களை
நிர்ணயிப்பனவாய் - அவை
அர்த்தம் கொள்கிறது
அவாவுற்றிருக்கும் என் நிலத்தின்
அழிக்க முடியாத வடுக்களிடையேயும்
வாலிபம் எங்கினும்
நிறைந்திருக்கின்ற
வர்ண சொப்பனங்கள் மிகுந்த
நினைவுகளை
மீட்டிக்கொண்டிட
மௌன யுத்தம் இன்று
என்னுள் உணரப்படுகின்றது
எதையெதையெல்லாம்
எண்ணிக்கொள்வது என்று
எண்ணிட முடியாது
எங்கும் நிறைந்தனவாய்
பல அழிவுறா ஞாபகங்கள்
இதயத்தினுள் ஒட்டிக் கொள்கின்றது
கோடிகள் கொடுத்திடினும்
மீள் [illegible]
பள்ளி [illegible]
திரும்பப் பெறமுடியாது
சஞ்சலம் கொள்கிறது மனது
புதுப்புதுப் பட்டங்களாய்
ஆண்,பெண் வேறுபாடின்றி
கூறி அழைத்த
பட்டமளிப்பு நாள்களை
நகைச்சுவையோடு எண்ணுகிறது
நெஞ்சம்.
அவ்வப்போது இதயத்தினுள்
குதித்தோடும் நதியாய்
காதல் ஞாபகங்கள் ஒருபுறமாயும்
காதல் நினைவுகளை மீட்டிடும்
திரையிசை கீதங்கள் மறுபுறமாயும்
குடைந்து செல்கிறது விழிகளினுள்ளே
தேதிகள் கட்டு கிறுக்கிக்கொண்ட
கவிதைகள்
யாருமே பார்த்திடாமல்
பவ்வியம் கொள்கிறது குறிப்பேட்டில்
புகையிரத வேகமாய்
சென்று கொண்டிருக்கும்
இவ்வாழ்தலில்
அழிவுறா இந் ஞாபகங்கள்
என்றும் நீங்கிடாது
குளிர்ச்சி மிகுந்தனவாய்
ஒட்டிக் கொண்டிருக்கும் என்றும்
மனதோடு மழைக்காலமாய்.

வெற்றி - துஷ்யந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பேரழிவு

## நாம் இயற்கையை அழித்தால் இயற்கை நம்மை அழிக்கும்

கிழக்கு மாகாணத்திலும் மலைநாட்டிலும் ஒரு பெரும் வெள்ளப் பேரழிவு ஏற்பட்டுள்ளது. கடுங்குளிரின் தாக்கமும் அதிகரித்துள்ளது. இவற்றால் பல உயிர்கள் பலி கொள்ளப்பட்டுள்ளன. இடப்பெயர்வுகளையும், சொத்தழிவுகளையும் ஏற்படுத்திய மழை வெள்ளத்தின் பாதிப்பிலிருந்து மீள்வதற்குத் தயாராகும் முன்பே அடுத்த பேரழிவு தொடங்கிவிட்டது.

ஒரு சில நாள்களுக்குள் அடைமழை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் ஆறுகளும் பெருக்கெடுக்க ஆரம்பித்தன. இலங்கையின் மிகப்பெரும் ஆறான மகாவலியின் சீற்றத்தில் கிழக்கு மாகாணமும், அருவியாற்றின் பெருக்கெடுப்பால் மன்னார், வடமத்திய மாகாணங்களும் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன.

வெள்ளத்தால் பன்னிரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்றும் நாட்டின் நெல் விளைச்சலில் 35 வீதம் அழிவடைந்து விட்டதாகவும் எழுபதினாயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் இறந்து விட்டதாகவும் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்து விட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இதை விட 17 மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டு விட்டன. நான்கு பேர் காணாமற் போய்விட்டனர்.

1958ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பின்பு இப்படி ஒரு பேரழிவை இப்போதுதான் இலங்கைத் தீவு சந்தித்துள்ளது. இந்த வெள்ள அழிவுகள் உடனடிப் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. அதே வேளையில் விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனக் குளங்கள் என்பனவற்றுக்கு ஏற்படுத்திய அழிவுகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இந்தப் பாதிப்புகளில் இருந்து மீட்சி பெற நீண்ட காலம் எடுக்கும் நிலையே தற்போதுள்ளது.

### மனிதனே காரணம்

உலகெங்கும் வெள்ளம், சூறாவளி, நிலநடுக்கம் போன்ற இயற்கை அழிவுகள் அடிக்கடி இடம்பெறுவதும் பல்லாயிரம் மனித உயிர்கள் பலி கொள்ளப்படுவதும் பல கோடி பெறுமதியான சொத்துக்கள் இழக்கப்படுவதும் வழமையான நிகழ்ச்சிகளாகிவிட்டன. உலகின் நன்மனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், இருவிதமான பேரழிவுகள் ஏற்படுகின்றன. ஒன்று போர்கள்; மற்றது இயற்கையால் ஏற்படும் பேரழிவுகள்.

போருக்கும் பேரழிவுகளுக்கும் மனிதர்களே காரணமெனவும் இயற்கை அழிவுகளுக்கு மனித சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்கள் உண்டெனவும் கூறப்பட்டாலும் இயற்கை அழிவுகள் ஏற்படுவதில் மனித குலத்தின் பெரும் பங்கு இல்லையென்று புறமொதுக்க முடியாது.

ஞாயிறு காரம்

இன்று வளர்ந்து வரும் துரித கைத்தொழில் திட்டங்கள், மின் தொழில்நுட்ப வளர்ச்சி, பெரும் நீர் மின்சாரத் திட்டங்கள், பெருமளவிலான காடழிப்புப் போன்றவை காரணமாகப் புவி வெப்பமடைவதும் நீர், காற்று என்பன மாசடைவதும் இயற்கைச் சமநிலையைப் பெருமளவு பாதிக்கின்றன. இப்பாதிப்புக்கள் இயற்கையைச் சினமடைய வைத்து இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட வழிவகுக்கின்றன.

புவி வெப்பமடைவதையும் சூழல் மாசடைவதையும் தடுப்பதற்கு மாநாடுகளும் ஆய்வுகளும் வருடந்தோறும் இடம்பெற்று வந்த போதிலும் இவை இன்று வரை எவ்வித பயனுள்ள விளைவுகளையும் தரவில்லை.

### தனிக் காரணங்கள்

இவை உலகம் முழுவதற்குமுள்ள பொதுவான ஒரு பிரச்சினையாகும். இலங்கையைப் பொறுத்தவரை இயற்கை அழிவுகள் ஏற்படுவதற்குச் சில தனிப்பட்ட காரணங்களும் உண்டு.

*ஒன்று:* பிரிட்டன் எமது நாட்டைக் கைப்பற்றிய பின்பு ஆங்கிலேயர்கள் தமது வர்த்தகத் தேவைகளின் அடிப்படையில் இங்கு ஏற்படுத்திய மாற்றங்கள்.

*மற்றது:* இலங்கை முழுமையாகத் தன்னைத் திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் பிணைத்துக் கொண்ட பின்பு இலங்கையின் ஆட்சியாளர்களால் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்.

இவை பற்றி ஆட்சியாளர்களோ அதிகார பீடங்களில் இருப்பவர்களோ அறியாமல் இல்லை. ஆனால் இவற்றைச் சீர்செய்யும் வகையில் நீண்ட கால அடிப்படையில் திட்டங்களை வகுத்துச் செயற்படும் கனிவோ, அக்கறையோ அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இங்கு குறுகிய அரசியல் நோக்கங்களே மேலோங்கி நிற்பதால் பெரும் மாற்றங்களை நோக்கிய நகர்வுகளை எவருமே விரும்புவதில்லை. அப்படியான மாற்றங்களை இலங்கை போன்ற நாடுகளுக்குக் கடன் வழங்கும் நிறுவனங்ளோ, நாடுகளோ விரும்பப் போவதுமில்லை. அது இன்றைய உலக மயமாக்கல் என்ற வலைப் பின்னலை அறுக்கும் கைங்கரியமாகவே அவர்கள் பார்க்கின்றனர்.



கல்லோயா, அல்லை, கந்தளாய், சேருவில, மணலாறு போன்ற பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்பு நோக்குடனேயே குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. வெள்ள நீர் ஓட்டம், போக்குக் குறித்துப் பெருமளவில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இதனாலேயே வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் இந்தப் பகுதிகள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றன.

### ஆங்கிலேயரின் அட்டூழியம்

ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பு மலையகம் பெருங்காடு நிரம்பிய பகுதியாகவே விளங்கியது. இடையிடையே அங்கு வாழ்ந்த சிங்கள மக்கள் படிக்கட்டு வயல்களை அமைத்து விவசாயம் செய்துவந்தனர்.

ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்ட பின்பு மலையகக் காடுகள் அழிக்கப்பட்டுத் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. இதன் காரணமாகப் பெய்யும் மழையின் நீர் மண்ணை அரித்து ஆறுகளில் கொண்டு வந்து சேர்த்தது. அது மட்டுமன்றி காடுகளில் தேங்கி ஊறி நிலத்தடி நீராகும் நிலைமையும் குறைவடைந்தது. இந்நிலையில் ஆறுகளின் ஆழம் குறைவடைவதும் கழிமுகங்கள் மண்ணால் நிரம்பும் நிலைமையும் ஏற்பட்டது. எனவே இந்த மண்ணரிப்புக் காரணமாக மண் சரிவுகளும் வெள்ளப் பெருக்குகளும் சாத்தியமாகின.

### அக்கறை அற்ற அரசுகள்

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு மலையகத்தில் கழிமுகங்களை ஆழப்படுத்தித் தேசிய அக்கறையுடன் ஆட்சியாளர்கள் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாறிமாறி வந்த அரசுகளோ தேயிலையால் கிடைக்கும் அந்நியச்செலாணியில் மட்டும் அக்கறை காட்டினவே அன்றி இப்பேரழிவைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களும் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமும் இன்று வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆறுகள் வழமை [illegible] போது [illegible] மாகின்றன.

நிலத்தடி நீர் வளம் குன்றுவதால் குடி தண்ணீருக்கே தட்டுப்பாடு வருமளவுக்கு சில பகுதிகளில் வரட்சி ஏற்படுகிறது. புதிய அணைகள் அமைக்கப்படும் போது குடியிருப்புக்கள் மட்டுமன்றி பெருமளவு காடுகளும் அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக மழை வீழ்ச்சி உரிய காலத்தில் இல்லாமல் போகும் நிலையும் பொருத்தமற்ற காலத்தில் பெய்து அழிவுகளை ஏற்படுத்தும் நிலையும் உருவாகின்றது.

மேலும் புதிய குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படும் போது பெருமளவான வளம் நிறைந்த காடுகள் அழிக்கப்படுகின்றன. குடியிருப்புகளும் வீதிகளும் அமைக்கப்படும் போது காட்டாறுகளின் பாதைகள் தடுக்கப்படுகின்றன. வழமையான நீரோட்டத்துக்கான வழிகள் அடைபட்டுப் போகின்றன. இதன் காரணமாக மழைநீர் ஆற்றிலோ, கடலிலோ போய்ச் சேர்வதற்குப் பதிலாகக் குடியிருப்புக்களில் புகுந்து வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகின்றன. அப்படியானால் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப விவசாயத்தையும் குடியேற்றங்களையும் உருவாக்குவது தவறா என்ற கேள்வி எழலாம்.

### சிங்களக் குடியேற்றங்களால் பாதிப்பு

இங்கு தான் ஒரு முக்கிய விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் குடியேற்றத் திட்டங்கள் இயற்கைச் சமநிலையில் பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டமிட்ட முறையில் அமைக்கப்படுவதில்லை. மாறாக இனவாத அடிப்படையில் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நோக்குடனேயே அமைக்கப்படுகின்றன.

கல்லோயா, அல்லை, கந்தளாய், சேருவில, மணலாறு போன்ற பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்பு நோக்குடனேயே குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. வெள்ள நீர் ஓட்டம், போக்குக் குறித்துப் பெருமளவில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இதனாலேயே வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் இந்தப் பகுதிகள் கூடுதலாகப் பாதிக்கப்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

---

**சந்திரசேகர ஆசாத்**

---

இம்முறை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெரும் பான்மையானவை மகாவலி கங்கை, அருவியாறு ஆகிய இரு பெரும் நதிகளுடன் சம்பந்தப்பட்ட பிரதேசங்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடிப்படையில் உற்று நோக்கினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஆறுகள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் விவசாய உற்பத்திக்கான அடிப்படைகள் என்பதைவிட பல தேசிய நிறுவனங்களின் பெரும் மின்சாரப் பசிக்குத் தீனி போடும் நோக்குடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக அதனுடன் சேர்ந்த விவசாயத் திட்டங்கள் நன்கு திட்டமிட்ட முறையில் இயற்கையுடன் இணைந்த முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் பின்னர் பெரும் இடர்களைச் சந்திப்பவர்கள் பொதுமக்களே.

### சுற்றுச் சூழல் அக்கறை இல்லை

இன்று உலகின் வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் பெரும் கைத்தொழில் முயற்சிகளை மூன்றாம் உலக நாடுகளை நோக்கித் திருப்பி விட்டிருக்கின்றன. இது மூலவளங்களையும் மனித உழைப்பையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டது. அதேவேளையில் இப்பெருங் கைத்தொழில் நிறுவனங்களால் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதைப் பற்றி யாரும் அக்கறைப்படுவதில்லை. தமது நாட்டில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கூட வளர்ச்சி அடைந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் மேற்கொள்வதில்லை.

இலங்கை போன்ற நாடுகளில் ஆட்சியாளர்கள் கூட அந்நிய முதலீடுகளைக் கவர்வது அபிவிருத்தியை மேற்கொள்வது என்ற பேரில் அவை பற்றி அக்கறை செலுத்துவதில்லை. இவ்வாறு இயற்கையை நாம் அழிவுக்குள்ளாக்குவதால் கொடிய வரட்சி, பெருவெள்ளம் போன்ற இடர்கள் அடிக்கடி நிகழ்வது தவிர்க்க முடியாது. அதாவது இயற்கையே எம்மை அழிக்கும் நிலை தவிர்க்க முடியாததாகிவிடும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
23 . 07 . 1950



உதிர்வு
14 . 01 . 2011

# கனகரெட்ணம் தவராஜா

## (ஓய்வுபெற்ற ஊழியர் - தொலைத்தொடர்பு )

நாம் பிறந்த அடுத்த நொடியில் நிம்மதியில் பூரிப்பு
அடைந்தாள் எம் அன்னை - தந்தை நீங்களோ,
அடுத்த நொடியில் இருந்து உங்களுக்கான வாழ்வை
விட்டுவிட்டு எமக்கென்று வாழத்தொடங்கினீர்கள்
உங்களுக்கான பிடித்தது, பிடிக்காதது எல்லாம்
மறைத்துக்கொண்டு எமக்குப் பிடித்தது, பிடிக்காதது
எல்லாம் உங்களுக்கானது.
எத்தனையோ சந்தர்ப்பங்களில் உங்களை நாம் பார்த்து
வியந்திருக்கின்றோம் உங்கள் சந்தோஷத்தை மறைத்து எங்கள்
சந்தோஷத்தை உங்கள் சந்தோஷமாக்கினீர்கள்.
எத்தனையோ வருடத்தின்பின் உங்களுக்கும் எமக்கும் உள்ள
இடைவெளியில் இருந்த அர்த்தம் இப்பொழுதில்
புரிந்துகொண்டோம்.........
அந்த இடைவெளிதான் எம் முன்னேற்றம் என்றும்........
உங்கள் நினைவுடன் எம் வாழ்வு தொடர்கிறது......

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு
நேரில் வந்தும் தொலைபேசி மூலம்
அனுதாபம் தெரிவித்தும் கண்ணீர்
அஞ்சலி பிரசுரித்தும் இறுதிச்சடங்கில்
அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து
உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள்,
அயலவர்கள் அனைவருக்கும் எமது
மனப்பூர்வ நன்றிகள்.

மனைவி- கமலாதேவி
பிள்ளைகள்- றுபேஸ்,
ராகேஸ்,
கோபிராம்.

134, புங்கன்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/575783)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளத்தின் அபிவிருத்திக்கு வழி பிறக்குமா...? (4)



மக்கள் மயப்படுத்தப்பட்டு நிறுவன ரீதியாக இயங்கும் இக்கூட்டுறவு சமாசங்களுக்கூடாக இவ் அபிவிருத்திப் பணிகள் முடுக்கிவிடப்படும் அதே வேளை இச்சமாசங்களில் அங்கத்துவராகி இத்தொழிலையே முதன்மைத் தொழிலாகச் செய்து வரும் எம்மினிய உறவுகளின் வாழ்வாதார விருத்தியை அடிப்படையாக வைத்த அபிவிருத்தியாகவே இது சார்ந்த எந்தத் திட்டங்களும் அமையவேண்டுமே தவிர வெறும் இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்ட பெரிய நிறுவனங்களின் பங்குரிமைக்கான வழிவிடுதலாகப் பனைசார் அபிவிருத்தி அமையக்கூடாது. எங்களூரிலுள்ள எமக்கு இயற்கையன்னை தந்த இக்கற்பகதருவிலிருந்து பெறும் எது மாதிரியான பயன்பாடும் கற்பத்தருவே வாழ்க்கையின் மூலாதாரமாக வரித்துக் கொண்டு வாழும் மக்களது முன்னேற்றத்துக்கு அடித்தளமாகவேண்டும். இதில் மாற்றுக் கருத்து ஏதும் எழுவதற்கேயிடமில்லை.

### குட்டையின பனையும் அதற்கான சாத்தியமும்

வடபகுதியை இனங்காட்டிக் கொள்ளும் இரு மரங்களான பனையும் தென்னையும் நீட்டி நிமிர்ந்து ஓங்கி வளரும் இயல்புடையன. இவ்வாறு வளர்வது இவற்றிலிருந்து முழுப்பயனையும் பெறுவதற்குத் தடையாக இருக்கின்றது. எந்தவிதமான உற்பத்திக்கான இயல்புகளிலும் மாற்றமேற்படாது பனை மரத்தின் உயரத்தைக் குறைத்து குட்டையின மரமாக மாற்ற வேண்டியது அவசியமாகிறது. குட்டையினமாக மாற்றிவிட்டால் பனைமரத்தில் ஏறும் சிரமத்தைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. சீவல் தொழிலில் ஈடுபடும் இளவயதுடையவர்களைத் தவிர ஏனையோர் பனை மரத்தில் ஏறும் திறனற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும் சீவல் தொழிலாளிகளுள் பலர் வேறு தொழில்களுக்குள் உள்வாங்கப்படுவதனால் எதிர்காலத்தில் இத்தொழிலில் ஈடுபடுவோரைக் காணக்கிடைப்பதே அரிதாகிவிடும். இதனாலேயே உயரத்தில் குறைந்த குட்டையின பனைமரங்களை விருத்தி செய்து நடவு செய்வதில் பெரிதும் அக்கறை கொள்ளவேண்டும். இதில் ஆய்வுக்குட்படுத்திய செயன்முறையாகக் குட்டையின பனை மரமிருப்பதால் இது சார்ந்த ஆய்வுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது விவசாயப்பீடமும் விஞ்ஞான பீடத்து தாவரவியற்றுறையும் பனை அபிவிருத்தி சபையினது பனை ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து செயற்படுதல் சிறப்புக்குரியது.

### பனங்கிழங்கும் சந்தைப்படுத்தலும்

பனை வளத்திலிருந்து பெறக்கூடிய உணவுப் பொருள்களுள் பனங்கிழங்கு முக்கியமானது. பரந்துபட்ட அளவில் பனங்கிழங்கினைப் பாத்தியிட்டுப் பெறுதல் நடைபெறினும் இதனது முக்கியத்துவம் குறைந்து விட்டதாகவே தெரிகிறது. எமது சுதேச உணவாக பனங்கிழங்கை வெறுமனே கிழித்து வெயிலில் காய விட்டு ஒடியலாகச் சேமித்து வைத்திருப்பதும் ஒடியல் மாவிலிருந்து செய்யப்படும் பிட்டு மதிய உணவுடன் குறிப்பாகச் சோற்றுடன் சேர்த்துப் படைக்கப்படுவதும் அவ்வுணவு நார்ச்சத்து அதிகமிருப்பதால் மலச்சிக்கலைப் போக்கும் எளிய உணவாக இருப்பதையும் தற்போதைய இளவயதினருக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டியிருக்கிறது. எப்படி எமது முதியவர்கள் நீண்டகாலம் வாழ்கின்றார்கள் என்பதற்கு அவர்கள் உண்ட சுதேசிய உணவும் அதில் அவர்கள் கலந்து உண்ட உணவு வகைகளுமே காரணம். பனங்கிழங்கிலிருந்து அதை அவித்து காய வைத்துப் புழுக்கொடியலாக்கி, வெறுமனே காயவைத்து ஒடியலாகப் பயன்படுத்தியது போக இவற்றைச் சந்தைப்படுத்தலிலும் சில உத்திகளைக் கையாண்டிருக்கிறார்கள். இவை தற்போது தென்னிலங்கை மக்களின் விருப்பத்துக்குரிய உணவாக இருப்பதுடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலிருக்கும் எம் உறவுகளுக்கும் சிறிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதனையும் அவதானிக்கலாம்.

பனங்கிழங்கிலிருந்து பெறப்படும் உணவு வகைகளை இந்த அளவில் மட்டுப்படுத்தி வைத்திருக்காது இன்னும் மதிப்பேற்றஞ்செய்து புதுப்புது உணவு வகைகளாக உருவாக்குவதன் தேவை எழுந்துள்ளது. இதுவிடயத்தில் ஆண், பெண் என்ற பேதமின்றி அனைவருமே முயற்சிக்கலாம். சுகாதாரமான சிறந்த சுதேச உணவு வகைகளைப் புதுமையைக் கலந்து உருவாக்குங்களேன். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வருகை தரும் தென்பகுதி மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகளை எங்களூர் உணவு வகைகளுக்கு அதுவும் சுதேச உணவு வகைகளுக்கு அறிமுகப்படுத்துங்களேன். இதைவிடுத்து எமது உடலுக்கு எள்ளளவும் ஒத்துவராத பீஸா, றோல்ஸ், மிக்சர் போன்ற உணவுப் பண்டங்களை வாரியடித்து வாங்கி உண்டு விரைந்து நோயைத் தேடிக் கொள்வானேன்?

### பனம் பூரான், நுங்கு சந்தைப்படுத்துதலுக்குரிய பொருள்

பனம் விதையிலிருந்து பெறப்படும் பூரான் பொதிசெய்யப்பட்டு விற்பனைக்கு விடக்கூடிய பொருள். எவ்வாறு நுங்கினை அழகிய ரின்களில் பொதி செய்து உலகச் சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கின்றதோ அதுபோல பூரானையும் சுத்தமானதாகப் பொதி செய்து அதன் சுவை மாறாது விற்பனைக்கு விட வழியுண்டு. அத்துடன் பூரானைப் பயன்படுத்திச் செய்யப்படும் புதிய உணவுவகைகளையும் அறிமுகப்படுத்தலாம்.

நுங்கு உற்பத்திக்காகப் பனங்காயை வெட்டியெடுப்பதால் பனம் விதைகளின் எண்ணிக்கையில் விழுக்காடு ஏற்பட்டுவிடும் என்னும் கருத்து கவனிக்கவேண்டியதே. அதேவேளையில் பனம் விதைகளின் தேவைக்கு மேலானதாக பனங்காய் பெறுவதற்காக உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். நுங்கு உற்பத்திக்காகத் தெரிவு செய்து தாய்ப்பனைகளை நடவு செய்தல் நல்லது. என்னதான் விஞ்ஞான உயர்ச்சியில் அதன் வேகத்துடன் ஈடுகட்டி வரும் விரைவு உணவுகளுக்குப் போட்டி போட்டு எமது சுதேச உணவுகளும் முன்னேற்றப்பட வேண்டும். உலகம் போகிற போக்கில் அதுவும் யாழ்ப்பாணம் அழகில் மயங்கி புதுப்பூச்சுக்கு முகம் கொடுத்திருக்கும் இந்தவேளையில் சுதேச உணவுகளுக்கும் எங்களூர் வளங்களைச் சிறந்த முறையில் பாதுகாப்பதுடன் பயன்படுத்தவும் நாம் பின்னிற்கக்கூடாது.

### பனம் பழமும் - களியும்

அது ஒருகாலம், சிறந்த பனம் பழமாக எடுத்து வந்து அடுப்பில் வைத்து சுட்டு உணவாக உண்டதொரு காலம் என அதை சுவைத்தவர்கள் பலரும் எண்ணி ஏங்குவது தெரிகிறது. அதில் அப்படியொரு சுவை, சுகமுங் கூட. பனங்களியை பிரித்தெடுத்து பனையோலையால் இழைத்த பாயில் பரவி வெயிலில் காய வைத்து பனாட்டாகப் பெறுவர். இதைத் தவிர பனங்களியின் பயன்பாடு வேறு எதற்குமே பயன்படுத்தப்படவில்லை. இடர்காலத்தின்போது சவர்க்காரத்துக்குப் பதிலாக பனங்களி பயன்படுத்தப்பட்டதாக அறிய முடிகிறது.

பனங்களியின் பயன்பாடு இவ்வளவு தானா? இதனைப் பயன்படுத்தி வேறு உணவு வகைகளோ அன்றியும் வேறு பொருள்களும் உருவாக வழிபிறக்காதா? எம்மினிய உறவுகளே! புதுமைகளுக்காக ஏங்கியிருக்கும் நீங்கள் இதிலும் புதுமைகளை உட்புகுத்தி புதுவகைப் பொருள்களைக் கண்டு பிடியுங்களேன்! பனங்களியை கோதுமைமாவுடன் சேர்த்து பனங்காய்க்காய் பண்டம் மட்டும்தான் உங்கள் புதுமையோ? இன்னும் இன்னும் புதுமைகள் உட்புகுத்தப்பட்டு பனை வளத்தை, அதன் பயனைப் புதிய அத்தியாயத்துக்கு எடுத்துச் செல்வோம்! வாருங்கள்.



பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை, விவசாயபீடம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# தாழையும் குமரிப்பூண்டும் வைத்தியத்தில் பயன்படுத்தப்படும் செடி வகைகளே

### தாழை

வேறுபெயர்: கைதை, கேதகி, முண்டகம், முடங்கல்.
தாவரவியற் பெயர் Pandanus odoratissimus (பன்டனஸ் ஓடோரேரிஸ்மஸ்)
குடும்பம்: Pandanaceac (பன்டனேசியே)
சிங்களப்பெயர் வேதகி
சமஸ்கிருதப் பெயர் கேதகி
ஆங்கிலப் பெயர் Screw Pine

"வாழை முழுமுதல் துமியத்தாழை" என்று நக்கீரர் தாழையைத் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடுகின்றார். தாழம்பூ சிவனின் கோபத்திற்கும் சாபத்திற்கும் உள்ளானாலும் பிற தெய்வங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. தாழையில் வெண்தாழை, செந்தாழை என்ற பேதங்களுண்டு. தாழையைப் போன்றிருப்பதால் அன்னாசிக்குப் பறங்கித்தாழை என்று ஒரு பெயருமுண்டு.



இது குத்துச் செடி. இலைகள் வாள்போல நீண்டு காணப்படும். ஒன்றுவிட்டொரு இலை ஒழுங்கு விளிம்புகளில் முள்களுண்டு. பூ நறுமணம் மிக்கது. மடலில் பூந்துணர்காய் அன்னாசிப்பழம் போன்ற வடிவுடையது. மிண்டி வேர்களையுடையது. தாழம்பாயில் படுப்போர்க்கு வாந்தி, தலைச்சுற்று என்பன நீங்கும். விழுதைப் பாலில் அரைத்துக் கொடுத்துவர சிலவகையான மலட்டுத் தன்மைகள் நீங்கும். ஆண்மையை அதிகரிக்கச் செய்யும். தாழம் சோற்றை உள்ளுக்குக் கொடுத்துவர சூதகக் கட்டு நீங்கும். வேர்ச்சாற்றை சர்க்கரையுடன் கலந்து கொடுக்க வெப்பு நீங்கும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### குமரிப்பூண்டு

வேறுபெயர்-குமரி, கன்னி, பிள்ளைக்கற்றாளை, சோற்றுக்கற்றாளை.
தாவரவியற்பெயர்-Aloe vera (அலோய்வேரா)
குடும்பம்-Liliaceac (லில்லியேசியே)
சிங்களப் பெயர்-கோமரிக்கா
சமஸ்கிருதப் பெயர்-குமாரி, கன்யா
ஆங்கிலப்பெயர்-Indian Aloe.

கல்+தாழை=கற்றாழை. அதாவது கல்லிலும் வளரக்கூடிய தாழைமரம் கற்றாழையாகும்.

திராவிடர் தோற்றம் பெற்று வாழ்ந்த பூர்வீக நிலம் குமரிக்கண்டமாகும். குமரிக்கண்ட காலத்தில் இருந்து இன்றுவரை [illegible] காணப்படும் ஒரு மூலிகையே குமரிப்பூடு எனப்படும் பிள்ளைக்கற்றாளையாகும். இதைக் குமரிப்பூடு என்று குறிப்பிட்டாலும் இது சிறு செடியாகும். இலைகள் கத்தி போன்று நீண்டிருக்கும். சதைப்பற்றானவை. இலை விளிம்புகளில் முள்கள் காணப்படும். இலையினுட் காணப்படும் சதை போன்ற பகுதியைக் கற்றாழைச் சோறு என்பர்

இக்கற்றாழைச் சோறு மிகவும் கசப்புச் சுவையுடையது. இதனை 6-7 தடவை தண்ணீர்விட்டு நன்கு அலசிக் கழுவ இக்கசப்புச் சுவை நீங்கும். அதன் பிறகு இதனைக் கறியாகச் சமைத்து உண்டுவர மூலநோய் குணமாகும். அடிபட்ட வீக்கங்களுக்குக் கற்றாழைச் சோறும், மஞ்சள்மாவும் கலந்து கொதிக்க வைத்து நல்லெண்ணெயில் குழைத்துக் கட்டிவர மாறும். கற்றாளைச் சோற்றுடன் சீரகம், கற்கண்டு சேர்த்தரைத்து குருதியும் சீதமும் கலந்த கழிச்சலுக்குக் கொடுக்கலாம். ஆசனக்கடுப்பையும் இது நீக்கும்.

கற்றாளையில் சாதாரணகற்றாளை, சிறுகற்றாளை, செங்கற்றாளை, பேய்க்கற்றாளை என்ற பேதங்களுண்டு. எனினும் இவற்றின் மருத்துவ குணங்களில் அதிக வேறுபாடுகளில்லை.

சிறு கற்றாளையின் மடலை குறுக்காகக் கீறிவிட பால்வடியும். உலர்ந்த பால் கரிய போளம் எனப்படும். இதனை மூசாம்பரம், இரத்த போளம் என்றும் அழைப்பர். இதை நீரிற்கரைத்துக் கொதிக்க வைத்து அடிபட்ட வீக்கம், மூட்டு வலி என்பனவற்றுக்குப் பற்றுப் போட மாறும். (தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்தவருடம் விசா கிடைத்து பயணமான யாழ் மாணவர்களி



EXPONET
Overseas Consultants
(Group of Exponet (Pvt) Ltd.)

**Head Office** : 379 - 1/2, Galle Road, Colombo 06.
**Jaffna Branch** : 102, 2/2, Navalar Road, Jaffna.
**London Branch** : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK

**Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# IELTS இன்றி

# STUDY IN UK

## Spot Admission!

### இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

Westminster Academy - London இருந்து வருகை தரவிருக்கும் Director மற்றும் Miss.Kamila Katarzyaவுடன் நேரடியாக கலந்துரையாடி உயர்கல்வி கற்பது தொடர்பாக இலவச ஆலோசனைகளையும் உடனடி அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

## Jaffna

| | |
|---|---|
| காலம் | 26th February 2011: 10.30 a.m. - 3.00 p.m. |
| வழங்குபவர் | Miss.Kamila Katarzya |
| இடம் | **Green Grass Hotel**<br>No: 33 Asirvatham Lane,Hospital Road,Jaffna |

## Colombo

| | |
|---|---|
| காலம் | 27th February 2011: 11.00 a.m. - 3.00 p.m. |
| வழங்குபவர் | Miss.Kamila Katarzya |
| இடம் | **Hotel Sapphire-Blue**<br>No: 371,Galle Road,Colombo-06 |

பதிவுகளுக்கு | **Colombo - 011 7 555511, Jaffna - 021 7538395**
**Hotline - 0117 555514, Fax - 0117 555517**

விசா நடை முறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.*

**எமது சேவை முற்றிலும் இலவசமானது**

* Condition Apply

**உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்**

ரில் சிலர்



EY, UK.

1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 150

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| 9 | | 10 | | | 11 | | |
| | | | | 12 | | | |
| | 13 | | 14 | | | 15 | 16 |
| 17 | | | | | 18 | | |
| 19 | | | | 20 | | | |
| 21 | | | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. ஈழத்துத் திருத்தலம்
6. மறி.
7. சிரசு.
8. சிஷ்யரை வழிப்படுத்துவோர்.
9. கோல்.
11. திடீரென/விரைவாக
12. சங்கீதத்தோடு சம்பந்தப்பட்டது.
13. ஓர் இராசி/பனை ஓலையில் இதைப் பின்னுவர்.
15. பிரி.
17. இரக்கம்/கிருபை.
18. விம்மல் செய்.
19. ஒருவரின் இயல்பு/பண்பு
20. ஒருவரை மதித்து அழைக்கும் சொல்.
21. சாப்பிடு
22. முதிர்வால் வருவது

### மேலிருந்து கீழ்

1. ஒரு நாட்டிய வகை.
2. திடீரென என்பதைக் குறிப்பது.
3. ஒரு தூர அலகு.
4. பர்வதம்.
8. சமூகத்தின் சிறிய அலகு.
10. நகரம்.
11. கூட்டல் குறி.
12. மகாத்மா காந்தி கடைசியாக உதிர்த்த சொல்.
13. மாயம் செய்யும் கிருஷ்ணன்
14. மகிழ்.
16. ஆம்பல் வகை மலர்.
17. தகைமைத் தன்மை
18. வியாதி.
20. துக்கத்தில் கத்துவது இப்படி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 148 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)பகவத்கீதை. (6)தவிடு. (7)சாமை (8விதை. (9) சத்தம். (11) சுந்தரி. (13)சைகை. (15)நினைத்தல். (17) வசதி. (19)தலைவி (20) பூசம் . (21)கல்வி. (22)சம்பாசனை (23)திறை

### மேலிருந்து கீழ்

(1)பதவியாசை. (2)கவிதை. (3)வடு. (4)கீர்த்தனை. (5)ஆமை. (7)சாம் (9)சந்நிதி.(10)தரித்தல். (12)தோல்வி. (14)கைவசம். (16)தலைவிதி. (18) சம்பா. (20)பூச. (21)கனை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 148 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ஆர்.தனபாலசிங்கம்,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

**2 ஆம் பரிசு** இ.திருவருட்செல்வம்,
பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு** ந.பிரியதர்சன்,
116/15 மடவள, பல்லந்த, கெக்கிராவ.

**4 ஆம் பரிசு** செல்வி கி.லக்சுலயா,
முக்குறுணிப் பிள்ளையார் வீதி, கல்வியங்காடு.

**5 ஆம் பரிசு** அ.பி.லோய்ஸ்,
41/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 150**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 23.02.2011 ஆம் திகதிக்கு முன்னர்கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 150 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.02.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **சி.பிரணவி,**
ஈஸ்வர பவனம், கல்வயல், சாவகச்சேரி.

(2) **ஸயிலா அருளானந்தம்,**
புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.

(3) **இ.துளஷா,**
உடுவில், சுன்னாகம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# "இசைவான...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? நான் ஒருவரையும் நம்பமாட்டேன். இவ்வளவு பெறுமதியான சொத்துகளை விட்டுவிட்டு ஏன் வேலைக்குப் போகிறாய்? அரசாங்கம் தரும் சம்பளத்தைப் போல் பல மடங்கு எமது தோட்டத்தில் இருந்து வருகிறது'' என்றார். மேலும் ''தான் இவ்வாறு கூறியதாக தான் உயிரோடு இருக்கும் வரை யாருக்கும் கூறுக் கூடாது என்று சத்தியமும் பெற்றுக்கொண்டார்''

''அடே அப்பா! இவ்வளவு சிக்கல்களுக்கு மத்தியிலா நீர் வாழ்ந்தீர்'' என்று யோகண்ணை வியப்புடன் கேட்டார். ''இது மட்டுமல்ல ஓர் இடத்திற்கும் செல்லவிடமாட்டார். கொழும்புக்கு ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் கூடப் பங்கு பெறவிடவில்லை. இதனால் பாடசாலையில் என்னை ஒருவரும் மதிப்பதில்லை. எனக்கோ பெரிய கவலை. அம்மாவிற்கு பெரும் மகிழ்ச்சி. நான் எனது துக்கத்தை வெளிக்காட்டுவதில்லை. இதனால்தான் எனது பிள்ளைகளை நான் பட்ட கஷ்டங்கள் படாமல் அவர்கள் இயற்கையாகச் சுதந்திரமாக மற்றவர்களைப் போல் சமூகத்துடன் சேர்ந்து வாழ வைத்துள்ளேன். அவர்களின் உணர்வுகள், ஆசைகள், வருங்கால முன்னேற்றங்கள் என்பனவற்றையும் அவர்களின் கடமைகள், உரிமைகள் எல்லாவற்றையும் உணர்ந்து நான் நடக்கிறேன். எனக்காக அவர்களை வாழச் சொல்லவில்லை. அவர்களையும் தங்கள் கடமை உரிமைகளை உணர வைத்துள்ளேன். அன்று சின்னவன் மகாதேவரின் ஈமைச் சடங்குகளை முன்னின்று நடத்தக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு அனுபவமும் துணிவும் உண்டாகுமளவுக்கு நானும் மனைவியும் அவர்களுக்கு வழிகாட்டியுள்ளோம்'' என்றேன்.

''தேவா! சின்னப்பிள்ளைகளுக்கு உரிமை என்று சொல்லித் தலையில் தூக்கி வைத்தால் அது பல பாதகமான விளைவுகளைக் கொடுக்கும். பிஞ்சில் பழுத்து விடுவார்கள். யாரையும் மதிக்க மாட்டார்கள்'' என்று யோகண்ணை தனது பயத்தை வெளிப்படுத்தினார். அவர் ஆதிக்கமுள்ள, அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகளுள்ள ஒரு முதிய சமுதாயத்தின் பிரதிநிதியாகவே அவரை நாம் கருதலாம். ஆனால் அது ஒரு சரியான முறையல்ல. சில படித்தவர்கள் கூடக் கடும் கட்டுப்பாடைச் சரியென்று கருதுகிறார்கள். இக்கொள்கையால் சிறுவர் சமுதாயம் மழுங்கடிக்கப்படும். அவர்களின் ஆற்றல்கள் அழிந்துவிடும். என்னைப் போல் ஒதுங்கி வாழவே முற்படுவர். இது ஒரு நல்ல உளவளம் என்று கூறமுடியாது.

யோகண்ணைக்கு இவற்றை விளங்க வைப்பது என்று நான் ஆழமாகச் சிந்தித்துக் கொண்டு இருக்கும் போது ''நீங்கள் ஆயிரம் காரணம் கூறினாலும் தலையிருக்க வால் ஆடுவதை நான் விரும்பமாட்டேன். பெரியாள்கள் எப்போது தமது உரிமைகளைக் கையாளுவது?'' என்று சற்றுப் படபடப்புடன் யோகண்ணை கேட்டார். அதற்கு நான் ''அண்ணை நீங்கள் பிழையாய் புரிந்துள்ளீர்கள். என்னைப் பாருங்கள் சின்ன வயதில் உலகம் தெரியாது வாழ்ந்ததால் பெரியவராகியும் மற்றவர்களைப் போல் வாழத் தெரியாது தவிக்கின்றேன். எல்லோரும் என்னை நல்லவன் என்று கூறுவார்கள். ஏனெனில் எனக்குப் போட்டிபோட்டு வாழ மனத்தைரியம் போதியவு இல்லை. பத்துப் பேருடன் கூடி ஒரு காரியம் செய்ய துணிவு கிடையாது. ஏன் உங்களுக்கு ஞாபகம் இருக்கும் மாணிக்கம் ஒழுங்கையை மூடி வேலி அடைக்கவும் நான் ஒன்றும் பேசாது இருந்தேன். பின்பு மகாதேவரும், நீங்களும் வந்து கூறிய பின்பு தான் எனக்குத் தெரியும். இதெல்லாம் எனது உரிமைகள் எவை? என்று அம்மா அப்பா கூறாது மூடி வளர்த்ததால் ஏற்பட்ட விளைவு. ஆனால் மகாதேவர் தம்பியையா தாத்தாவுடன் இருந்ததால் ஊர் விவகாரங்களில் ஒரு புலி. உலக நடைமுறைகள், வழக்கங்கள் எல்லாம் அவருக்கு அத்துப்படி. எனக்கு அம்மாவும் அப்பாவும் தான் உலகம். இதைத்தான் உங்களுக்குக் கூறினேன்'' என்றேன்.

உடனே ''எனக்கு இப்ப நீர் எதைக் கூறினீர் என்பதை அறிந்து கொண்டேன். நீர் கூறிய மாதிரி உங்கள் பெற்றார் உமக்குச் சில விடய அறிவுகளை வழங்கத் தவறி விட்டார்கள். வெளியில் அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் தரவில்லை'' என்று யோகண்ணை கூறினார்.

''எனக்கும் மகாதேவருக்கும் உள்ள பொதுஅறிவு வித்தியாசம் தான் நான் கூறவந்தது. பெரியவர்கள் சும்மா இருக்க சிறியவர்கள் ஆளவேண்டும் என்பது எனது கொள்கையல்ல. சின்ன வயதில் உலகத்தை அறிந்தால்தான் சில அனுபவங்களைப் பெற்றால் தான் பெரியவராகி ஒரு முழுமனிதனாகத் தனது உரிமைகள், கடமைகளை அறிந்து வாழமுடியும் என்பது எனது அபிப்பிராயம்'' என்றேன்.

''அதுசரிதான். உங்களை ஊரில் நடக்கும் பொது வைபவங்களில் காணமுடியாது. வீட்டில் விடமாட்டார்கள். இப்போதும் நீங்கள் கோயிலுக்கும், பொதுக்காரியத்திற்கும் பங்களிப்புச் செய்கிறீர்கள். ஆனால் ஒன்றிலும் நிர்வாகம் செய்வதற்கு அதாவது உங்கள் உரிமையை நிலைநாட்டுவதில்லை. ஒன்றும் கொடுக்காத வெறும் வயது வீரர்கள் தந்திரமாக அனுபவிக்கிறார்கள். உங்களுக்கு உங்கள் உரிமைகள், கடமைகள் பற்றிய விடய அறிவு [illegible] தேவரும் நானும் அவதானித்துள்ளோம்'' என்றார் யோகண்ணை.

''யோகண்ணை இதைத்தான் நான் உணர்ந்து எனது பிள்ளைகளை மகாதேவருடன் எல்லாவற்றுக்கும் அனுப்புவது. அவர்கள் இப்போ எதையும் நடத்தும் ஆற்றல்களைப் பெற்றுவிட்டார்கள். பிள்ளைகளைப் பொறுத்தவரையில் எனது கடமைகளைச் சரியாக ஆற்றியுள்ளேன். அவர்கள் பிறரிடம் தலை குனியாது நிமிர்ந்து வாழப் போதிய ஆற்றல்களை வழங்கியுள்ளேன். மனைவி மீனாவும் என்னளவிற்குப் பெற்றாரால் பாதிக்கப்படாவிட்டாலும் அவள் ஐந்தாம் ஆண்டில் புலமைப்பரிசில் சித்தியடையவில்லை என்பதற்காகப் பெற்றார் நடந்து கொண்ட விதம் அவளை மிகவும் பாதித்திருக்கின்றது'' என்றேன்.

''சில பெற்றார் தங்களால் முடியாத காரியங்களைப் பிள்ளைகளைக் கொண்டு செய்விக்க நிற்கின்றார்கள். டாக்டர், எஞ்சினியர் என்று அதுகளைப் போட்டு சித்தரவதை செய்கின்றார்கள். மூர்த்தி ரெக்னீசியனும் மனைவியும் அந்தப் பெட்டையைப் போட்டு வதைத்து அதற்கு மனநோய் ஏற்பட்டுவிட்டது. இப்ப கவுன்சிலிங் அது இது என்று சொல்லிக் கொண்டு திரியினம் அவள் ஒருநாளைக்குத் தற்கொலை செய்வேன் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறாளாம். இது எல்லாம் பிழையான அணுகுமுறையால்தான் ஏற்பட்டது'' என்று யோகண்ணை விடயத்தைச் சரியாகப் புரிந்து கொண்டார்.

''பிள்ளைகளைப் புத்தி சொல்லி வளர்க்க வேண்டும். மனம் நோகாது வளர்க்க வேண்டும். அவர்களின் உரிமைகள், கடமைகளைக் கூறி வளர்க்க வேண்டும். அப்ப தான் அவர்கள் வளர்ந்து தாங்களும் சரியாக வாழ்ந்து பிறரையும் வாழ வைத்து, மரபுகளையும் பேணி, உரிமைகளையும் உணர்ந்து வாழ்வார்கள். உலகத்தில் நல்ல குடிமக்களும் தலைவர்களும் உருவாகுவார்கள். உலகத்தில் பார்த்தால் பெரிய தலைவர்களை எடுத்துக் கொண்டால் சிறந்த குடும்பங்களில் பிறந்து, நல்ல தாய் தந்தையரின் வழிகாட்டலில் வளர்ந்தவர்கள் அல்லது சுயமாகக் கஷ்டப்பட்டு வளர்ந்து வந்தவர்கள்தான். அதாவது ஆப்ரகாம் லிங்கன், நேரு, காந்தி போன்ற வர்களைப் பாருங்கள். பிள்ளைகளைச் சமூகத்தோடு இசைவான முறையில் வாழப் பழக்க வேண்டும். எனது அம்மா எனக்கு விட்ட குறை அதுதான். நான் ஒரு மாதிரியாக சுகாகரித்துக் கொண்டேன். அதற்காகத்தான் எனது பிள்ளைகளை 'இசைவான வாழ்வே இன்பம்' என்ற இலட்சியத்தை மனதில் வைத்து வளர்த்துள்ளேன்'' என்றேன்.

அதற்கு யோகண்ணை ''தேவா என் வினாவுக்கு விடை கிடைத்துவிட்டது. அத்தோடு என்னிடமுள்ள பிழையான கொள்கைகளும் அழிந்தன. நீர் கூறிய மாதிரி உலக அறிவும், சமூகத்தோடு இசைவாக வாழ்வதும் எல்லோருக்கும் வேண்டிய ஒன்றாகும்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பெண்களுக்கு 4 குணங்களும் அவசியமா?



தமிழ்ப் பெண்களுக்கே உரித்தான குணங்கள் நான்கு என சங்ககாலம் தொட்டே கூறப்படுகின்றன. அவை "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு" ஆகும். இந்த நான்கு குணவியல்புகளும் பெண்கள் மத்தியில் அவசியம் தேவைதானா? என்பதை நாம் அனைவரும் சிந்திக்கவேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஔவையார் வாழ்ந்த காலப்பகுதியில் இந்த நான்கு குணங்களும் பெண்களுக்கான விதிமுறைகளாகவே இருந்தன.

சமுதாயத்தின் சட்டங்களுக்கும் சாஸ்திர முறைகளுக்கும் உடன்பட முடியாமல்தான் ஔவையாரே தனது இளமைக் காலத்தை துறந்து விநாயகப் பெருமானிடம் 'மூதாட்டி' தோற்றம் கேட்டு பெற்றுக் கொண்டார் என்பது புராண காலத்து கதைகள் ஆகும்.

ஆனால் இன்றைய நவீன காலம் அப்படியல்ல பெண்கள் நுழையாத துறைகளே இல்லை. இந்த நிலையில் எமது பெண்களுக்கு "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு" இவை இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா?

அச்சம் என்பது பயந்த சுபாவத்தைக் குறிக்கின்றது. இவை பெண்களுக்கு இருந்தால் அச்சத்தால் பல விடயங்களில் விலகித்தான் இருக்க முடியுமே தவிர விண்வெளி வீராங்கனைகளாகவோ நாட்டின் ஜனாதிபதியாகவோ வந்திருக்க முடியுமா?

இதற்காகத்தான் அக்காலத்தில் பாரதியார் புதுமைப் பெண்களாகப் பெண்களைக் கருதி "நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம். ஞான நல்லறம் வீடு சுதந்திரம் பேறுநற்குடிப் பெண்ணின் குணங்களாம்" என்று பெண்ணிலக்கணத்தை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். பெண்களை எழுச்சிப் பெண்களாகக் கருதும் காலம் மாறி சங்ககாலப் பெண்களாக வாழ வேண்டும் என்பதில் என்ன நியாயம்? இவை பெண்களால் பெண்களுக்குப் போடப்படுகின்ற விதிமுறைகள் என்றே கூற வேண்டும்.

பெண்களுக்கு நான்கு குணங்களும் இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அதனை சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் பயன்படுத்த வேண்டும். எந்த நேரமும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் தேவைப்படுகின்றதோ அந்த வேளையில் 4 குணங்களையும் பயன்படுத்தவேண்டும்.

ஆனால் தற்போது குடும்பம் தவிர்ந்த ஏனைய நண்பர்களுடன் பழகும்போது பெண்கள் தம்மை அறியாமல் பயிர்ப்புக் கொண்டு விலகி நிற்கும் தன்மை பெருமளவு குறைந்து கொண்டே வருகின்றன. இவற்றுக்குக் காரணம் கால வளர்ச்சியும் அவற்றில் பெண்கள் கொண்டுள்ள ஈடுபாடும்தான்.

இன்று யாழ்.மாவட்டத்தில் பல துறை சார்ந்த அலுவலகங்களில் பெண்களே தலைமைத்துவம் வகிக்கின்றார்கள். தலைமைத்துவப் பண்பில் முக்கியமானதே துணிவு தான்.

பண்டைய காலப் பெண்களைப்போல் தலை நிமிராமல் பாதம் பார்த்து நடக்க முற்பட்டால் ஒரு நிர்வாகத்தைத் தலைமை வகித்து நடத்த முடியுமா?

அரச அதிபர் உட்படப் பிரதேச செயலகங்களிலும் தலைமை அதிகாரிகளாகப் பெண் தலைவர்களே அலுவலகங்களை நிர்வகித்து வருகின்றனர்.

இந்த நிலையில் பெண்களிடம் 'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு' இவற்றை எவ்வாறு எதிர்பார்ப்பது.

மருத்துவ தாதியாகவோ அல்லது வைத்தியராகவோ இருக்கும் பெண்ணிடம் நாணத்தையோ அச்சத்தையோ எதிர்பார்த்தால் நோயாளிக்கு ஓர் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்போது பதற்றத்துடன் தான் செயற்பட முடியும். மாறாக பயிர்ப்பு அவளிடம் இருக்குமானால் உதவியாக நிற்கும். "ஆண்களையோ" அல்லது நோயாளியாக இருக்கும் "ஆண் நோயாளியை" எப்படி அணுக முடியும்.

மடம் என்பது பேதமை அல்லது அறிவீனமாகும். இந்தப் பேதமை பெண்களுக்கு இருக்க வேண்டுமானால் ஓர் எழுத்தாளராகவோ ஆசிரியராகவோ இருக்க முடியாது.

ஒருவரின் அறிவு, அறிவின்மை என்பன அவரவர் ஆற்றலில்தான் தங்கியுள்ளன. ஆண், பெண் என்ற இனவேறுபாட்டில் இல்லை.

பயிர்ப்பு என்பது 'அருவருப்பு' அல்லது அதாவது புதியனவற்றைக் கண்டு பின்வாங்குதலைக் குறிக்கும்.

ஒரு பெண்ணின் மனோநிலை என்பது அவளுக்குத்தான் புரிய வேண்டிய ஒன்றாகவே உள்ளது. இதனை மற்றவர்கள் கூறித் தனது இயல்பு நிலையை மாற்ற வேண்டும் என்பது கிடையாது. எனவே "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு" இவை அனைத்தையும் பெண்கள் தேவைப்படும்போது வெளிக்காட்டுகிறார்களே தவிர அவற்றை நவீன உலகில் தொலைத்து விட்டார்கள் என்பது அர்த்தமல்ல. பெண்கள் கட்டுப்பாட்டுடனும் அடக்கத்துடனும் தமது திறமைகளை வெளிக்காட்டும்போது அதனுடன் 4 குணங்களையும் வெளிப்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

நிலா.

# பெண்கள் இரகசியம் பேணத் தெரியாதவர்கள்

"ஊர்கூடினால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பார்கள். இதுபோல்தான் பெண்கள் குழுவாகக் கூடியிருக்கும் இடமும்.

இவர்களின் சிரிப்பொலியும் பேச்சின் குரல்களும் சேர்ந்து கும்மாளமாக இருக்கும்.

பெண்கள் பொதுவாக இரகசியங்களை மறைக்க மாட்டார்கள். இன்னொருவரிடம் கேட்கும் கதைகளை மற்றவர்களிடம் சொல்லாவிட்டால் அவர்களின் தலையே வெடித்துவிடும் நிலைமையில் இருப்பார்கள்.

ஏதோ ஒரு கதையில் தொடங்கி இன்னொரு கதையில் முடியும் அளவிற்குப் பெண்கள் கூடியிருக்கும் இடத்தில் அளவில்லாப் பேச்சிற்குக் குறைவே இருக்காது.

அவர்கள் தொலைக்காட்சித் தொடர்நாடகக் கதைகளையோ அல்லது இன்னொரு பெண் சம்பந்தப்பட்ட கதைகளையோ முக்கியப்படுத்திக் கதைப்பார்கள். இதில் சரி எது பிழை எது என்பதோ அவர்களின் மனதில் தோன்றாது.

அடுத்தவரிடம் எப்படியோ எனக்குத் தெரிந்ததை சொல்லி விட்டேனே என்று திருப்தி கொள்வார்கள்.

பொழுதுபோக்கான இவ்அரட்டை அரங்கத்தால் குடும்பச் சண்டைகள்,வேண்டாத பிரச்சினைகள்தான் பலனாகக் கிடைக்கின்றது. இது தேவைதானா?

சோபியா.

# விடியல் காண எழுந்திடு பெண்ணே!



வானிலே ஏறி
வலம் வரும் பெண்ணினமே
-இன்னும்
வரதட்சணைக் கொடுமை
மட்டும் -உனை
வதைப்பது தான் ஏனோ?

கல்வி கேள்வி ஞானம்
என்றெல்லாம்
ஏற்றம் கொள்கிறாய் நீ
எல்லாத் துறைகளிலும்
காட்டமாக உன் நெஞ்சை
கதிகலக்கும் வரதட்சணை- உனக்கு
காலமது தந்துவைத்த சாபக்கேடா?

ஒடுங்கி ஒதுங்கி பயந்து மறைந்து
வாழ்ந்துவிட்ட வாழ்க்கையது போதுமடி
எழுந்து நிமிர்ந்து விடியல் காண
புதுமைப்பெண்ணாய் மாறிவிடு இன்றே
காலத்தின் சாபத்தை முறியடித்து -உன்
காலடியில் உலகை நீ நிறுத்து.

கே. தர்ஷாயினி,
நல்லூர்.

# பெண்கள் துணையின்றி உலகம் இல்லை இதை உணரமறுக்கும் சமுதாயம் இது

ஜீவன், மானிப்பாய்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"

என அன்று பாரதியார் வீரகோசத்துடன் முழங்கியது ஏன்? வாழ்க்கையில் அடிமட்ட நிலையில் பல கெடுபிடிகளில் சிக்கித் தவிக்கும் பெண்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கே.

பெண்களின் அடிமைத்தனத்தையும் அதை உணராத ஆண்களின் அறியாமையையும் ஆரம்பத்தில் இருந்தே சமூகத்தினருக்குப் புரியவைப்பதற்கு பாரதியார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். செயல்மூலம் அன்றி எழுத்து வன்மையாலே ஏராளம்.

பெண்ணாகப் பிறப்பதற்கு என்ன பாவம் செய்தோம் என்று நினைக்கக்கூடிய அளவிற்குப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் அநீதி களும் அளப்பரியது. இதன் காரணமாகப் பெண்ணைப் பெற்றவர்கள் பட்ட வேதனைகள் சொல்லிலடங்காதவை.

அன்றைய காலத்தில் பிறந்தது பெண் பிள்ளை எனின் பெற்றவர்கள் முகத்தில் சோகம்.பெண் என்றால் அலட்சியம் என்று நினைக்கும் அளவிற்கு அவர்கள் மத்தியில் கருத்துக்கள் குடிகொண்டிருந்தன.

தம்மைப் பெற்றவளும் பெண்தானே என்று நினைப்பது இல்லை. அது மட்டுமன்றி ஒரு பெண்ணின் துணையின்றி எந்தச் செயல்களையும் சமுதாயத்தில் செய்ய முடியாது. இதனை ஏன் உணர மறுக்கிறார்கள். பெண்களை ஏன் அலட்சியம் செய்கின்றார்கள் என்பது தான் இன்னும் எமக்குப் புரியவில்லை.



"ஆண்" பிள்ளை பிறந்தால் ஆனந்தப்படும் சமூகத்திற்கு "பெண்" பிள்ளை மீது அப்படி என்ன வெறுப்பு.

தாய், சகோதரி, மனைவி எனப் பெண்களின் உறவு நிலைகள் குடும்பத்தில் விரிந்து செல்கின்றன. "மனைவி"என்ற ஸ்தானத்தில் இருக்கும் பெண்ணுக்கு உரிய கடமைகளும் பொறுப்புக்களும் அதிகம்.

ஆணும் பெண்ணும் சேர்ந்தது தான் உலகம் என்பது உண்மை. பெண் பிள்ளைகள் பற்றிய சமூகத்தின் பார்வை, அறியாமை, தாழ்வு மனப்பான்மை நீக்கி பெண் பிள்ளைகளைப் பெற்றாலே இறக்கும்வரை மன அமைதியுடனும் சந்தோசத்துடனும் வாழலாம் என்ற எண்ணம் எல்லாப் பெற்றோர்களின் உருவாக வேண்டும் அப்போதுதான் அவர்களின் வாழ்வும் மலர்ச்சியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 13.02.2011 முதல் 19.02.2011 வரை

தருபவர் - வித்யா

### மேஷம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் ஏற்பட்டுப் பணப் பற்றாக் குறையைச் சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சிலருக்கு உதவி செய்யலாம். மதியம் வரை ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். மனதிற்குச் சந்தோஷம் தரும் செய்தி கேட்கலாம். பெண்கள் வகையில் உதவி கிடைக்கலாம். தடைபட்ட காரியங்கள் எல்லாம் சுறுசுறுப்பாக முடிவுக்கு வரும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்குக் கூடும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று அவரால் ஆதாயம் பெறலாம். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவி களை மறுக்காமல் செய்வீர்கள். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். தொழில் சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையலாம். நீண்ட தூரப் பயணங் கள், வெளி நாட்டுப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பெண்கள் தொடர்பான விடயங் களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். திட்டமிட்ட வேலைகளில் தடை ஏற்படலாம்.

### இடபம்

சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். தர்ம, புண்ணிய காரியங்களில், ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். திட்டமிட்டதை விடச் சில காரியங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மருத்துவச் செலவுகளாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். முதலீடுகள் மூலம் ஆதாயம் பெற முடியாமல் தவிக்கலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கலாம். கொடுக்கல் வாங்கல் களில் கவனம் அவசியம். உத்தரவாதம் இல்லாத விடயங்களில் மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டாம். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். அரசியல் வாதிகள், அதிகாரிகள், தந்தை, சகோதரர்கள், மாமன், மைத்துனர்கள், நண் பர்கள், வகையில் சிரமங்கள், செலவுகள் நேரலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள்.

### மிதுனம்

கலகலப்பான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். சுப காரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். கேளிக்கை, கொண்டாட் டங்களால் சந்தோஷம் அடைவீர்கள். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். தொழில் ரீதியான பண வரவுகளைப் பெறலாம். தம்பதியர் இடையே பாசம் அதிகரிக்கும். உங்களின் நலனி லும், வாழ்க்கைத் துணைவர் நலனிலும் அதிக அக்கறை அவசியம். கூட்டுத் தொழில் புரிவோர் பங்காளிகளுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். பணி புரிவோர் உடன் பணிபுரியும் பெண்களிடம் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகள், அதிகாரிகள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்களில் சிலர் உங் களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு காப்பாற்றாமல் தவிக்க விடலாம். கடன் பிரச்சி னைகளாலும் கலக்கம் அடையலாம். செலவுகள் அதிகரிக்கும்.

### கடகம்

எதிர்பாராத வகையில் பண வரவுகள் வந்தாலும், அது மற்றொரு வகையில் செலவாகலாம். ஒரு விடயம் குறித்து மனக் கோட்டை கட்டி, அது நடக்காமல் போகலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். தொழில், உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தரும். வருமானம் அதிகரிக்கும். பல நாள்களாக இழுத்தடித்த வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடிவுக்கு வரலாம். நண்பர்கள் வழியில் திடீர் ஆதாயங்களைப் பெறலாம். வளர்ந்த பிள்ளைகள் மூலம் வருமானம் வரலாம். ஓய்வாக இருக்க முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வாகனங்கள் பழுதை சரி செய்வது, ஜம்பமான செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றால் பணம் கரையலாம். முகவர் தொழில் புரிவோர் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். ஆதாயகரமான பண வரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். வேண்டாத விவகாரங் களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்படலாம். தண்டச் செலவுகள் நேரும். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத நண்பர்கள் சிலரை சந்திக்கலாம். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளால் நன்மை அடைய மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். புதிய வீடு கட்ட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். இருந்தாலும், பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சேமிப்புகள் கரையும் வகையில், ஏதாவது செலவு உருவாகிக் கொண்டிருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் சிரமங்களைச் சந்திக்கலாம். காரிய வெற்றி உண்டு. பண வரவுகளைப் பெறலாம்.

### கன்னி

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். உறவினர்கள் சிலருடன் சேர்ந்து கூட்டாகச் சில காரியங்களைச் செய்வீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். எந்தக் காரியத்தையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடியும் என, நினைத்த வேலை களுக்கு அதிகமாகச் செலவாகலாம். பெரிய மனிதர்கள் பக்க பலமாக இருப்பர். அடிக்கடி நல்ல யோசனைகள் சொல்வர். தொழில் ரீதியாக அனுகூலமான மாற்றங்களைச் சந்திக்கலாம். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். சுப காரிய விடயங்களில் நல்ல திருப்பங்களைக் காணலாம். அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். பெண்கள் வகையில் சந் தோஷமான அனுபவங்களைப் பெறலாம். அவர்கள் சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். வழக்கு விவகாரங்களில், பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

### துலாம்

அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். எதிர்பார்த்த பண வரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பண வரவுகளையும் பெறலாம். நண்பர்கள் வழியில் உதவி கிடைக்கலாம். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். விருந்து, விசேஷங்களால் வீட்டில் கலகலப்பு குடி கொள்ளும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், மாற்று மொழி பேசுவோர் வகையில் எதிர் பார்த்த உதவிகள் கிடைத்தல் போன்ற வகையில் சந்தோஷம் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தொழில் ரீதியான அலைச்சல்கள் இருக்கும். வருமானமே இல்லை என்றாலும், ஏதாவது வேலையாக அலைந்து கொண்டிருப்பீர்கள். நண்பர்கள் சிலர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாம். செலவுகளும் கட்டுக்கடங்காமல் செல்லும். எதிலும் கவனமாகச் செயற்பட வேண்டும். தண்டச் செலவு நேரும்.

### விருச்சிகம்

நினைத்ததற்கு மாறாகச் சில விடயங்கள் நடக்கலாம். சிலர் உங்களிடம் சாமர்த்தியமாகப் பேசிக் காரியம் சாதிக்கலாம். உடல் உபாதைகளால் உற் சாகம் குறையலாம். சில வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் செலவு களைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங் களிலும் வெற்றி காண்பீர்கள். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர் கள். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர் வழியில் உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்குக் கூடும். நெடு நாள் களாக இழுத்தடித்த சில காரியங்கள் முடிவுக்கு வரும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பொலிஸ் தொடர்பான பணியில் இருப் போருக்கு வருமானம் அதிகரிக்கும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற் றம் உண்டு. இளைய உடன் பிறப்புக்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். பெரிய மனிதர்கள் அனுசரணை கிட்டும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். ஊக்கம், உற்சாக மாகச் செயற்படுவீர்கள். பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள்.

### தனுசு

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். உறவினர்கள் வழி யில் செலவு, சிரமங்களைச் சந்திக்கலாம். குழப்பம், தடுமாற்றம், தண்டச் செலவு போன்றவற்றை எதிர் கொள்ளலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே செய்யலாம். சில பிரச்சினைகளை நினைத்து பயப்படுவீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டும். மாற்று மொழி பேசுவோர், மாற்று மதத்தினரை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். எடுத்தோம், முடித்தோம் எனக் காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர் கொள்ளலாம். பண வரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றவும் கடும் சிரமப்படுவீர்கள். அரசியல்வாதிகள் சர்ச்சைக் குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் சிரமங்கள், வேலைப் பளு தொடரும். வேண்டாத இட மாற்றங்களாலும், வீடு மாற்றங்களாலும் அவதிப்படலாம். பண வரவுகளைப் பெறலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

### மகரம்

புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். பல நாள்களாக இழுத்தடித்த சில காரியங்கள் சுலபமாக முடிவுக்கு வரலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். எதிர் பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் பெறுவீர்கள். கடும் வேலைப் பளுவை எதிர் கொள்ளலாம். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லை களுக்கு ஆளாகலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப் பணத்தைச் செலவிடலாம். பெண்கள், சகோதரிகள், மனைவி வழி உறவுகள், வாகனங்கள், நீண்ட தூரப் பயணங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், ஜம்பமான செயற்பாடுகள் போன்றவற்றால் பணம் கரையலாம். எந்தக் காரியத்தையும் செய்யும் முன்னர், ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்யவும். மற்றவர்களிடம் எரிந்து விழும் சூழ்நிலை உருவாகும் என்பதால், பொறுமையாக செயற்பட வேண்டும். எதிர் பார்த்தபடி பணத்தைப் புரட்ட முடியாமல் தவிக்கலாம். எந்த வேலையும் சுலபமாக முடியாமல் இழுத்தடிக்கலாம். பிள்ளைகள் வழியில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### கும்பம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வழக்கமான சில வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்வீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். செல்வாக்கை காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். பல நாள்களாக வராமல் இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். பிள்ளைகள் வழியிலும், பெற்றோர் வழியிலும், நண்பர்கள், சகோதரர்கள் வழியிலும் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக் களைத் தவிர்க்க வேண்டும். பெண்கள், மாற்று மொழி பேசுவோர் வகையில் அனுகூலம், ஆதாயம் பெறலாம். எதிர்பாராத பண உதவிகளும் கிடைக்கலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு. உறவினர்களால் செலவு ஏற்படும்.

### மீனம்

மனதில் இனம் புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். சக ஊழியர்கள் அல்லது நண்பர்களுடன் ஈகோ பிரச்சினைகள் உண்டாகி, ஒருவரை ஒருவர் முறைத்துக் கொள்ளலாம். எதிர்பாராத பண வரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில், மற்றொரு செலவு ஏற்படலாம். சிலரிடம் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். பணப் புழக்கம் அதிகரிக்கும். கணிசமான பணம் கிடைத்து, கடந்த காலத்தில் அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். நிலம், பூமி வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. இளைய உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். உங்களின் சொற்கேட்டு நடந்து பெருமைப்படுத்துவர். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். நெடு நாள்களாக எதிர் பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். மாமன், மைத்துனர்கள் வீட்டு சுப காரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உரு வாகும். தந்தையுடன் ஏற்பட்ட மனக் கசப்பு நீங்கி பாசம் அதிகரிக்கும். தொழில் ரீதியான விடயங்களில் பெரிய அளவில் திருப்தி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## குன்றாய் மிளிரக் கற்றிடு

கல்வி தனைக் கற்றிடு
காலை வேளை கற்றிடு
இன்பம் துன்பம்
எது வந்தாலும்
இன்றே நீயும் கற்றிடு
நாளைய உலகின்
தலைவன் நீயேயென
இந்த நாடே
போற்றிடக் கற்றிடு!
குணத்தில் சிறந்த
நண்பர்களோடு
கூடி ஓடி விளையாடிடு
ஒழுக்கம் ஒன்றே
உயர்வு தரும்
இதை உணர்ந்தே
நீயும் கற்றிடு
தந்தை, தாயைப் போற்றிடு
தாய்மொழியைப்
பற்றிடு
கொண்ட கொள்கை
ஒன்றேயெனக்
குன்றாய் மிளிரக் கற்றிடு

**செ.ரவிசாந், குப்பிளான்.**

❖ தனக்குத்தான் எல்லாம் தெரியும் என நினைப்பவன் முட்டாள். மற்றவரின் கருத்தையும் கேட்பவன் அறிவாளி.

❖ நல்ல நண்பனுடன் பழகும் போது நல்ல குணங்கள் அதிகரிக்கின்றன. தீயநண்பனுடன் பழகும் போது இருக்கின்ற நல்ல குணங்களும் அழிந்து விடுகின்றன.

❖ தோல்வி அடையும் போது சமுதாயத்தின் கேலிப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாதே. அதே சமுதாயம் நீ வெற்றியடையும் போது வாழ்த்திவிட்டுப் போகும்.

❖ தன்னைத்தானே வென்றவன் ஆயிரம் வீரர்களை வென்றவனை விட மேலானவன்

**லோகிதாசன் தானுஜன், கொக்குவில்**

## பட்டம்

சின்னச் சின்னப் பட்டமாம்
சிங்காரப் பட்டமாம்
அண்ணன் செய்த பட்டமாம்
அருமையான பட்டமாம்

வட்டமான பட்டமாம்
வாலிருக்கும் பட்டமாம்
கிட்டவரப் பட்டமாம்
காற்றிலாடும் பட்டமாம்

பச்சை வண்ணப் பட்டமாம்
பறக்கும் நல்ல பட்டமாம்
அச்சமின்றிக் காற்றிலே
ஆடும் நல்ல பட்டமாம்

உயரப் போகும் பட்டமாம்
ஊசலாடும் பட்டமாம்
துயரமின்றி ஆடுமாம்
சிறுவர் மனங்கள் மகிழுமாம்



## பொது அறிவு

☞ உலகில் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
சீனா (40 கோடி பேர்)

☞ 2008 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மியன்மாரைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
நர்கீஸ்

☞ உலகின் இரண்டாவது சர்வதேச மொழி எது?
பிரான்சிய மொழி

☞ அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கி அழிக்கப்பட்ட தினம் எது?
11.09.2001

☞ உலகக்கோப்பைக் காற்பந்துப் போட்டியில் 5முறை பட்டம் வென்ற நாடு எது?
பிரேசில்

☞ இலங்கையின் தற்போதைய பொலிஸ்மா அதிபர் யார்?
விக்டர் பெரேரா

☞ மலையகத்தில் உள்ள 3 பல்கலைக் கழகங்களும் அமைந்துள்ள இடங்கள் எவை?
பேராதனை, சப்ரகமுவ, ஊவா வெல்லச

☞ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எத்தனை வயதில் நாடாளுமன்றத்தில் பிரவேசித்தார்?
24 வயதில்

☞ இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் யார்?
என்.செல்வக்குமரன்

**கு.சகண்யா,**
தரம்-9E, சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.

## தமிழுக்கு ஆங்கிலம் (3)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'இ' வரிசையில்:**

இல்லம்-Home
இலகு- Easy
இனம்- Race
இடி- Knock, Thunder
இடர்- Disaster
இவர்- This person
இரும்பு-Iron
இஞ்சி-Ginger
இறகு- Feather
இரவு- Night
இனிய- Sweet
இல்லாள்- House wife
இகழ்-Despice,Scorn
இணை- Equal
இடம்-Place
இங்கிதம்-Sweetness
இசை- Music
இயல்பு-Nature
இயற்கை- Natural
இயந்திரம்-Machine
இயக்கு-Start, Cause to act
இமை- Eyelid
இதழ்-Petel of a flower
இன்னல்- Sorrow
இலவசம்- Free
இலஞ்சம்- Bribe
இலங்கு- Shine
இலக்கணம்- Grammar
இரை- Prey- food of animals
இருள்- Darkness
இருக்கை- Seat
இரத்தம்- Blood
இலக்கு- Target, Aim

தொகுப்பு: ரம்யா

## விடை தெரியுமா? 95

1.மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு?
2.நேபாளத்தின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?
3.கடந்த ஆண்டில் அதிகம் சம்பாதித்து முதல் இடத்தில் இருப்பவர் யார்?
4.இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவராக இருந்து 1996 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணத்தை வென்றவர் யார்?
5.உலகில் மிக நீளமான மோட்டார்சைக்கிள் உருவாக்கியுள்ளவர் யார்?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 19.02.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்

**விடை 93**

1.ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்
2.3ஜி
3.பிளாஸ்மோடியம்
4.தேகாவில்
5.நதன் கௌரிச்சு

**வெற்றி பெற்றவர் விவரம்**

1.க.ஜவனி, 8 'சி',
யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
2.அ.அருண், 4 'பி',
யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.
3.கிறிஸ்ரீன் கௌஷிகா,
யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.
4.சூ.பிரியதக்ஷி,7'சி',
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
5.பே.மேனுஜா,
கிளி.சிவநகர் அ.த.க. பாடசாலை.
6.அ.கிரோஷினி, 12 'ஏ',
யாழ். புனித சாள்ஸ் ம.வி.

## மாணவத் தூரிகை



ஜெ.கார்த்தி,
4 'ஏ',
கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை.



கதிர்காமநாதன் அபந்தன்,
தரம்-6 'பி',
யாழ்.புற்றாளை மகா வித்தியாலயம்.



கு.தக்ஷி,
தரம்- 3,
யாழ்.புனித ஜோன்
பொஸ்கோ வித்தியாலயம்.



இ.அபிராமி,
தரம்-8 'டி',
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By:ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம்,பிளாக் வீதி சங்கானை.
Tel: 0776751649

**கார் விற்பனைக்கு**

300XXXX Nissan suny car
விற்பனைக்குண்டு.Full option
தொடர்பு: 0779856542

**இந்தியாவில் புலமைப்பரிசிலுடன் உயர்கல்வி**

# INDO ASIAN ACADEMY

**GROUP OF INSTITUTIONS**

HRBR 2nd Block, KALYAN NAGAR, Bangalore - 560 043. INDIA

**Get a Degree from Bangalore University**

**Scholarship Schemes open for July 2011 intake**



**Special offer to Sri Lankans - 25 Scholarships**

- Spot Admission based on academic merit • Free English Language course
- **Scholarship Fees for Bachelor Degree US$ 2300 (6 Instalments in 6 semesters)**
- Regular Fees for Bachelor Degrees US$ 4850 (6 Instalments in 6 semesters)

**Unique Features**

The Indo Asian Academy:-
- State-of-the-art IT enabled classrooms & Labs - fully Air conditioned;
- is situated in a pristine locality in Bangalore;
- is attracted by students from over 36 countries across the globe including Sri Lanka;
- has students from Sri Lanka sponsored by ICCR too;
- have excellent Scholar Teachers, dedicated and devoted in their disciplines;
- has excellent Hostel facilities with a wide range of delicacies to choose.

**Bachelor Degree Programs** - Duration 3 years (6 semesters)
*Affiliated to Bangalore University & Recognised by Government of Karnataka*

- B.C.A., Bachelor of Computer Applications
- B.B.M., Bachelor of Business Management
- B.Com., Bachelor of Commerce
- B.Sc., Electronics Comp. Sc., Maths
- B.Sc., Comp. Science Maths & Physics
- B.Sc., Journalism, Psychology & Comp. Science
- B.A., Journalism, Addl. English & Political Science
- B.A., Journalism, Addl. English & Psychology

**PUC** Pre-University Course 11th & 12th Grade/'A' Level/ 10+2 | Duration: 2 years
**Science, Commerce & Arts**
*Approved by Pre-University Education Board, Govt. of Karnataka, INDIA*
Eligibility: A pass in 10th std. or its equivalent or 'O' level

- Scholarship Fees for PUC/ 'A' Level US$ 1500 (2 Instalments in 2 years)
- Regular Fees for PUC / 'A' Level US$ 3000 (2 Instalments in 2 years)

**P.G Diploma in Nanotechnology** (6 Months)
Be trained by a leading Australian Nanotech Company
100% Global placement Assistance

Mr.N.Candeepan
Mob - 0770767114 / 0750398686
Easy Access Consultancy - புகையிரதநிலைய வீதி, கொக்குவில் கிழக்கு.
www.indoasianacademy.com

**STUDYING UK**

**February - April 2011 Intake**

பெப்ரவரி மாதத்தில் தொடங்கும் கல்லூரிக்கு மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திகொள்ளுங்கள்

ENGLAND

**STUDENT VISA**

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்

15 வருட அனுபவமிக்க ஆலோசகர்களால் சட்டத்தரணிகளின் வழிகாட்டலில் மிகச்சிறந்தமுறையில் ஆவணப்படுத்தப்பட்டு விண்ணப்பிக்கப்படும்.

**மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!**

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.
IELTS தேவையில்லை, விசேட ஆங்கில வகுப்புக்களுமுண்டு.
Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இலவசம்.
பகுதி நேர வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**Our Last Batch Student:**

S. Keerthiya, Urumpirai West, Urumpirai.
Mr. Lavakumaran, Wellvattithurai, Jaffna
V. Vijitharan, Pointpedro, Jaffna
Dinojkumar, Trincomalee
Vinson Amalathas, Pointpedro, Jaffna
T. Kiruthikka, Kantharmadam, Jaffna
Jonis Amalraj, Pointpedro, Jaffna
Mr. Aron Thusanth, Jaffna
R. Sanjeevan, Achuveli, Jaffna
V.Pushpakumar, Delf - Jaffna
Mr. A. Ravi, Jaffna
Miss. Bavatharani, Chavakacheri, Jaffna
R.Dinesh, Jaffna
Mr. Vikneswaran, Wattala, Colombo
Mr. Skywin, Batticolla

**WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIE**
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
0213207778 - 0726996969 - 0771919192.

**சர்வோதய பொருளாதார விவசாய அபிவிருத்தி சேவைகள் (கரண்டி) லிமிடட்**

# சீட்ஸ் (கரண்டி) லிமிடட்.

சீட்ஸ் நுண்நிதி வியாபார சேவைகள் பயிற்சி ஆகியவற்றின் முதன்மையான சேவைகள் வழங்குனர்

நாம் எதிர்பார்ப்பது தகுதிவாய்ந்த, திடநம்பிக்கையுடைய, அதி ஊக்கமுடைய தனித்து இயங்கும் திறன்மிக்க ஆற்றல் உடையவர்களை.

## பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான திறந்த நேர்முகப் பரீட்சை

**நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்வருமாறு :**

- 2011 மாசி 24ம் திகதி(24/02/2011) மட்டக்களப்பு பரீட்சார்த்திகள் மு.ப 11.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் மட்டக்களப்பு கிளைக்காரியாலயத்துக்குச் சமூகமளிக்க வேண்டும.
- 2011 மாசி 25ம் திகதி(25/02/2011) வவுனியா,மன்னார் பரீட்சார்த்திகள் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் வவுனியா கிளைக்காரியாலயத்துக்கு சமூகமளிக்க வேண்டும்.
- 2011 மாசி 26ம் திகதி(24/02/2011) யாழ்ப்பாணப்பரீட்சார்த்திகள் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் யாழ்ப்பாணக் கிளைக்காரியாலயத்துக்கு சமூகமளிக்க வேண்டும்.

### பிராந்திய கணக்கு உதவியாளர்
(வடபிராந்தியம் - வேலை செய்யும் இடம் - வவுனியா)

**தேவையான தகைமைகளும் அனுபவமும் :**
- க.பொ.த (உ/த) த்துடன் HNDA III அல்லது AAT III.
- கணக்கு துறையில் 2 வருட அனுபவம்.

வயது : **35 வயதிற்கு கீழ்**
சம்பளம் : **பேசித்தீர்மானிக்கப்படும்**

### கணக்கு உதவியாளர்கள்
(மட்டக்களப்பு/ வவுனியா/ மன்னார்/ யாழ்ப்பாணம்)

**தேவையான தகைமைகளும் அனுபவமும் :**
- க.பொ.த (உ/த) த்துடன், HNDA II அல்லது AAT II.
- கணக்கு துறையில் 1 வருட அனுபவம்.

வயது : **35 வயதிற்கு கீழ்**
சம்பளம் : **பேசித்தீர்மானிக்கப்படும்**

### வெளிக்கள உத்தியோகத்தர்கள்
(மட்டக்களப்பு/ வவுனியா/ மன்னார்/ யாழ்ப்பாணம்)

**தேவையான தகைமைகளும் அனுபவமும் :**
- கணக்கியல் பாடம் உட்பட க.பொ.த (உ/த)
- சமூக அபிவிருத்தி சம்பந்தமான செயற்திட்டத்தை விருத்தி செய்வதிலும், பயிற்சி அளிப்பதிலும் 2 வருட அனுபவம்.

வயது : **30 வயதிற்கு கீழ்**
சம்பளம் : **பேசித்தீர்மானிக்கப்படும்**

### கணக்கு எழுதுவினைஞர்கள்
(மட்டக்களப்பு/ வவுனியா/ மன்னார்/ யாழ்ப்பாணம்)

**தேவையான தகைமைகளும் அனுபவமும் :**
- க.பொ.த (உ/த) த்துடன், HNDA I அல்லது AAT I.
- கணக்கு துறையில் 6 மாத அனுபவம்.

வயது : **30 வயதிற்கு கீழ்**
சம்பளம் : **பேசித்தீர்மானிக்கப்படும்**

**பொதுவான தகைமைகள்**
- ஆங்கிலத்தில் எழுதவும்,பேசவும் தேர்ச்சியுடையவராய் இருத்தல். (சிங்கள மொழி அறிவு மேலதிக தகமையாகக் கொள்ளப்படும்)
- கணனி அறிவுடையவராகவும், ஒத்துழைத்து வேலை செய்யும் திறமை கொண்டுள்ளவராகவும், குழவாக செயற்படும் திறமை கொண்டுள்ளவராகவும் இருத்தல்.
- சக ஊழியர்களுடன் சுமூக உறவை பேணிக்கொள்ளும் திறமை உடையவராக இருத்தல்.

**திறந்த நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சார்த்திகள் உறவினர் அல்லாத அறிந்தவர்கள் (ஒருவர் வேலை பற்றி அறிந்தவர்) இருவர்களது பெயர், விலாசம் என்பவை அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தையும், முத்திரை அளவுடைய நிறப்புகைப்படத்தையும் கொண்டு வரவேண்டும்.**

பிரதான நிறைவேற்று அதிகாரி:, முகாமைத்துவப் பணிப்பாளர்
**சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்திச் சேவைகள் (கரண்டி) லிமிட்டட்**
"அர்த்ததர்ம கேந்திரம்", இல.45, ராவதாவத்தை வீதி,
மின்னஞ்சல் : recruitment@seeds.lk
இணையத்தளம் : www.seeds.lk தோ.பே.இல : 011-5444666

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 7

# மருத்துவத்துறையில் நோயாளர் உரிமைகள்

மருத்துவர்கள் நோயாளர்களுக்கு சொல்லுவது ஆலோசனைகள்தான். அவை கட்டளைகள் அல்ல. அவற்றை கடைப்பிடிப்பதா அல்லது வேண்டாமா எனத் தீர்மானிப்பது அந்த நோயாளி தான். சொல்லிய ஆலோசனைகளை நோயாளி கடைப்பிடிக்காதுவிட்டால் அந்த நோயாளியிடம் கோபித்துக்கொள்ளும் உரிமை மருத்துவருக்கு இல்லை. தனது ஆலோசனையையும் மீறி நோயாளி புகைப்பிடித்தாலும், குடிவகைகள் பாவித்தாலும், மருந்துகளை ஒழுங்காக எடுக்காதுவிட்டாலும் உணவுக்கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காவிட்டாலும் கிளினிக்குகளுக்கு ஒழுங்காகப் போகாது விட்டாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நோயாளியிடம் மருத்துவர் கோபித்துக் கொள்ளமுடியாது. எனவே தனது உண்மையான நிலைப்பாட்டையும் உணர்வுகளையும் நோயாளிகள் மருத்துவருக்குத் தயங்காமல் வெளிக்காட்டவேண்டும். இது மிகவும் அவசியமானதாகும். காரணம் அந்த நோயாளி எப்படி நடந்துகொள்கிறார் என்பதைப் பொறுத்து அவரின் சிகிச்சை முறைகளிலே மாற்றம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

மருத்துவர் கோபித்துக்கொள்வார் என்பதற்காக சில தகவல்களை மறைக்கும்பொழுது அல்லது ஒரு பிழையான தகவலை மருத்துவருக்குச் சொல்லும் பொழுது அது பாரதூரமான பல விளைவுகளை ஏற்படுத்தலாம்.

3

மருத்துவக்குழு உங்களிடம் கோபப்படும் என அஞ்சி பிழயான தகவல்களை நீங்கள் தெரிவிப்பீர்களாக இருந்தால் உங்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளும் பிழையானதாகவே இருக்கும். இவ்வாறான நிலைமைகள் தவிர்க்கப்படவேண்டும்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் நோயாளி ஒருவர் ஏதாவது ஒரு காரணத்திற்காக வீடு செல்வதற்கு விருப்பப்பட்டால் அவ்வாறு செல்வதற்கான பூரண உரிமை அந்த நோயாளிக்கு இருக்கிறது. அதற்காக மருத்துவக்குழு நோயாளியுடன் கோபித்துக்கொள்ள முடியாது. சொந்த விருப்பத்தில் வீடுசெல்லும் நோயாளிக்கும் நோய்பேண அட்டை, வீட்டில் பாவிப்பதற்கான மருந்து, நோய்கள் பற்றிய பூரண விளக்கங்கள் என்பன வழங்கப்படும். அவற்றைகேட்டுப் பெற்றுக் கொள்ளும் உரிமையும் கடமையும் நோயாளிக்கு இருக்கிறது.

இன்னுமொருசமயம் அவருடைய நோய் கடுமையாகி வைத்தியசாலைக்குச் செல்ல விருப்பப்பட்டால் எந்தவித மனக் குளப்பமும் இன்றி மீண்டும் வைத்திய சாலைக்குச் செல்ல முடியும். சொந்த விருப்பத்தில் வீடு சென்றதால் மீண்டும் வைத்தியசாலையில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை.

மருத்துவர்களும் மருத்துவக்குழுவும் நோயாளர்களுக்கு ஆலோசனையும் அனுசரணையும் வழங்கி அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு இருக்கிறார்களே தவிர நோயாளர்களைக் கண்டிப்பதோ, தண்டிப்பதோ அவர்களின் நோக்கம் அல்ல. இருந்தபோதும் தமது ஆலோசனைகளையும் சிகிச்சை முறைகளையும் பின்பற்றாத காரணத்தினால் நோயளர்களுக்கு ஏதாவது ஆபத்து நடந்து விடுமோ என்ற ஏக்கத்தில் உரிமையுடன் நோயாளர்களை சற்று கண்டித்துப் பேசும் ஒரு நிலை இருந்து வருகிறது. இது மருத்துவனும் ஒரு மனிதன் என்ற நிலையிலே அவனது மனதில் இருந்து எழுகின்ற மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வே. கண்ணுக்கு முன்னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அவரைத் தடுத்தும் கேட்காமல் அதே திசையில் சென்று கொண்டிருக்கும்பொழுது அதனை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் கடினமானது. இந்த நிலையே பல சமயங்களில் மருத்துவனுக்கு ஏற்படுகிறது.

(தொடரும்)

டாக்டர்.சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# ஒற்றைத் தலைவலி



ஒற்றைத் தலைவலி வரக் காரணம் அதிகமான மன அழுத்தமே ஆகும்.

ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் மிகுந்த கண்டிப்புடனும் வளைந்து கொடுக்காமலும் இருப்பார்கள். மேலும் ஒற்றைத் தலைவலியானது வயிறு மற்றும் பார்வை சம்பந்தப்பட்டது.

எனவே வயிற்றைச் சுத்தமாக வைத்திருப்பது முக்கியம்.

**காரணங்கள்**

குறைவான சர்க்கரை அளவு, ஒவ்வாமை, சில மருந்துகளை அதிகமாக எடுத்துக்கொள்வது, சத்துக் குறைபாடு, அதிகப்படியான வேலை, சரியான தூக்கம் மற்றும் ஓய்வு இல்லாமை, அதிகப்படியான குடிப்பழக்கம், புகைப்பழக்கம்.

**அறிகுறிகள்**

இடைவிடாத தலைவலி, வாந்தி, உடல்வலி, கண் மங்குதல், வயிற்றுக் கோளாறுகள்.

**தீர்வுகள்**

பொதுவாக ஒற்றைத் தலைவலி பல காரணங்களால் வருகிறது. எனவே எது தங்களுக்குப் பொருந்துகிறது எனக் கண்டறிந்து தீர்வுகளை செயல்படுத்தவும்.

* எலுமிச்சைத் தோலை நன்கு காயவைத்து அரைத்து நெற்றியில் பற்று போடுவது நல்ல பயனைத் தரும்.
* நன்கு கனிந்த திராட்சைப் பழங்ககளை நன்கு அரைத்து தண்ணீர் சேர்க்காமல் அருந்த வேண்டும்.
* கோஸ் இலைகளை நன்கு நசுக்கி ஒரு சுத்தமான துணியில் கட்டி தலையின் மீது ஒத்தடம் தரலாம். கோஸ் உலர்ந்து விட்டால் புதிதாக இலைகளை நசுக்கித் துணியில் கட்டவும்.
* குளிர்ந்த நீரை துண்டில் நனைத்து தலையிலும் கழுத்திலும் கட்டவும். பின் கைகளையும் கால்களையும் சுடு நீரில் விடவும். இந்த முறை ஒற்றைத் தலைவலிக்கு நல்ல பலனைத் தரும்.
* அரைத் தேக்கரண்டி கடுகுப் பொடியை முன்று தேக்கரண்டி தண்ணீரில் கலந்து இந்தக் கரைசலை மூக்கில் விட ஒற்றைத் தலைவலி தீரும். விட்டமின் நியாசின் அதிகமுள்ள உணவு வகைகளான முழு கோதுமை, ஈஸ்ட், பச்சை இலையுடன் கூடிய காய்கறிகள், சூரியகாந்தி விதைகள், கொட்டைகள், தக்காளி, ஈரல், மீன் போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

# வயிற்றோட்டம்

ஒரு நாளைக்கு மூன்று முறைக்கு மேல் நீராக மலம் செல்வதையே வயிற்றோட்டம் என்கிறோம். வயிற்றோட்டம் ஏற்படும்போது ஒருவரின் உடலிலிருந்து நீர், உப்புக்கள், சீனிச்சத்து ஆகியன அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படுதலானது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துகிறது. இந்த ஆபத்தைத் தடுக்க வெளியேறிய நீர், உப்புக்கள், சீனிச்சத்து ஆகியன மறுபடியும் உடலுக்குள் சேர்க்கப்பட வேண்டும்.

நோய்க் கிருமிகள் உடலினுள் செல்வது வயிற்றோட்டம் வருவதற்கு ஒரு முக்கிய காரணியாகும்.

**கிருமிகள் உடலுக்குள் செல்லும் முறைகள்**

* அழுக்கடைந்த கைகள்
* அழுக்கடைந்த தண்ணீர்
* அழுக்கடைந்த உணவு
* முறையாகவும் போதியளவும் சமைக்கப்படாத உணவுகள்

**வயிற்றோட்டத்தைத் தவிர்க்கும் முறைகள்**

* கொதித்தாறிய நீரைக் குடிக்க வேண்டும்.
* சுத்தமான நீரைப் பயன்படுத்தல்.
* சாப்பாட்டிற்கு முன்னரும், மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
* சுத்தமாக நன்கு சமைத்த உணவை உண்ணுவதோடு சமைத்த உணவைப் பூச்சிகள் மொய்க்காமல் மூடிப் பாதுகாக்கவேண்டும்.

**வயிற்றோட்டத்திற்கான சிகிச்சை முறைகள்**

* தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகளுக்குத் தொடர்ந்து தாய்ப்பாலைக் கொடுக்க வேண்டும்.
* உப்புச்சேர் குளுக்கோசு நீர், உப்புசேர் கஞ்சி, பொரியரிசி நீர், தேசிக்காய்த் தண்ணீர், இளநீர் ஆகியவை எல்லா வயதுப்பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம்.
* உணவு - வயிற்றோட்டத்தின்போது உணவுகளைக் கொடுக்கலாம். ஒரு பகுதியாவது சமித்து உடலிற்குச் சத்தைக் கொடுக்கும்.
* வயிற்றோட்டம் குறைந்து வரும்போது கட்டாயமாக உணவுகளைத் திரும்பவும் கொடுக்கவேண்டும். வயிற்றோட்டத்தின்பின் ஒரு கிழமைக்காவது ஒரு மேலதிக உணவு கொடுக்கவேண்டும்.

**உப்புசேர் குளுக்கோசு நீர்**

உப்புசேர் குளுக்கோசு அடங்கிய சரைகளை கடைகளில் வாங்கலாம் (ஜீவனி) இதில் சோடியம் குளோரைட்டு, சோடியம் இரு காபனேற்று, பொற்றாசியம் குளோரைட்டு, குளுக்கோசு அடங்கியுள்ளன. இவற்றை ஒரு லீட்டர் கொதித்தாறிய நீரில் அல்லது சுத்தமான நீரில் கரைத்துப் பாவிக்கலாம். இதை வயிற்றோட்டம் இருக்கும் போது அடிக்கடி கொடுக்கவேண்டும். வாந்திஇருந்தாலும் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு இடையிடையே கொதித்தாறிய சுத்தமான நீரும் கொடுக்கவேண்டும். கரைத்த உப்புசேர் குளுக்கோசு 24 மணித்தியாலயங்களுக்கு வைத்துப் பாவிக்கலாம்.

**உப்புசேர் கஞ்சி**

வயிற்றோட்டத்திற்கான உப்புக்கள் அடங்கிய சரைகளை கடைகளில் வாங்கலாம். இதில் சோடியம் குளோரைட்டு, சோடியம் இரு காபனேற்று, பொற்றாசியம் குளோரைட்டு அடங்கியுள்ளன. வறுத்த அரிசிமாவு 50 கிராம் எடுத்துச் சுத்தமான நீரில் 5 நிமிடத்திற்குக் கொதிக்க வைத்துத் தண்ணீரில் முழு அளவை 1 லீட்டர் வரும்வரை கொதித்தாறிய நீரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதற்குள் உப்புக்கள் அடங்கிய சரை ஒன்றைச் சேர்த்துக் கரைத்து விடவேண்டும். இதனை 8-10 மணித்தியாலயத்திற்குத்தான் வெளியில் வைக்கக் கூடியதாக இருக்கும். குளிர்சாதனப் பெட்டியானால் கூடிய நேரத்திற்கு வைக்கலாம். வீடுகளில் வயிற்றோட்டத்திற்கான உப்புக் கரைசலோ, உப்புசேர் குளுக்கோசு கரைசலோ (ஜீவனி) எப்போதும் வைத்திருப்பது நல்லது.

மருந்துவ மாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

- *273/14-12, ஸ்ரான்லி லேன், யாழ்ப்பாணம், ஸ்ரீதர் தியேட்டர் பின்புறம், லீலா நாராயணன் ஆறுமுகையாவின் வீடு.
- *2பரப்புக்காணி 1500 சதுர அடி வீடு 1975 ஆம் ஆண்டில் கட்டியது.
- *மோட்டர்-தண்ணீர் பம்ப் உள்ளது.
- *4பக்க 6 அடி உயர சுற்று மதில், கிணறு, நல்ல தண்ணீர், மின்சாரம் இருக்கிறது.
- *தொலைபேசி வசதி உண்டு (0212228182)
- *ஸ்ரான்லி றோட்- கோசி ரெஸ்ரோரண்டுக்கு மிக அருகில் உள்ளது.
- *தற்பொழுது வீடு காலியான நிலையில் உள்ளது.

தொடர்பு: 0758116732

**விற்பனைக்கு**

பான்சிக் கடைக்குத் தேவையான அலுமினியப் பிற்றிங் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 0772487852

**Vacancy**
**Accounts / Audit Trainees**

யாழ்ப்பாணத்தில் உள்ள Accounting Firm ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
Age-18-30
Qualification:- A/L Commerce படித்த or HNDA, AAT, Chartered படித்துக் கொண்டிருப்பவர்கள் தேவை.

Email:- Rmaassociate @ hotmail.com.
OR
Toramanan@hotmail.com

**விற்பனைக்கு**

அரிசி, நெல் பொதி
செய்யக்கூடிய உரப்பைகள்
மொத்தமாக
விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
0773597961, 0777913176,
0777448914, 0773833739.

**முதலாம் ஆண்டு நிறைவின் நினைவு**

பிறப்பு
11
★
11
★
1939



இறப்பு
14
★
02
★
2010

**அமரர் திருச்செல்வம் தவநாதன்**
**(முளாயூர் தி.தவம்)**

இன்று காலை எமது இல்லத்தில்
நடைபெறவிருக்கும் ஆன்ம ஈடேற்ற
வழிபாட்டிலும் தொடர்ந்து இடம்பெறும்
மதிய உணவு விருந்திலும்
கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

4/7, மூன்றாம் குறுக்குத்தெரு,
அடைக்கல மாதா [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# 3 தென்மராட்சி பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

தென்மராட்சி, பெப். 13

தென்மராட்சி கல்வி வலயத்தை சேரந்த வரணி மகா வித்தியாலயம், போக்கட்டி றோ.க. த.க.பாடசாலை, கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கு வடமாகாண சேவைக்குட்பட்ட தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வரணி ம.வி. அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவர்கள் அல்லது கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பல்கலைக்கழக பட்டத்தையுடைய இலங்கை அதிபர்சேவை வகுப்பு 2:II ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை, கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோர் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

நியமனம் பெறும் அதிபர்கள் ஆகக் குறைந்தது மூன்று வருட காலம் அப்பாட சாலையில் கட்டாய சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராகவும், தற்போது கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது மூன்று வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றியிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(த-207)

# மு.கா. உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு இடைக்கால தடை

கொழும்பு, பெப். 13

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அக்கட்சியின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்காலத் தடை விதித்தது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே. கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு, வெற்றி பெற்றதன் பின்னர் அரசுத் தரப்புக்கு மாறியதால், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து கடந்த 3ஆம் திகதி கடிதமொன்றை ஐ.தே.க. அனுப்பியிருந்தது.

இதற்கு முன்னரே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு எதிராகத் தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஆர்.எம். ரஞ்சித் வத்துபொல மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிர்வரும் 24ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதித்துள்ளார்.

(இ-01)

# ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களுக்கான 10 நாள் பயிற்சிப் பட்டறை நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ். வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளிலிருந்தும் ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் தவறாது பங்குபற்ற வேண்டும் எனவும், இதற்கான நடவடிக்கைகளை அதிபர்கள் மேற்கொண்டு இன்று ஞாயிற்றுக் கிழமையும் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமையும் முதற்கட்டமாக பங்குபற்றுதலை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறுகிறது.

நேற்றைய செயலமர்வில் பங்கு பற்றத் தவறிய ஆசிரியர்களும் இன்று இடம்பெறும் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible]டுள்ளார்.(த-302)

**விநியோகஸ்தர் தேவை**

நாட்டில் முன்னணி PVC குழாய் மற்றும் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் நிறுவனத்தார் ஆகிய நாம் எமது உற்பத்திகளை விநியோகிப்பதற்காக யாழ்ப்பாண பிரதேசத்தில் விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்படும் விநியோகஸ்தர் நெல்லியடி,உடுப்பிட்டி, பருத்தித்துறை,வல்வெட்டித்துறை,இணுவில்,கோண்டாவில், சுன்னாகம்,மல்லாகம்,பலாலி,சாவகச்சேரி, கைதடி,கொடிகாமம் மற்றும் மீசாலை போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் கீழ்க் காணும் தகுதிகளை கொண்டவராக இருத்தல் வேண்டும்

- → பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான இட வசதியை கொண்டிருத்தல்
- → பொருட்களை விநியோகிப்பதற்கான வாகன வசதியை கொண்டிருத்தல்
- → வங்கி உத்தரவாதம்

மேலதிக தகவல்களுக்கு 077-3457822(ராசலிங்கம்)அல்லது 077-3457848(இந்திக)

அல்லது விண்ணப்பிக்கவும்
விற்பனை முகாமையாளர்,
கமல் பி.வீ.சீ இன்டஸ்டிரீஸ் (தனி) நிறுவனம்
56,கதவல மாவத்தை,
இரத்மலானை.
தொ.பே : 011-2624800
தொலைநகல் : 011-2635520

KTK PVC

**வீடு காணி விற்பனைக்கு**

1. தொண்டமானாறு நடுத்தெரு வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2. தொண்டமானாறு சுடுகாட்டுப் புலத்தில் (வீரகத்தி மகா வித்தியாலயத்துக்குப் பின்புறமாக) 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0770200432

**பணியாளர் தேவை**

★விற்பனையாளர்
★கணக்காளர்
★போட்டோப் பிரதி எடுப்பவர்
★கையடக்கத் தொலைபேசி திருத்துநர்

தொடர்பு: யாழ்.போன் சொப்,
இல.10,நவீன சந்தை,
மேல் மாடி, யாழ்ப்பாணம்.
021 222 3817

**STUDY @ UK**



அடிப்படைத்தகமை GCE (O/L)
IELTS - தேவையில்லை
சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை
நம்பகரமான Sponsorship
100% Visa Guaranteed
அரிய வாய்ப்பை தவரவிடாதீரகள்...

Contact Us: 0777113777

iBt
INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD.
No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka
Branch : 191, Main Street, Kalmunai
E-mail : info@ibtedu.lk | academics@ibtedu.lk
Web : www.ibtedu.lk
We raise the limits to your Success

நல்லூர் **சரவணா ரெக்ஸ்**

அலை அலையாக வாரீர் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள், பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள்
எங்கும் காணாத வாங்காத விலையில்

**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**

Special Offer

இடம் : நல்லூர் (பூங்கனிச் சோலைக்கு முன்பாக)
காலம் : 16.02.2011- 20.02.2011 வரை
(5நாள்கள் மட்டும்)
நேரம் : காலை 9.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை

வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்
கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பஞ்சாபிகள், ஏராளம், ஏராளம் அள்ளி அள்ளி செல்லுங்கள்

**Saravana Tex**
நல்லூர் சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:021 222 1723.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கான மனப்பாங்கு ②

உங்களுக்கு மனஅமைதியும் சந்தோசமும் பெருக்கெடுத்து ஓடுவதை நீங்கள் உணர்வதோடு வெற்றி பெற்றவராகவும் மாறிவிடுவீர்கள். இங்கு நான் அழுத்திக் கூற விரும்புவது யாதெனில் மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதற்குக் கூட நேரம் இல்லாத அளவுக்கு உங்களை நீங்களே முன்னேற்றிக் கொள்வதில் நிறைய நேரத்தைச் செலவிடுங்கள்; வருத்தப்படாத அளவுக்குப் பெரிய மனிதராக இருங்கள் என்பதாகும். நாம் பல வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கின்றோம். ஆனால் அவை இடையில் கைவிடப்படுவதால் வருத்தமும் தோல்வியும் ஏற்படுகின்றன. இதற்கு உண்மையான காரணம் என்ன? காரணம் உங்களுக்கு இலகுவாகப் புரிந்திருக்கும். இதற்கு முக்கிய காரணம் '' நாளைக்கு'' எனக் காரியங்களைப் பின் தள்ளிப் போடுவதாகும்.

எடுத்த காரியத்தை நாளைக்கெனத் தள்ளிப்போடுவது எதிர்மறை மனப்பாங்கை மேலும் விரிவுபடுத்தும் என்பதனால் தள்ளிப் போடும் கைங்கரியத்தை கைவிடுங்கள். ஏனெனில் ஒரு முழுமை அடைந்த வேலையே திருப்தியையும் உற்சாகத்தையும் தரக்கூடியது. '' இப்போதே இக்காரியம் செய்யப்பட வேண்டும்'' எனும் மனப்பாங்கினை வளருங்கள். இது உங்களை வெற்றியாளனாக்கும். ஏனெனில் வெற்றி பெற்றாதவர்கள் எல்லோருமே தம் வேலையைத் தள்ளிப்போட விரும்பிப் பின்னர் சில காரணங்களால் அவ்வாறு செய்ய முடியாமல் போனவர்களே. என்றாவது ஒருநாள் நான் இதைச் செய்வேன் என்று சிலர் கூறினால் எந்நாளும் அவர்கள் அதைச் செய்யப் போவதில்லை.

அறிவுசார் கல்வியானது நமது மூளையில் தாக்கத்தை ஏற்படுத்தப் பண்புசார் கல்வியானது எமது இதயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். கல்வியாளர்களிடையே கூட கல்விக்கொள்கை தொடர்பான முரண்பாடுகள் உள்ளன. நேர்மை, பரிவு, தைரியம், விடாமுயற்சி, பொறுப்புணர்வு போன்ற அடிப்படைக் குணங்களை உருவாக்கும் கல்வி அவசியம். பாடசாலைகளில், பல்கலைக்கழகக் கல்லூரிகளிலும் நாம் பல தகவல்களைப் பெறுகின்றோம். அது அறிவுசார் கல்வியாகவே அமைகின்றது. ஆனால் பண்பு சார் கல்வி இல்லாத பட்டங்களினால் என்ன பயன் விளையப் போகின்றது. பட்டங்கள் தேவை தான்; மறுக்கவில்லை; ஆனால் பண்புசார் கல்வி இல்லாப் பட்டங்களினால் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் எவ்வித பயனும் கிட்டப்போவதில்லை. எனவே நாம் பண்புசார் கல்விக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டிய காலகட்டத்திலுள்ளோம். குறிப்பாக ஆரம்பப் பாடசாலைகளிலும் உயர்வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகளிலும் பண்புசார் கல்விக்கு முக்கியம் அளிக்கப்படல் வேண்டும். அதற்கு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மிகப் பொறுப்பான காரணிகளாவார்கள்.

**உங்கள் வாழ்க்கையைத் திசை திருப்பும் தொடர்**

நீங்கள் ஒன்றை மட்டும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். உண்மையான கல்வி என்பது மூளைக்கும் இதயத்துக்கும் பயிற்சியளிக்கின்றது. ஆனால் தற்போதைய கல்வி முறை இதயத்துக்குப் பயிற்சியளிக்கின்றதா? புலமைப்பரிசில் பரீட்சை என்பது 5 ஆம் தரத்தில் நடத்தப்படுகின்றது. ஆனால் மாணவனுக்கு முதலாம் தரத்திலிருந்தே பெற்றோர்கள் பயிற்சியளிக்கத் தொடங்குகின்றார்கள். அந்த பயிற்சியின் போது அறிவுசார் கல்வி வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதும் மறுபக்கம் குரோதம், நேர்மையின்மை, ஒப்பீட்டுத் தாழ்வு மனப்பான்மை வளர்த்தல், நட்புகளில் பிரிவினை போன்ற பல விடயங்களை உருவாக்கி வருகின்றது. பெற்றோர்களே இதற்கு முழுப்பொறுப்புடையவர்களாக உள்ளனர். 10 ஆம் தரத்திலும் 12 ஆம் தரத்திலும் இதுவே நடைபெறுகின்றது. உங்களிடம் வேண்டுவது யாதெனில் பிள்ளைகளின் இதயத்துக்கும் பயிற்சியளியுங்கள். அதன்மூலம் எதிர்காலத்தில் சிறந்த பிரசையை உருவாக்கிய பெருமைக்குரியவராவீர்கள். நற்பண்புகளை வளர்க்காத கல்வியானது சமுதாயத்திற்குப் பேராபத்தையே விளைவிக்கும்.

நமது எண்ணங்களுக்கும் நடத்தைகளுக்கும் நேரடித் தொடர்புண்டு. நான் நன்றாகவே இருக்கின்றேன். எனக்கு நல்லதே நடக்கின்றது என்று எண்ணினால் நமது செயல்கள் உயர்வானதாக இருக்கும். வெற்றியின் அருகில் இருப்போம். அப்போது இந்த உலகமே அழகாகத் தெரிகின்றது. எமக்காகவே எல்லாம் படைக்கப்பட்டது போன்ற உணர்வு ஏற்பட்டு மனம் இலேசாகின்றது. ஆனால் நான் நன்றாகவில்லை, எனக்கு நோய் இருக்கின்றதென நாம் எண்ணுவோமானால் உலகம் இருள் மயமாகத்தான் தெரியும். அவரால் எதையும் செய்யமுடியாது போகின்றது. அவரிடம் நோய் ஏதும் இல்லாத போதும் நோய்வாய்ப்பட்டவர் போல் ஆகிவிடுகின்றார். இந்த மாற்றத்துக்கான அடிப்படை என்ன? உண்மையில் உடலும் உள்ளமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ள மூலங்களாகும். உள்ளம் தெளிவாக இருந்தால், நம்பிக்கை கொண்டிருந்தால் உடல் ஆரோக்கியமாகக் காணப்படும். உள்ளத்தில் தெளிவின்மையும் நம்பிக்கையின்மையும் காணப்படும் போது உடல் இயங்க மறுக்கின்றது. அத்தகையவரால் வெற்றியை அடைய முடியாது போகின்றது.

இங்கு ஒன்று மட்டும் உண்மை. உலகத்தை அழகாகப் பார்ப்பதும் அதை அழகற்றதாக நோக்குவதும் தன்னை உயர்வாகப் பார்ப்பதும் தாழ்வாக நோக்குவதும் அவரவர் மனப்பாங்கேயாகும். எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே உணர வேண்டும. கிரகம்பெல் தன்னை உணர்ந்ததால் எமக்கு ரெலிபோன் கிடைத்தது. றைட் சகோதரர்கள் தங்களை உணர்ந்ததால் பறக்கும் விமானம் எமக்கு கிடைத்தது. இங்கு இரு விடயத்தைக் கவனித்தீர்களா? தங்களைத் தாங்களே உணர்ந்து தன்னம்பிக்கை கொண்டவர்கள் தாங்களும் வெற்றியாளனாக மாறியது மட்டுமல்லாது உலக சமுதாயத்துக்கும் பல அளப்பரிய கண்டுபிடிப்புக்களை வழங்கியிருக்கின்றார்கள்.

ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்திருங்கள். இறைவனால் படைக்கப்பட்ட குழந்தைகள் எல்லாம் (பிறப்பில் மூளை அங்கவீனர் தவிர்ந்த ) ஒரே மாதிரியே படைக்கப்படுகின்றனர். ஆனால் ஜனனத்தின் பின்பு சூழல், அனுபவம், கல்வி என்பன குழந்தைகளிடையே வித்தியாசத்தை உருவாக்கி விடுகின்றன. இதனால் ஒரு குழந்தை அறிவில் மிகப் பெரியவனாகின்றான்.

(தொடரும்)

சி.விஜயகுமார்,
முதுநிலை விரிவுரையாளர்,பொருளியல்துறை,
யாழ்ப்பாணப் [illegible]

# எமது இளம் சமூகத்துக்கான சமூக பொறியியலமைப்பை எவ்வாறு நெறிப்படுத்துவது?

பிள்ளைகள் கல்வி கற்கவில்லை. கலாசார சீரழிவுக்கு உட்படுகின்றனர். வன்முறைகளில் நாட்டம் கொள்கின்றனர். மதுபானம், புகைத்தலுக்கு அடிமையாகின்றனர். இளவயதுத் திருமணம், பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றை நாம் எமது அன்றாடச் செய்திகளாகக் காண்கின்றோம். பெரும் யுத்த அழிவுகளைச் சந்தித்த சமூகத்தில் அதன் மீள் உயிர்ப்பிற்கு இவை பெரும் சவால்களே ஆகும். ஆனால் நாம் சமூகத்தாரின் பொறியியலமைப்பைச் சிறப்பாக நெறிப்படுத்துவதன் மூலம் இவற்றின் தாக்கத்தினைக் குறைக்கலாம்.

**மாணவர்களின் கல்வியை நெறிப்படுத்தும் சமூகப் பொறியியல் வலையமைப்பு மாதிரி**




எமது சமூகத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்களைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தி, ஒவ்வொருவரும் எதிர்காலச் சந்ததிக்காகவும் தமது கடமைகளைச் செய்யும்போது பெரும் சமூகப்பிறழ்வுகள் தடுக்கப்படுவதுடன் சீரிய சமூகமும் உருவாக்கப்படும்.

**சிறுவர்களின் சமூக உளத் தேவையின் அளவு(பரப்பளவில்)**

கல்வியினை இடையில் கைவிட்டோருக்குத் தேவைப்படும் உதவிகள் பலவாக இருக்கும். புத்தாயிரம் ஆண்டின் இரண்டாவது தசாப்தத்தினை தமிழ் மக்கள் கல்விப் புரட்சிக்கான தசாப்தமாக மாற்றல் வேண்டும். 2020 ஆம் ஆண்டளவில் எமது குழந்தைகளில் இருந்து இருவரை சுவாமி விவேகானந்தர் போலவும் இருவரைக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் போலவும் இருவரைத் தத்துவமேதை இராதாகிருஷ்ணன் போலவும், இருவரை அறிஞர் அண்ணாத்துரை போலவும் இருவரை அறிவியல் மேதை அப்துல் கலாம் போலவும் உருவாக்கவேண்டும். இதற்கு கல்விக்கான ஆரோக்கியத்தினை நாம் வழங்கவேண்டும். ஆரோக்கியமான கற்பித்தலை நாம் மேற்கொள்ள வேண்டும். இதனால் ஆரோக்கியமான சமூகம் தானாகவே உருவாகும்.



டாக்டர் சி.ஜமுனானந்தா.

# இலவச மென்பொருள்களை தரவிறக்கம் செய்பவர்களின் கவனத்திற்கு

இணையம் என்பது நம் வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக ஆகிவிட்டது. இதில் நமக்குத் தேவையான வீடியோக்கள் மற்றும் மென்பொருள்களை இலவசமாகத் தரவிறக்கம் செய்து உபயோகிக்கின்றோம். ஆனால் இப்படி இலவசமாக இணையத்தில் இருந்து தரவிறக்கம் செய்யும் மென்பொருள்களினால் நம்முடைய கணினி பாதிப்பு அடையும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆகவே நாம் இணையத்தில் இருந்து தரவிறக்கம் செய்யும் போது கடைப்பிடிக்கவேண்டிய முக்கிய வழிமுறைகள் இதோ.

1. இலவசம் என்று கூறியதும் அதிக மென்பொருள்களை கணினியில் பதிவு செய்வதை முற்றிலும் தவிர்க்கவும். மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நினைத்தால் மட்டும் கணினியில் பதிந்து கொள்ளுங்கள். இந்த மென்பொருளால் ஒருமுறை மட்டும்தான் பயன் என்று இருந்தால் இதற்கு அந்த மென்பொருளைத் தரவிறக்க வேண்டியதில்லை. ஒன்லைனிலேயே இந்த வசதியை செய்து கொள்ளலாம்.

2. எந்த இலவச மென்பொருளையும் அதனுடைய தயாரிப்பு இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்வதை முற்றிலும் தவிர்த்து விடுங்கள். ஏனென்றால் அவர்களின் மென்பொருளைப் பற்றி அவர்கள் உயர்த்தியே சொல்வார்கள். ஆதலால் உண்மை நிலையை நம்மால் கண்டறிய முடியாது.

3. தகுதி வாய்ந்த தளங்களில் இருந்து தரவிறக்கம் செய்தாலும் கூட நாம் தரவிறக்கம் செய்யும் மென்பொருளைப் பற்றி மற்றவர்களின் Reviews எப்படி உள்ளது என்பதைப் பார்த்த பின் செய்யவும்.

4. எந்தத் தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யும் போதும் மொத்த தரவிறக்கம் அதிகமாக இருந்தாலும் Last week எவ்வளவு பேர் அதனை தரவிறக்கம் செய்தார்கள் என்று பார்க்க வேண்டும். அதிகம் பேர் பார்த்து இருந்தால், அந்த மென்பொருள் தற்போதும் நன்றாகப் பயன்படுகிறது. ஆகவே அந்த மென்பொருள்களை தரவிறக்கம் செய்து கொள்ளவும்.

இந்த முறைகளைக் கையாண்டாலே உங்கள் கணினியைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், யுவதிகளிடையே விழிப்புணர்வு அவசியம் தேவை



(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் போகின்ற பெண்களை சில்மிசம் செய்கின்ற இளைய சமுதாயத்தின் கொட்டத்தை அடக்கு வதற்குப் பாதுகாப்புத் தரப்பினரின் உதவியை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு யாழ். சமூகம் ஆளாகியிருக்கின்றமையையிட்டு வெட் கித் தலைகுனிய வேண்டியிருக்கின்றது.

### யுவதிகளின் போக்கு

இளைஞர்கள் இப்படியென்றால் யுவதிகள்..?

நாகரிகமான ஆடைகளுடன் ஆலயங்களில் வழிபடவருமாறு விநயமாக வேண்டுகோள் விடுக்கவேண்டிய தேவை இன்று ஆலய நிர்வா கங்களுக்கு அவசியமானதாகிப் போய்விட்டது. திரைப்படக் காட்சிக்குப் பயன்படுத்திய சிக்கன கலாசார(?) ஆடைகள் மாதிரியைப் (மொடல்) பின்பற்றி, துச்சாதனன் இன்றித் தம்மைத் தாமே துகிலுரியும் மாதர், இன்று நம்மத்தியில் பரவலாக உள்ளனர். அதுவும் தேவாலயங் களில் நிலைமை மோசமடைவதால், ஆலய பலி பீடத்தில் நின்று குருவானவர் அபாய சங்கு ஊத வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

சினிமாவின் ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் தாராளமாகவே கடை விரித்திருக்கிறது. திரையி லும் தொலைக்காட்சியிலும் வந்துபோன தென் னிந்திய திரைப்பட கதாநாயகர்கள் இப்போது கிராமப் புறங்களிலும் தெருக்களிலும் சந்திகளி லும் மறுபிறவி எடுத்திருக்கின்றனர் என்று அன் பர் ஒருவர் கூறியது ஏறக்குறைய சரியாகத்தான் இருக்கிறது. இன்றைய இளந் தலைமுறையின ரின் நெற்றியில் திருநீறைக் காண்பதென்பது அபூர்வ நிகழ்வாக மாறிவிட்டது.

அரசினால் தேசிய மட்டத்தில் நடத்தப்படு கின்ற தரம் 5, க.பொ.த சாதாரண தரம், உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் முதலிடங்களை அலங்கரித்த காலம்போய், முதல் பத்து இடங் களில் ஓர் இடத்தையேனும் அலங்கரிப்பதற்கு இன்று படாதபாடுபடவேண்டியிருக்கின்றது. அதுகூட இன்று எட்டாக்கனி என்கிற நிலையை எட்டியிருக்கின்றது.

யுத்தம் பிரசவித்துச் சென்றுள்ள அதிகளவான விதவைகள் குறித்து அதிலும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பற்றிச் சமூகத்தில் தோன்றும் விழிப்புணர்வு வெறும் பூச்சியமாகவே இருக்கிறது. இவர்கள் அரசின் கைகளை எதிர்பார்க்கின்ற நிலையே நிலவுகின்றது. இவர்களின் மறுவாழ்வு குறித்து இன்றைய இளைய சமுதாயம் கிஞ்சித்தும் அக் கறைப்பட்டதாகத் தெரியவில்லை.

சட்டவிரோதக் கருக்கலைப்பிற்கு இட்டுச் செல்கின்ற காதல்கள் இன்று சாதாரண நிகழ்வு களாகிவிட்டன. மறுபுறத்தில் இளவயது விவாக ரத்துக்கள் பெருகிவருவதாக சமுதாய அனுதாபி கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பத்தியில் இளைய சமுதாயத்தினர் என விளித்திருப்பது வேறு எவரையுமல்லர். உங்கள் பிள்ளைகளைத்தான், அல்லது உங்கள் சகோதர, சகோதரிகளைத்தான், அல்லது..? உங்களைத்தான்.

### விழிப்புணர்வு நாளே சிறந்தது

குடாநாட்டுக் குற்றச் செயல்கள் பற்றிப் பிரத மர் தி.மு.ஜயரட்ன ''யானை வால் மயிர் உதிர் விற்குச் சமன்'' என எமது பிரச்சினையை மலி வாகச் சொல்லி விட்டார் என அறியும் பொழுது எமக்குப் பொத்துக் கொண்டு கோபம் வருகின்றது. ஆனால் நாம் அவரிலும் விட மோசமான கவன யீனத்துடன் இருக்கிறோம்.

குடாநாட்டு இளையோர் விவகாரம் இந்த நிலையில் இருக்கையிலேயே நாளைக்கு நாம் காதலர் தினத்தைக் கொண்டாட(?) இருக்கி றோம்.

குடாநாட்டின் நடைமுறைச் சூழ்நிலையில் ஒவ்வொருநாள் விடிகாலையிலும் வீட்டிற்கு அருகில் உள்ள கைவிடப்பட்ட கிணறுகளுக் குச் சென்று காணாமற்போனோர் சடலமாகத் தன்னும் மிதக்கிறார்களோ என்று பார்க்கவேண் டிய பரிதாப நிலையில், நாளைய தினத்தை காதலை வெளிப்படுத்துவது, உள்வாங்குவது போன்ற பாரம்பரிய நடைமுறைகளுடன் கொண் டாடாமல், இளைய சமுதாயம் பற்றி விழிப்புணர்வு நாளாக அனுஷ்டிப்பதே சாலச் சிறந்தது மாத் திரமல்ல காலத்தின் தேவையுமாகும். ★

உதயன்

வெள்ளி விழாக் கொண்டாட்டம்

20/02/2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளரசுக் கிளையின் வீதி உலா

ஔண்யன்







கால் கடுக்க மக்கள் காத்திருக்கையில் ஒரு சலசலப்பு. வீதியில் படையினரின் பூரண மரியாதையோடு தகதகவென மின்னும் பெரிய பாத்திரத்தில் உட்காந்திருந்தபடி அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் ஓய்யாரமாக வந்தது அந்த வெள்ளரசு மரக்கிளை. அங்கு திரண்டிருந்த மாணவர்கள் படையினரின் அறிவுறுத்தலின் பேயரில் மலர்களை தூவினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று, வெளிநாடுகளில் வேர்கொண்டு, குடும்பம், குழந்தைகளோடு செட்டிலாகி விட்ட நம் உறவுகள் தமது விடுமுறைக்காலத்தைக் கழிப்பதற்காக ஏகப்பட்ட மூடை முடிச்சுகளோடு மீளவும் இங்கு வந்து செல்வது வாடிக்கையாகிவிட்ட விடயம். இத்தகைய தமது பயணங்களின் போதெல்லாம் சிறுவயதிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து பிடுங்கிச் செல்லப்பட்டு, இப்போது பெரியவர்களாக வளர்ந்து விட்ட தமது பிள்ளைகளுக்குப் பழைய நினைவுகளை ஞாபகப்படுத்த அவர்கள் தவறுவதில்லை.

''இதுதான் நீங்கள் பிறந்த வீடு!''

''உங்களுக்கு இந்தக் கோயிலிலதான் ஏடு தொடக்கினது'.'

'' இவாதான் உங்கட நேர்சரி ரீச்சர்.''

என்று தொடங்குகிற ஞாபகமூட்டல்கள் பின்னர் அவர்களின் சொத்துகள் பற்றியும் திரும்பும்.

''அங்க தெரியிற வயல் முழுக்க எங்கடதான். எங்கட காலத்துக்குப் பிறகு அது உங்களுக்குத்தான்.''

''இதுதான் உங்களுக்கு நாங்கள் தரப்போற வீடு. இப்ப பாதுகாப்புக்காக இவையை வாடகைக்கு இருத்தியிருக்கிறம்.'' என்பன போன்ற தன்மையில் அத்தகைய அடையாளப்படுத்தல்கள் அமைவதுண்டு. இது இரு காரணங்களுக்காக நிகழ்த்தப்படுகிறது.

பூர்வீக நிலம் பற்றிய பிரக்ஞையைத் தமது பிள்ளைகளிடத்தே ஏற்படுத்துதல், தமது நிலங்களில், வீடுகளில் தற்காலிகமாகத் தங்கியிருப்போருக்கு இது உங்களின் தற்காலிகத்தங்குமிடம் மட்டுமே. அதன் உடமையாளர்கள் எப்போதும் நாம்தான் என்னும் செய்தியை நாசூக்காகச் சொல்லுதல் என்பனவே அந்த இரு காரணங்களுமாகும். நாம் வெளிநாடுகளில் இருந்தாலும் கூட நமது சொத்துக்களை எம்மை மிஞ்சி எவரும் அபகரிக்க முடியாது என்ற வகையில் நிலம் மீதான தம் ஆளுகையினை நிலைநிறுத்திக் கொள்ளும் வேலைகள் யாழ்ப்பாணத்தவர்களுடன் கூடப்பிறந்தது.

இப்போது அதே உத்தியை தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள-பௌத்த தலைமைகள் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன. அதன் விளைவைக் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தரிசிக்க முடிந்தது. அன்றைக்குக் காலை வரை அமைதியாக இருந்த யாழ்ப்பாணம் மதியத்தை அண்மித்த சமயத்தில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது போல பரபரப்படையத் தொடங்கியது. முக்கியமான வீதிகள், சந்திகள் எங்கும் படையினர் வாகனங்களில் கொண்டு வந்து கொட்டிவிடப்பட்டனர். வழமையை விடவும் சோதனைகளும் இறுக்கப்பட்டது.

''ஆரையும் கடத்திப் போட்டாங்களோ?''

இப்படித்தான் பலரும் நினைத்துக் கொண்டனர். ஏனெனில் யாரையாவது கடத்தினாலோ அல்லது சுட்டுக் கொன்றாலோதான் இவ்வாறு (எல்லாம் நடந்து முடிந்த பிறகு) வீதிகளில் படையினரின் பிரசன்னம் அதிகரிக்கப்படுவதும் சோதனைகள் முடுக்கி விடப்படுவதும் வழமை. அவ்வாறில்லாவிட்டால் கொழும்பிலிருந்து யாராவது முக்கிய புள்ளிகள் வருவதாக இருந்தாலும் சோதனைகளும் பாதுகாப்புக்கெடுபிடிகளும் அதிகரிக்கப்படுவதுண்டு. ஆனாலும் அவ்வாறு அரச முக்கியஸ்தர்கள் எவரும் வருவதாகக் கட்டியம் கூறப்படாத போது, ஏதோ விபரீதம் நேர்ந்துவிட்டதாகத் தானே மக்கள் நினைத்துக் கொள்வர். சொல்லாமல் கொள்ளாமல் சோதனைக்கெடுபிடிகள் இறுக்கமானதால் சில இடங்களில் போக்குவரத்துநெரிசலும் ஏற்பட்டது. அந்த வேளையில் வீதிகளில் நின்றிருந்த படையினருக்கு ஏதோவொரு தகவல் கிடைக்க, பயணித்துக் கொண்டிருந்த மக்கள் வீதிகளின் இருமருங்கிலும் நிறுத்தி வைக்கப்பட்டனர். பாதையில் ஈ, எறும்பு கூட இல்லை.

இதென்னடா! பமிலிகார்ட் பதிவு, செக்கிங் எண்டதோட இப்ப பழையபடி கொன்வேயும் வந்திட்டோ? என்று வீதிகளின் இரு முனைகளிலும் நிறுத்தப்பட்டவர்கள் அலுத்துக்கொண்டனர். (போர் உக்கிரமடைந்திருந்த காலத்தில் படையினரின் வாகனங்கள் எவ்வித இடர்களுக்கும் முகம்கொடுக்காமல் பயணிப்பதற்காக மணித்தியாலக் கணக்கில் மக்கள் வீதிகளில் பயணம் செய்வது தடுக்கப்பட்டு, அவர்களது போக்குவரத்து தற்காலிகமாக முடக்கப்படுவதையே எம்மவர்கள் கொன்வே என்று கடிந்து கொண்டது கடந்தகால வரலாறு)

கால்கடுக்க மக்கள் காத்திருக்கையில் ஒரு சலசலப்பு. வீதியில் படையினரின் பூரண மரியாதையோடு தகதகவென மின்னும் பெரிய பாத்திரத்தில் உட்கார்ந்திருந்தபடி அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் ஒய்யாரமாக வந்தது அந்த வெள்ளரசுமரக் கிளை. குறுகிய கால அறிவித்தலின் பேரில் அங்கு திரண்ட பாடசாலை மாணவர்கள் படைதரப்பின் அறிவுறுத்தலின் பிரகாரம் மலர்களைத் தூவினர்.

அந்தணர்கள் சிலர் ஆரத்தி எடுத்தனர். ஓர் அரச தலைவருக்கு நிகரான வரவேற்பில் வெள்ளரசுக் கிளை மூழ்கிப்போனது.புதன் காலை விமானம் மூலம் வந்திறங்கி, குடா நாட்டிலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த (?) விகாரைகளுக்கு (நாகவிகாரை, சம்பல்துறை மற்றும் பிரதான ராணுவ முகாம்களில் உள்ள விகாரைகள் (34 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளரசுக்.....



(33 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்றன) ஒரு விசிட் அடித்த அந்த வெள்ளரசுக்கிளை பின்னர் தனது வழி திரும்புதலை வவுனியா ஊடாக மேற்கொண்டது. ஒரு வெள்ளரசுக்கிளைக்கு ஏன் இத்தனை ஆர்ப்பாட்டம்?

ஏறக்குறைய 2,300 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்த சங்கமித்தை என்ற பிக்குணியால் கொண்டு வரப்பட்டு, நடப்பட்டு ஸ்ரீமகாபோதியில் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் வெள்ளரசு மரத்தின் கிளைதான் அது. கௌதம புத்தரின் 2,600ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அந்த வெள்ளரசுமரத்தின் கிளை ஒன்று இந்தியாவுக்கு அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது. (கொடுத்தவர்களுக்கே அதைத் திருப்பிக் கொடுக்கிறார்களாம்) அதற்கு முதல் அந்தக் கிளைக்கு, அதனுடைய தாய் மரம் வந்த பாதையைக் காட்டி மகிழ்வதற்கே இந்த ஆர்ப்பாட்டமான பயணம்.

மேம்போக்காகப் பார்த்தால் குறித்த வெள்ளரசுக் கிளையின் வீதியுலா ஒரு சாதாரண சமய அனுஷ்டானம் போலவே தோன்றினாலும் உள்ளூர அது நிறைய அரசியல் இலாபங்களை எதிர்பார்த்துச் செய்யப்பட்ட ஒன்றாகவே கொள்ளவேண்டியுள்ளது. வெள்ளரசுக்கிளையின் வீதியுலாவைக் காண நேர்ந்த போது, இக்கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட தமது பிள்ளைகளுக்கு அவர்களின் பூர்வீகத்தைக் காட்டி தமது இருப்பை நிறுவிக்கொள்ளும் செயற்பாடே ஞாபகத்துக்கு வந்தது. ஏறக்குறைய 2300 வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிங்கள - பௌத்த கலாசாரம் இலங்கை எங்கும் -குறிப்பாகத் தமிழர்கள் தம் தாயகபூமி என்று மார்தட்டிக் கொள்கிற வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கூட- வியாபித்திருந்தது என்ற வரலாற்றை ஞாபகப்படுத்தவே இந்த வெள்ளரசுக்கிளையின் சுற்றுலா.

இந்த ஞாபகப்படுத்தல் இக்காலப் பகுதியில் அரசுக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கும் அவசியமானதொன்றாக இருக்கிறது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், புதிது புதிதாக முளைக்கத் தொடங்கியுள்ள விகாரைகள் என்பன தொடர்பாக அரசு மீது முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களை எதிர்கொள்வதற்குப் பிடிமானம் ஒன்று தேவைப்படுகின்றது. என்னதான் வரலாற்றுத்திரிபுகளை ஏற்படுத்தினாலும் கூட வடக்கு-கிழக்கு தமிழர்கள் வழிவழியாக வாழ்ந்த பூர்வீகப் பகுதிகள் என்ற கருத்தியலை சிங்களப் பேரினவாதத்தால் அழிக்க முடியவில்லை. எனவே தனது இட்டுக்கட்டிய ஐதீகக் கதைகளுக்கு செயல்வடிவம் கொடுத்து தன் இருப்பைத் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ள அது திட்டமிடுகிறது. அந்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகவே வெள்ளரசுமரக் கிளைக்கு அது இலங்கைக்கு வந்த பாதையைக் காட்டுகிற சாட்டில் இங்கெல்லாம் காலம் காலமாக நாங்களே (சிங்கள - பௌத்தர்களே) ஆண்டோம் என்ற செய்தியை வலுவானதாக்க அரசு முனைந்துள்ளது. இல்லாவிட்டால் நாட்டையே அவலத்தில் மூழ்கடித்த வெள்ள அனர்த்தங்களில் இருந்து மக்கள் மீள முன்னர் வெள்ளரசுக் கிளையின் பயணத்துக்கு என்ன அவசரம்? வெள்ளத்தால் பாதைகள் துண்டிக்கப்பட்டு அத்தியாவசியப் பொருள்களே கிடைக்காமல் மக்கள் பலரும் திண்டாடிக் கொண்டிருக்கையில் அந்தப் பாதைகளைச் சீர் செய்வது குறித்தோ அல்லது அங்கு தேவையான பொருள்களை அனுப்புவது குறித்தோ எவ்வித அக்கறையும் எடுக்காத அரசு வெள்ளரசுக் கிளையை மினக்கெட்டு விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறது. மரபார்ந்த ரீதியாக இந்துக்கள் கொண்டாடுகின்ற கார்த்திகைத் தீப விளக்கீட்டுக்கு தடை போட்ட படைத்தரப்பு குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த வெள்ளரசுக் கிளையின் பயணத்துக்கு உறுதுணையாக இருந்திருக்கிறது. சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை.

வெள்ளரசுக் கிளை இப்போது கால் பதித்த தேசமெல்லாம் புத்தருக்குச் சொந்தமென்ற நினைப்பை அது மறைமுகமாக எல்லோரிடத்தேயும் ஏற்படுத்த விழைந்திருக்கிறது. அதன் மூலம் எதிர்காலத்தில் நிகழ்த்தவுள்ள சிங்களக் குடியேற்றங்களையும், விகாரைகளின் உருவாக்கங்களையும் நியாயப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அரசுக்கு வாய்க்கும்.

கடந்த வருடம் முதல் அறிமுகம் செய்யப்பட்ட (இனி ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படவுள்ள) ஆரியகுளம் நாகவிகாரைப் பெரஹராக் கொண்டாட்டம், வெள்ளரசுமரக்கிளையின் வீதியுலா, மும்முரமாக நடைபெற்றுவரும் நயினாதீவு நாகவிகாரை விஸ்தரிப்புப் பணிகள், மாதகல் - சம்பல்துறையில் (சங்கமித்தை வந்திறங்கிய இடமாம்) உருப்பெற்றுள்ள பிரமாண்டமான விகாரை, இதைவிட வன்னியில் உருவாகத் தொடங்கியுள்ள பௌத்த விகாரைகள் என்பனவெல்லாம் எதிர்காலத்தில் நிகழவுள்ள நிலம் விழுங்குதலுக்கான குறிகாட்டிகளாகவே தென்படுகின்றன. இன்னும் கொஞ்சம் போனால் குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் உள்ள வெள்ளரசு மரங்கள் கூட சங்கமித்தை செல்லும் வழியில் வீழ்ந்த வித்துகளில் இருந்து முளைத்தவை என புதிய வரலாறுகள் எழுதப்படக்கூடும். அப்போதும் இப்போது போலவே நாம் கைகட்டி, வாய் புதைத்து விகாரைகளுக்கும் வெள்ளரசு மரங்களுக்கும் மலர் தூவத் தயாராயிருப்போம். எல்லோரும் உதடுகளை விரித்து உரத்த குரலில் சொல்வோம் "புத்தம் சரணம் கச்சாமி." ✱


## கண்ணீர் அஞ்சலி

### சின்னவன் சீதாப்பிள்ளை



எம்முடன் பணியாற்றும் திரு.கேதீஸ்வரனின் அன்புத் தாயார் திருமதி சின்னவன் சீதாப்பிள்ளை அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அமரரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறிலங்கா ரெலிக்கொம் 1998ஆம் ஆண்டு அணியினர்.
M. ரமேஸ், T. சுரேஸ், T. துரைசிங்கம், உமாகரன்,
C. மக்கன்ஸ், K. மன்மதன், K. அன்பழகன்,
A. நிறஞ்சன், S. ராஜேந்திரன், சந்திரலிங்கம்.

## பெண் விற்பனையாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல புடைவை நிறுவனத்துக்குப் புடைவை வியாபாரம் பழகிய, பழக விரும்பும் பெண்பிள்ளைகள் தேவை
தொடர்பு - 0772850753

## Short Period Success

எதிர்காலக் கனவுகளை வெற்றிக் கனிகளாக மாற்றுவதற்குத் துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்கு அரிய சந்தர்ப்பம்! நீங்கள் O/L, A/L சித்தி பெற்றவராயின் சர்வதேச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தில் முகாமைத்துவப் பயிற்சியுடன் உயர்தர சம்பளமும் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்குத் தொடர்புகொள்ளுங்கள்
0717494735, 0770771377

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் வீட்டில் தங்கிநின்று வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்குப் பொறுப்பான பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு 0750494745 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## STUDENT VISA

குறுகிய காலத்தில் யாழ்.மாணவர்களை

UK, CANADA, U.S.A-NEW ZEALAND கல்வி கற்க அனுப்பி நன்மதிப்பைப் பெற்ற Future Education மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை யாழ்.மாணவ, மாணவிகளுக்கு வழங்குகிறது MARCH-APRIL அனுமதி.O/L மட்டும் போதுமானது. O/L அல்லாதவர் களுக்கும் அனுமதி வழங்கிறோம் I.E.L.T.S தேவையில்லை. ஒரே நாளில் College Admission ஒரு மாதத்தில் பயணம்.

தொடர்பு:
**FUTURE EDUCATION & CONSULTANTS**
NO.8 CHANDRALEKA MAWATHA
BORELLA-COLOMBO-08
T.P-0117631505 HOT LINE-0723369058
EMAIL-Sri@Futuraeducation.lk

## 220 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL உத்தரவு பெற்ற முகவர்

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுக்கான கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், உணவுப்பண்டங்கள், CD, DVD போன்றவற்றை பாதுகாப்புடன் விரைவாக குறைந்த கட்டணத்தில் அனுப்பிட DHL

WESTERN UNION®
வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள பாதுகாப்பான விரைவான நம்பிக்கையிலான சேவை

MMBL Money Master

திருமுருகன் கொம்நெற்

259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்...)

## ஆசிரியர் தேவை

ஆங்கிலம், சிங்களம் கற்பிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தேவை.
தொ.பே.இல: 0778697730

## விற்பனைக்கு

NPWF - XXXX தொடரிலக்கம் உடைய புதிய Pulsar 180 ரக மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு [illegible]


## மரண அறிவித்தல்

### அன்னலட்சுமி தங்கராசா



சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் இல-20, சிறியாவீதி, வெள்ளவத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தங்கராசா அவர்கள் கடந்த (10.02.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசமணி, இராசம்மா, பொன்னம்மா மற்றும் கண்ணம்மா காலஞ்சென்றவர்களான கனகம்மா, வைரவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மதியழகன் மற்றும் அன்பழகன், மதிவதனி, சத்தியவதனி, சிறிவதனி, சசிவதனி ஆகியோரின் பேரன்புத் தாயாரும் பங்கயற் செல்வி, சத்தியதேவி, இராஜேந்திரன், மனோகரன், சுதேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதினுஷன், அனுஷன், மதுஷா, அபினாஷ், ஆகாஷ், அஸ்வின், அனுபா, வினுஷன், தனுஷன், சாத்வீகா, சாரங்கா, மதுரா, மதுஷாந், கர்ஷிகா, சாயுரா, சயுன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சீதாலட்சுமி மற்றும் பாசுவதம், காலஞ்சென்ற இராசமணி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சண்டிலிப்பாயில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] சண்டிலிப்பாய் ... தொ.இல - 0773114090 (அன்புப்பேரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.13
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வண்மைப் போட்டிகள் நாளை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.
வித்தியாலய அதிபர் க.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) பீ.முத்துலிங்கமும் கலந்துகொள்வர். (த-207)

***

தென்மராட்சி, பெப.13
நாவற்குழி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பி.ப.1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் திருமதி வ. மேகலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் கலந்த கொள்வார். (த-207)

***

சுன்னாகம், பெப்.13
தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்ந நிகழ்வில் சேவாலங்கா மன்றத்தின் மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் வி.கேசவன் முதன்மை விருந்தினராகவும், தெல்லிப்பழை கிழக்கு சமுர்த்தி உத்தியோகஸ்தர் க. தங்கவடிவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த-38)

***

சுன்னாகம், பெப்.13
கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
அதிபர் சு. ஸ்ரீ குமரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நகுலேஸ்வரம் கிராம அலுவலர் செல்வி நாக சுபதினி தம்பிநாயகமும், சிறப்பு விருந் தினராக பழைய மாணவர்களான துர்க்காபுரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி மலர்விழி கங்காதரன், தொழிலதிபர் க. மகாலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (த-38)

***

பண்டத்தரிப்பு, பெப்.13
பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் அருட்சகோதரி எ.எம்.கே நீற்றா தலைமையில் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளது.
இந்த நிகழ்வில் வலி.தென்மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு. சிவலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.
மாலீசார் கூடல் றோ.க.த.க பாடசாலை அதிபர் எஸ்.என்.உதயகுமார் சிறப்பு விருந்தினராகவும், வலி தென்மேற்கு பிரதேச செயலக விளையாட்டு அலுவலகர் த.லக்ஸ்மன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (த-130)

***

வடமராட்சி, பெப்.13
பருத்தித்துறை, கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பி. அருமைச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இப்போட்டிக்கு இளைப்பாறிய உடற் கல்விப் பணிப்பாளர் வி. வல்லிபுரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி இரத்தினபூபதி வல்லிபுரம் பரிசில்களை வழங்குவார். (த-236)

# பிரதேச விளையாட்டுப் போட்டிகளை சென்.பீற்றர் மைதானத்தில் நடத்துக

யாழ்ப்பாணம், பெப்.13
2011 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலக மட்டத்திலான தடகள விளையாட்டு போட்டியை நவாலி தெற்கு புதிய சென் பீற்றர் விளையாட்டு மைதானத்தில் நடத்த வேண்டும்.
நவாலி சென்ற் பீற்றர் விளையாட்டு கழக உப தலைவர் வலி .தென் மேற்கு பிரதேச செயலரை கேட்டுள்ளார்.
நவாலி சென். பீற்றர் விளையாட்டு மைதானம் புதிதாக புனரமைக்கப்பட்டு வருகிறது. பரந்த நிலப்பரப்பினை கொண்டதாக புதிய விளையாட்டு மைதானம் அமைந்துள்ளது. இந்த மைதானத்தில் தற்போது உதைப்பந்தாட்டம், கிரிக்கெட், தடகளம், கூடைபந்து ஆகிய போட்டிகள் இடம்பெறுகின்றன விரைவில் மைதான புனரமைப்பு பணிகள் முடிவுறும். எனவே 2011 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலக மட்டத்திலான விளையாட்டு போட்டியை நவாலி தெற்கு சென்ற் பீற்றர்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடாத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார். (த-302)

# அளவெட்டி விநாயகர் சம்பியன்

வலி.வடக்கு, பெப்.13
தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.
மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகமும் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
முதலில் விளையாடிய பாரதிதாசன் விளையாட்டுக்கழகம் ஒரு ஓட்டத்தைப் பெற்றிருந்த நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.
மோகனா ஒரு ஓட்டத்தைப் பெற்றார் பதிலுக்கு விளையாடிய விநாயகர் விளையாட்டுக்கழகம் 02 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.
சிந்துஜா, திலக்ஷா ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர். ஆட்ட நிலையில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் 02.01 ஓட்டம் என்ற நிலையில் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று பிரதேச செயலக சம்பியனாகியது. (த-86)


சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. போட்டிக்கு விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். (த-55)

# பதுளை அணியை வென்றது யாழ்ப்பாணம் ஐக்கிய வி.க

வலி வடக்கு, பெப்.13
இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் மாகாண அணிகளுக்கு இடையே மொனராகலை புத்தலவில் இடம் பெற்ற வலைப் பந்தாட்டப் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
மொனராகலை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் பதுளை மாவட்ட அணியும் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதிக் கொண்டன.
போட்டியில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணியின் கைகளே போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை ஓங்கியிருந்தன.
யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 09:03 புள்ளிகள் என முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 07:04 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னனியில் இருந்த வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.
ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 16:07 புள்ளிகள் என்ற நிலையில் பதுளை மாவட்ட அணியை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாட்டுத் தகுதி பெற்றது. (த-86)

# நாடு முழுவதும் உள்ள கைதிகளின் மாத பராமரிப்புச் செலவு ரூ.26 கோடி

கொழும்பு, பெப்.13
நாடெங்கும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் பராமரிப்புக்கு மாதாந்தம் 26 கோடி ரூபா செலவிடப்படுவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புணர்நிர்மான அமைச்சர் எஸ் .எம் சந்திரசேன தெரிவித்தார்.
அண்மையில் அமைச்சு அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார். தமது அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் முதன் முதலாக நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
நாடெங்கும் தற்சமயம் 26 ஆயிரம் கைதிகள் சி[illegible] னர். ஒவ்வொ[illegible] பராமரிப்புச் செலவு 10 ஆயிரம் ரூபாவாகிறது.
அதன்படி மாதாந்தம் 26 கோடி ரூபாவும் வருடாந்தம் 380 கோடி ரூபாவும் அரசால் செலவு செய்யப்படுகின்றது. வருடாந்தம் 130, 000 கைதிகள் சிறைக்குள் வந்து திரும்புகின்றனர் என அமைச்சர் கூறினார்.
இந்தச் சந்திப்பில் அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க, சிறைச்சாலைகள் ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ.ஆர் சில்வா புணர்வாழ்வு ஆணையாளர்நாயகம் சுசந்தஜயசிங்க ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். (ஒ-5)

# பதுக்கிய அரிசி மூடைகள் சிக்கின

கொழும்பு - 13
கொழும்பு புறக்கோட்டை பழைய யோர்க் வீதியிலுள்ள பல கடைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 250இற்கும் அதிகமான அரிசி மூடைகள் நுகர்வோர் அதிகாரசபையால் கைப்பற்றப்பட்டுள்ளன. [illegible] பயன்படுத்தி அரிசியைப் பதுக்கிவைத்து கூடிய விலைக்கு விற்க எத்தனிக்கும் வியாபாரிகளைத் தேடிப்பிடிக்குமாறு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ரைஸ்டோ நுகர்வோர் அதிகாரசபைக்கு விடுத்த உத்தரவை அடுத்தே இந்த அதிரடிச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஒ - 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் கலைப் பயிற்சி



மூச்சுப்பயிற்சி, சுதர்சனகிரியா,
பிரணாயாமம், யோகா, தியானம்
இடம்: கொக்குவில்
கலைமகள் சனசமூக நிலையம்,
கேணியடி, கொக்குவில் - மேற்கு
நேரம்- 4:30-6:30 வரை
திகதி: 14.02.2011 20.02.2011 வரை
தொடர்புகளுக்கு: 0770474757

அனைவரும் வருக ஆனந்தம் பெறுக

## கண்ணீர் அஞ்சலி



06.02.2011 அன்று காலமாகிய எமது பாடசாலையின் பழைய மாணவரும் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் அ.சத்தியமூர்த்தி அவர்களின் சகோதரனுமாகிய

அன்னலிங்கம் ஆனந்தமூர்த்தி
(ஆனந்தா)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், கோண்டாவில்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

### வல்லிபுரம் சிவகாமி



தோற்றம்: 05.06.1933 மறைவு: 09.01.2011

கடந்த 09.01.2011 அன்று இறைபதமடைந்த அமரர் வல்லிபுரம் சிவகாமி அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்துதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மேலும் வெவ்வேறு வழிகளில் உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

அரசடிப் பிள்ளையார் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொ.பே.: 0771600642

வ.பாலசிங்கம் (மகன்),
பா.கமலராணி (மருமகள்),
பா ரவிந்தன் (பேரன் - நோர்வே)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கணேசமூர்த்தி
*(ஓய்வுபெற்ற தபால் அதிபர், அச்சுவேலி)*

வெளிச்ச வீட்டு ஒழுங்கை, தம்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேசமூர்த்தி 11.02.2011 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்பதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சோமசுந்தரம் காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், வனிதாதேவியின் அன்புக் கணவரும், நிஷாந்தி, சுதர்சன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசமணி, காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் சிவபாக்கிய லக்சுமி, நடேசலிங்கம், பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கருணாகரன், கிருபாகரன், வனஜாதேவி, ஞானகரன், கிரிஜாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 13.02.2011 நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
0777570305.

(சி/576026) தகவல்: குடும்பத்தினர்

## விற்பனைக்கு

குறுகிய காலம் பாவித்த குளிரூட்டி (A/C) SINGER 1200 VTU விற்பனைக்குண்டு.

LENOVO LAPTOP விற்பனைக்குண்டு.
Dual - Core 2.70 GHz | 2GB Ram | 500 GB HD

தொடர்புகளுக்கு: 0750414708

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் இருந்து 8Km பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்தியில் 10 பரப்புக் காணியில் சுற்றுமதிலமைந்த சகல வசதிகளோடும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0750420653

## விற்பனைக்கு

சொனி வெகா ரீ.வி, சன் டி.ரி, எச் றிசீவர், மைக்றோ வேவ் அவண் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- 517, நாவலர் வீதி, (வைமன் வீதிச் சந்தி) யாழ்ப்பாணம்.

சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையிடலாம்.

## பொன்விழாப் போட்டிகள்

நேற்றைய உதயனில் (12.02.2011) 21ஆம் பக்கத்தில் வெளியான ''பொன்விழாப் போட்டிகள்'' 2010/2011 (தாதியக் கல்லூரி யாழ்ப்பாணம்) எனும் விளம்பரத்தில்
01. ஆக்கங்களை 28.02.2011க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
02. சிறுகதை மூன்று [03] A4 தாள்கள் எனத் திருத்தி வாசிக்கவும்.

அதிபர், தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## சேவை

U.K, Canada, India, Malaysia, Singapore போன்ற நாடுகளில் கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு. தேவையான தகைமை. O/L, A/L, Working Experience மற்றும் Refuse Visa Reapply, Sponsorship arrangement என்பன. 0113042949 / 0779218444 / 0214910959

## வீடு வளவு, விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியில் 2 ¾ பரப்பில் சகல வசதிகளும் கொண்ட வீடு, வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0112715130
0718671274

## UK VISAS

எமது சேவையில் எல்லா விதமானவிசாக்களும் ஒழுங்கு செய்துதரப்படும்.

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Colombo 6,
Contact: 0774-550747
FLEX Graphic

## வீடு விற்பனை

சண்டிலிப்பாய் - தொட்டிலடி வீதியில் A.G.A. Office க்கு அருகில் 4.5 பரப்புக் காணியில் அமைந்துள்ள அழகிய முறையில் நவீன மயப்படுத்தப்பட்டுள்ள வீடு விற்பனைக்குண்டு. வீட்டுக்கு முன்பாக வீதியை நோக்கி அமைந்துள்ள காணியில் கடைத்தொகுதி அல்லது மற்றுமொரு வீடு அமைக்க முடியும்.
தொடர்புகளுக்கு - 0777-563891
(C/575686)



## STUDY IN UK

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!
NO NEED IELTS

flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
FLEX Graphic

## நிழல் அல்ல; நிஜம்!! ஒரே வாரத்திலே;

* உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!
முகப்பருக்கள், முகச்சுருக்கம், கரும்புள்ளிகள், கழுத்து, உதடுகருமை நீக்கம் போன்றவற்றுக்கான சிகிச்சைகள்
* வயிறு, இடுப்புத்தசைகள், கைத்தசைகள் போன்றன குறைப்பதற்கான சிகிச்சைகள்
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்.
* முடிஉதிர்வு, இளநரை, பொடுகு போன்றவற்றுக்கான சிகிச்சைகள்
* இயற்கை முறையிலான பேசியல்கள்
* அழகுச் சிகிச்சைகள்

முற்றிலும் இயற்கை மூலிகைச் சிகிச்சைகள் பக்க விளைவுகளற்றவை

பதிவுகளை முன்கூட்டியே நேரில் அல்லது அழையுங்கள்
0777351954, 0774011129

SANEYA BEAUTY PALACE
132, KACHCHERI NALLUR ROAD, JAFFNA
(முத்திரைச்சந்தி அருகில்)

## கண்ணீர் அஞ்சலி



அன்னலிங்கம் ஆனந்தமூர்த்தி
(ஆனந்தா)

எமது சனசமூக நிலைய முன்னாள் தலைவர் அன்னலிங்கம் ஆனந்தமூர்த்தி (ஆனந்தா) அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை செலுத்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரும் குமரன் விளையாட்டுக் கழகத்தினரும்
கோண்டாவில்.

## மரண அறிவித்தல்கள்

### கென்றிக் சிசிலியா (யோகம்மா)



யாழ்ப்பாணம், புகையிரத நிலைய ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கென்றிக் சிசிலியா (யோகம்மா) நேற்று (12.02.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கென்றியின் மனைவியும் வாசு, அருள், ஆனந்தி, ஆனந்தன், அசோகன், விஜி, நித்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் ஜெயந்திலா, வசா, குமுதா, ரவி, யஸ்ரின் இரத்தினகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 778, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பொ.சந்திரன்
(பேறாமகன்) 021 2228290

### திருமதி லெட்சுமி தம்பிப்பிள்ளை (சுந்தரம்)



திருநெல்வேலி, முடமாவடியைப் பிறப்பிடமாகவும், வேலணையில் தற்காலிகமாக வசித்தவரும், பாண்டியன் தாழ்வை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி லெட்சுமி தம்பிப்பிள்ளை நேற்று (12.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பத்மாவதி, சித்திரவேல் (லண்டன்), காலஞ்சென்ற நகுலேஸ்வரி (பிறேமா) மற்றும் விமலாவதி (ஜேர்மனி), கமலாவதி (கனடா), யோகேஸ்வரி (திலகம்- ஜேர்மனி), லிங்கேஸ்வரி (லிங்கம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சின்னராஜா (ஜேர்மனி), புளொறன்ஸ் ரஜனி (லண்டன்), குகேந்திரன் (குலம்- மெக்கானிக்), தேவபெனடிக்ற் (ஜேர்மனி), புஷ்பராஜா (கனடா), செல்வராஜா (ஜேர்மனி), விவேகானந்தா (ஆசிரியர், நாவாந்துறை றோ.க வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் நிர்மலன் - கெமிலியா (ஜேர்மனி), விஷ்ணுவர்த்தன் - துஷ்யந்தி (கொழும்பு), சஞ்ஜீவன் (சுவிஸ்), ராஜீவன், லண்டனைச் சேர்ந்த அலன், சேரா, கனடாவைச் சேர்ந்த நிஷாந்தி, சன்னா, கபிலன், ஜேர்மனியைச் சேர்ந்த பிரியந்தி, திவ்வியா, பிருந்தன், பிருந்தாபன் (மாணவன், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி A/L), அபிநயா (புனித ஜோன் பொஸ்கோ, தரம்- 2 மாணவி) ஆகியோரின் பேர்த்தியும் ஜேர்மனியைச் சேர்ந்த அபிஷேக், விதுஷன், சாத்வீகன், கொழும்பைச் சேர்ந்த சதுஷ்ரிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70/6, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.

தகவல்:
ஆ. த.சித்திரவேல், (மகன்)
தொ.பே.: 021 222 6302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு வழங்கும் உலர் உணவு போதியதாக இல்லை மக்களின் தேவையில் ஐம்பது வீதமான உதவிகளையே அரசு வழங்கியுள்ளது. எஞ்சிய உதவிகளைச் சர்வதேச தொண்டுநிறுவனங்களே வழங்கவேண்டும் என்று அரச அதிபர் கோரிக் கைவிடுத்தார்.

இக் கூட்டத்தில் கலந்துகொண்ட எம். எஸ்.எவ், சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஆஸ் திரேலியா, பிரிட்டன்) 'சூ' ஆகிய அமைப்புக்கள் உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தன. (ஒ-ஐ)

## மனித... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராஜா, முன்னாள் அரச பகுப்பாய்வாளர் கலாநிதி ஆனந்த மெண்டிஸ் மற்றும் பேர்னாட் சொய்ஸா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் எம்.சுவாமிநாதன் ஆகியோர் நாடாளுமன்ற சபையின் உறுப்பினர்களாவர்.

நாடாளுமன்ற சபையின் முதலாவது அமர்வில் எதிர்க்கட்சி பிரதிநிதிகள் பங்குபற்றவில்லை என்பதும் குறிப்படத்தக்கது.

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பதோ எமது பொறுப்பு அல்ல. அவரை வைத்து வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களின் ஆதரவுடன் நாட்டைப் பொருளாதார ரீதியாகக் கட்டி எழுப்புவதே அரசின் திட்டம். அவரை வடக்கு மாகாண முதலமைச்சராக்கி வடக்கின் அபிவிருத்தியை முன்னெடுப்பதே எமது விருப்பமாகும்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் இருப்பது போன்று வடக்கின் முதலமைச்சராக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

அதன் மூலமே வடக்கு, கிழக்கை மீளக்கட்டி எழுப்பி மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்க முடியும்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு அளித்து வருகின்றோம். அவர்களின் இயல்பு வாழ்வுக்கான சகல உதவிகளையும் அரசு வழங்கும். அவர்களின் திருமண வாழ்வு முதல் சகலவற்றுக்கும் அரசு உதவும் - என்றார். (உ-ஐ)

## அரச வாகனங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் ஒரு சில பாதுகாப்பு பிரிவுகளின் மற்றும் ஒரு சில தனியார் நிறுவனங்களின் வாகனங்களுக்குத் தேவைப்படும் எரிபொருளைத் திருடி விற்கும் இவ்விடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் வாகனச் சாரதிகள் அவ்விதம் பெற்றுக்கொள்ளும் வாகனச் சாரதிகள் அவ்விதம் பெற்றுக்கொள்ளும் எரிபொருளுக்கு அதிகாரபூர்வ எரிபொருள் நிரப்பு நிலையங்களால் வழங்கப்படும் சிட்டைகளைச் சமர்ப்பிக்கும் தந்திரத்தைக் கையாண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விதம் அதிகாரபூர்வ எரிபொருள் சிட்டைகளை வழங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊழியர்களுக்கு இந்தக் கள்ளச்சந்தை எரிபொருள் வியாபாரிகள் சிட்டைகளின் எண்ணிக்கைகளுக்கு அமைய தரகுப்பணம் வழங்கியுள்ளதாகவும் இக்கள் எச் சந்தை வியாபாரிகள் குறித்த விலையை விட பத்து ரூபா குறைத்து எரிபொருளை விற்பனை செய்துள் ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இவர்களிடமிருந்து 6,720 லீற்றர் டீசல் மற்றும் 60 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ-22)

## மெய்வன்மைப்போட்டி

பருத்தித்துறை கலட்டி றோமன்கத்தோலிக்க தமிழ்கலைவன் பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பி.அருமைச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு இளைப்பாறிய உடற்கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் திருமதி இரத்தினபூபதி வல்லிபுரம் பரிசில்களை வழங்குவார். (த-236)

## மீள்குடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகொள்ளுமாறும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடத்துவது சாத்தியம் இல்லை என்று அரச அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் வடிந்து மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னரே தேர்தலை நடத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-ஐ)

SPH ஷார் தனியார் மருத்துவமனை
புலோலி மேற்கு, பருத்தித்துறை.
T.P.No. 021 7201028, 021 7200178
நீண்ட இடைவெளிக்குப் பின்
காது, மூக்கு, தொண்டை நிபுணர்
Dr.T.திருமாறன்
இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3 மணிக்கு வருகை தர உள்ளார்.
முன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**வீடு வாடகைக்கு உண்டு**
சுதுமலை வடக்கு, மானிப்பாயில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வெளிநாட்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0776159217,
021 2223695

யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்
காலம்: 17.02.2011 வியாழக்கிழமை
நேரம்: மு.ப. 10 மணி
இடம்: பாடசாலை மண்டபம்
மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
பாடசாலை முதல்வர்.

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.சிவனேஸ்வரராசா (வயது-55) என்பவரின் சடலமே மீட்கப்பட்டிருந்தது. பிரஸ்தாப நபர் கொலைசெய்யப்பட்டே கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் என்று ஏற்கனவே சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் காரைநகர் பிரதேச சபையின் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டி யிடும் ஐ.தே கட்சியின் வேட்பாளர் எஸ்.சதானந்தன் உட்பட மூவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்திருந் தனர்.

கைதான மூவரும் கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், தொடர்ந்து விசாரணைகளை நடத்துமாறு பொலிஸாரைப் பணித்தார் (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பவதி ஆனந்தராஜா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனந்தா வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி ஆனந்தராஜா அவர்கள் நேற்று (12.02.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆனந்தராஜாவின் அன்பு மனைவியும், திருமதி நிமலா, மயூரன் (நோர்வே), செல்வி தர்சிகா, கிரிசாந் (கனடா), நிரூசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை), திருமதி மா.வாசுகி (யாழ்.பல்கலைக்கழகம் புவியியல்துறை 2 ஆம் வருடம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி, மானிப்பாய். தகவல்: கணவர்,
தொ.பே. 021 4921897, 0775242495 பிள்ளைகள், மருமகன்.

## சுப்பிரமணியம் புஸ்பதேவி

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் சங்கானையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் புஸ்பதேவி நேற்று (12.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (சவாரிச்சுப்பர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கணபதிப்பிள்ளையின் அன்பு மகளும் திரு.திருமதி தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரந்தாமன் மற்றும் சாந்தன் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபாசினியின் (UK) அன்பு மாமியாரும் விதுஷன், ஷானுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் முருகேசபிள்ளை, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சுந்தரலிங்கம் திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, நடராஜா மற்றும் இராசரத்தினம், தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலம்புப்புளியடி, தகவல்: க.இராசரத்தினம்
சங்கானை. (மைத்துனர்).

German - Deutsch
Netherland - DUTCH
Our Success Story

ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து நாடுகளுக்கு நிரந்தர விஸாவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அந்தந்த எம்பஸிகளினால் நடத்தப்பட்ட ஜேர்மன் டொச், நெதர்லாந்து டச் மொழிப் பரீட்சையில் இம்முறை வெற்றிபெற்ற எமது மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து டச் மொழிக்கல்வியை நாம் கடந்த 5 வருடங்களாக வழங்கிவருகின்றோம்.

1) நவீன குளிரூட்டப்பட்ட Vedio - Audio with Digital White board class rooms.
2) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட மொழிக்கல்லூரி.
3) வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர் குழாம்.
* புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ள பதிவுகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன.
* முக்கிய குறிப்பு:- நெதர்லாந்து சட்ட விதிகள் April முதலாம் திகதியிலிருந்து மாற்றமடையவிருப்பதால் விரைவாக உங்கள் பரீட்சைகளைச் செய்து முடியுங்கள்.
சரியாக ஒரு மாதத்தில் உங்களை நாங்கள் தயார்ப்படுத்தி பரீட்சையில் சித்திபெறச்செய்வோம்.
* மேலும் Italian, French வகுப்புகளும் இங்கு நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(The Center For International Language Studies)
C/576019
No.3, 2nd lane, Palaly Road, Jaffna.
Tel:- 021 321 6928, 021 222 0393, 0774842464, 0779927117

# மரண அறிவித்தல்



## அன்னலிங்கம் ஆனந்தமூர்த்தி (ஆனந்தா)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொறன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் ஆனந்தமூர்த்திகடந்த 06.02.2011இல் கனடாவில் காலமானார்.

அன்னார் அன்னலிங்கம் - சற்குணலீலாம்பிகை (பூமணி) தம்பதியரின் (கனடா) அன்பு மகனும், சற்குணலிங்கம், காலஞ்சென்ற பழனித்துரை மற்றும் கமலாம்பிகை பாலசிங்கம் (கனடா) ஆகியோரின் பெறாமகனும், கணேசலிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் (அமெரிக்கா), சீதாலட்சுமி - சபாரத்தினம் ஆகியோரின் மருமகனும், சத்தியமூர்த்தி (மூர்த்தி), கனடாவைச் சேர்ந்த சுசீலா - மனோகரன், கிருஷ்ணமூர்த்தி (கிருஷ்ணா), செந்தில் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகேஸ்வரி, மனோகரன் (கனடா), கவிதா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் சஞ்சீவ், றஜீவ், நிறோச், சஜித்தா, பிரணவன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், நிறோஸ் (கனடா), ரவீன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை 1591, ENGINMILLS VISITATION CENTRE, RICHMOND HILL, TORONTO,CANADA என்ற விலாசத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.இல - கனடா -0012893040067
கொட்டைக்காட்டு வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
சத்தியமூர்த்தி
(சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்திப்பிரிவுகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் முகிலுடன் கூடிய தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உண்டு

# பொருள்கள் விற்பனையின்போது சிட்டை வழங்கப்படுவது கட்டாயம்

## நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

பொருள்களை விற்பனை செய்யும் போது வர்த்தகர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் கட்டாயமாக விளக்கமான சிட்டையொன்றை நுகர்வோருக்கு வழங்க வேண்டுமென நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமிமார்சூக் தெரிவித்துள்ளார்.

மேலும் நுகர்வோருக்கு வழங்கப்படும் சிட்டையில் பொருள் விற்கப்பட்ட திகதி, விற்கப்பட்ட பொருள்களின் அளவு, செலுத்தப்பட்ட பணத் தொகை விவரங்கள், கொள்வனவின் தன்மை (தொகையாகவோ சில்லறையாகவோ என்பது) வர்த்தக நிலையத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், வர்த்தகம் பதிவுசெய்யப்பட்டுள்ள இலக்கம் என்பவை கட்டாயமாக உள்ளடங்கியிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

2003 9 ஆம் இலக்க நுகர்வோர் அதிகார சபைச் சட்டத்தின் 28 ஆவது சரத்துக்கு அமைய விற்கப்படும் ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும் சிட்டையொன்றை வழங்குவது கட்டாயமாகிறது எனத் தெரிவித்த அவர், அவ்விதம் விவரமான சிட்டையை வழங்காத வர்த்தகர்களுக்கு எதிராக அதனை சபைச் சட்டத்துக்கு அமைய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும் என்றும் கூறினார்.

மேலும் பொருளொன்றைக் கொள்வனவு செய்யும் போது அதற்கான சிட்டையைக் கோருவது நுகர்வோரின் பொறுப்பு எனவும் சுட்டிக்காட்டும் அவர் நுகர்வோரின் பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (த-22)

## சித்த மாணவரின் பெறுபேறுகள்

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் 22ஆம் அணி மாணவர்களது ஆண்டிறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிகிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கடந்த டிசம்பர் மாதம் 6ஆம் திகதி நிறைவடைந்தது. பரீட்சை நடந்து ஒருமாதகால அவகாசத்தினுள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவேண்டும்.ஆனால் அவ்வாறு வெளியாக வில்லை.

இந்த நிலையில் கடந்த 6ஆம் திகதி உதயனில் பெறுபேறுகள் வெளிவரவில்லை. சித்த மருத்துவ மாணவர் அதிருப்தி- சம்பந்தப்பட்டோர் கவனம் எடுப்பாரா என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

## பெரியவிளானில் வழிப்பறி அதிகரிப்பு

பண்டத்தரிப்பு,பெப்.13

பண்டத்தரிப்பு - பெரியவிளான் அண்மைக் காலமாக இரவு நேரங்களில் போக்குவரத்து செய்வோரிடம் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இளவாலைப் பொலி ஸார் இவ்வீதியூடாக இரவு நேரங்களில் ரோந்து நடவடிக் கையை ஆரம்பித்து உள் ளனர்.

அவ்வாறு இருந்த போதும் சில தினங்களுக்கு முன்னர் மேற்படி வீதியில் நின்ற இருவர் தாம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்று கூறி வீதியால் வந்தவர்களைச் சோதனை செய்து அவர்களிடம் பணம் நகை என்பனவற்கைக் கேட்டுள்ளனர். பயணிகள் அதற்கு மறுத்த போது அவர்களைத் தாக்கி உள்ளனர். இது தொடர்பாக தகவல் அறிந்த இளவாலைப் பொலிஸார் இவர்களைக் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆயர் செய்தனர். இந்த இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

## சமுர்த்தி அதிகார சபையின் உயர் பதவிகளில் வெற்றிடம்

### திட்டங்களைச் செயற்படுத்துவதில் சிக்கல்

கொழும்பு,பெப்.13

சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் பதவிகள் உட்பட உயர்பதவிகள் பல நிரந்தரமாக்கப்படாதுள்ளமையால் பெருமளவு திட்டங்களைச் செயற்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாகச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் , சமுர்த்தி முகாமையாளர்களும் தெரிவிக்கின்றனர்.

சமுர்த்தி அதிகாரசபையினால் சமூக அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தி, மனிதவள அபிவிருத்தி, வங்கிகள் மற்றும் நிதி, மீன்பிடி மற்றும் கால் நடை நிர்வாகம் போன்ற பிரிவுகளுக்குரிய திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படுகின்றன.

ஆனால் அதிகார சபையின் உயர்பதவிகள் பலவற்றில் உள்ளவர்களின் பதில் அல்லது வேலைகளை ஒழுங்கமைப்பதற்கு நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளே என்பதால் முடிவுகள் மற்றும், தீர்மானங்களை மேற்கொள்வதில் அவர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி சமுர்த்தி அதிகார சபையிடம் வினாவப்பட்ட போது இந்தப்பதவி நியமனங்களின் மூலம் சமுர்த்தி அதிகார சபையின் செயற்பாட்டில் சிக்கல்கள் எதுவும் ஏற்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-22)

## நாளை மின்சாரம் தடை

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## சாராயம் எனக் கருதி கறுவாத் தைலத்தை அருந்தியவர் மரணம்

மனைவிக்குப் பயந்து சாராயப் போத்தலை மறைத்து வைத்திருந்த இரு பிள்ளைகளின் தந்தை தவறுதலாக கறுவாத் தைலத்தை அருந்தியதால் மரணமாகியுள்ளதாக ஹக்மன பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவிக்குத் தெரியாமல் இரகசியமாக வீட்டின் பின்புற அறையின் தட்டொன்றில் வைத்திருந்த கறுவாத் தைலத்தை தவறுதலாக அருந்தி விட்டார். அதனைத் தொடர்ந்து கறுவ மணம் வீசத் தொடங்கியதும் சந்தேகப்பட்டு விசாரித்த மனைவியிடம் குளிருக்காக தைலத்தை பூசிக்கொண்டதாக பதில் கூறியுள்ளார்.

சிறிது நேரத்தின் பின் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார். ஹக்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-5)

## பெரும்போக நெல் விளைச்சல் 12 கோடி புசல்களாகக் குறையும்

இம்முறை பெரும்போக விளைச்சலில் 14 கோடியே 30 இலட்சம் புசல் நெல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வெள்ளப் பாதிப்புக் காரணமாக அத்தொகை 12 கோடி புசல்களாக குறையக் கூடுமென விவசாய சேவைகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்ததாக கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டது.

இலங்கையின் 9 மாவட்டங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்திய வெள்ளப் பெருக்கு மற்றும் அதிக மழை காரணமாக பெரும் போக நெல் விளைச்சலில் இரண்டு கோடியே முப்பது இலட்சம் புசல் நெல் அழிவடையும் நிலையில் உள்ளது எனவும் அவற்றின் பெறுமதி ஆயிரத்து 322 கோடி ரூபாய் வரையில் இருக்கக்கூடும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புள்ளி விவரங்களுக்கு அமைய 2010-2011 பெரும் போகத்தில் நாடு முழுவதும் நெற்செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களின் அளிவுப் பிரமாணம் 18 இலட்சத்து 29 ஆயிரம் ஏக்கர்கள் எனவும் கடந்த ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக 5 இலட்சத்து 76 ஆயிரத்து 121 ஏக்கர் செய்கை வயல்கள் வெள்ளத்தில் மூழ்கிப் போயுள்ளதாகவும் அமைச்சர் அந்தச் செய்தியில் விவரித்தார்.

கடந்த தினங்களாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அனுராதபுரத்தில் 70 ஆயிரம் ஏக்கரும், பொலநறுவையில் 7 ஆயிரத்து 947 ஏக்கரும், அம்பாறையில் 19850 ஏக்கரும் திருகோணமலையில் 31 ஆயிரத்து 580 ஏக்கரும், மட் டக்களப்பில் 13 ஆயிரத்து 560 ஏக்கரும், வவுனியாவில் 8 ஆயிரம் ஏக்கரும், முல்லைத்தீவில் 11ஆயிரத்து 485 ஏக்கரும், கிளிநொச்சியில் 13 ஆயிரம் ஏக்கரும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறான போதிலும் ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 460 மெற்றிக்தொன் நெல்கையிருப்பில் இருப்பதால் எந்த விதத்திலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் அமைச்சர் சந்திரசேன தெளிவுபடுத்தினார். (த-22)

## நெல் கொள்வனவு செய்யும் ஆரம்ப வைபவம் கிளிநொச்சியில்

கொழும்பு,பெப்.13

பெரும்போகத்தில் விளைந்த நெல்லைக் கொள்வனவு செய்யும் ஆரம்ப வைபவம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவரான கே.பீ.ஜெயசிங்க ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

நெல் கொள்வனவுக்கான நிதிச் சபையின் வசமுள்ளதாகவும், தொடரும் நெல் கொள்வனவுக்குத் தேவைப்படும் நிதியை வழங்குவதற்குத் திறைசேரி இணங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டரிசிக்கான நெல் -கிலோ 28 ரூபாவும், சம்பா நெல்- 30 ரூபாவாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்யவுள்ளது.

மேலும் இதற்கு முந்திய போகங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 82 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உள்ளது என்றும் ஜெயசிங்க தெரிவித்துள்ளார். (த-22)

# நிகழ்வுகள்

**நூல் வெளியீட்டு விழா**

யாழ்ப்பாணம்,பெப்.13

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய 'தரிசனங்களும் வாழ்வியலும்'' நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக வைத்திய நிபுனர் க.பிரேமகிருஷ்ணா தம்பதிகள் கலந்துகொள்வார்கள்.

இந்த நூலில் க.பொ.த .உயர்தரத்துக்கான இந்து நாகரீகம் பகுதி-11 க்கான புதிய பாடத்திட்டம் உள்ளடங்கியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (ற-313)

**ஆலய பரிபாலன சபைக் கூட்டம்**

கோப்பாய், பெப்.13

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் உபதலைவர் டி.தயாகரன் தலைமையில் நடைபெறும். (ற-72)

**பழைய மாணவர் சங்கக் கூட்டம்**

தென்மராட்சி,பெப்.13

மீசாலை வீரசிங்க மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லேரியா வானில் பறந்த மர்மப் பொருள் என்ன?

கொழும்பு, பெப்.13

கொழும்பு, முல்லேரியா வான்பரப்பில் நேற்றிரவு அடையாளம் தெரியாத மர்மப் பொருள் ஒன்று பறந்தது அவதானிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். மக்களிடம் இருந்து அப்படியான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அதிகாரிகளும் தெரிவித்தனர்.

நேற்றிரவு முல்லேரியா வான் பரப்பில் மர்மப் பொருள் ஒன்று பறப்பதை நகர வாசிகள் பலரும் அவதானித்துள்ளனர். இதுகுறித்து ஆர்தர் சி கிளார்க் நிலையத்துக்கும் தகவல்கள் கிடைத்துள்ளதாக அதன் ஆலோசகர் கலாநிதி சந்தன ஜெயரட்ண தெரிவித்தார். வானில் பறந்த மர்மப் பொருள் என்ன என்பது தொடர்பாகத் தாம் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ)

# இந்தியச் சபாநாயகர் மீரா குமார் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு



கொழும்பு, பெப். 13

நான்கு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் மீராகுமார் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வந்தார். இன்று பகல் அவர் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பொதுநலவாய நாடாளுமன்ற அமைப்பின் ஆசியப் பிராந்திய 3ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்கே மீரா குமார் இலங்கை வந்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் ஆரம்பமான இந்த மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் ஆரம்பநாள் உரையை மீரா குமார் நிகழ்த்தினார்.

கடந்த ஜனவரி மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் அதையடுத்து வெளிவிவகார செயலர் நிருபமாராவும் இலங்கை வந்திருந்தனர்.

இவர்களை அடுத்து இந்திய நாடாளுமன்ற சபாநாயகரின் வருகை இடம்பெற்றிருக்கிறது.

அலரி மாளிகையில் நேற்று ஜனாதிபதியை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார் மீரா குமார். அவருடன் இந்திய அதிகாரிகளும் இருந்தனர். ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்கவும் சபாநாயகர் சாமல் ராஜபக்ஷவும் இருந்தனர். (உ)

# மன்னார் வளைகுடாவில் ஜூலையில் எண்ணெய் அகழ்வு ஆரம்பமாகும்

கொழும்பு, பெப்.13

மன்னார் கடற்பகுதியில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகும் என்று இந்திய நிறுவனம் அறிவித்துள்ளது.

எண்ணெய் அகழ்வுக்கு என அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் ஒன்றில் இந்திய நிறுவனமான கெய்ன் இந்தியா தனது பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதற்கென ஆழ்துளையிடும் கப்பல் ஒன்று மன்னார் கடற்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு அது சார்ந்த ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கெய்ன் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.

மன்னார் கடற்பகுதியில் எண்ணெய் அகழ்வை மேற்கொள்வதில் இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளுக்கு இடையில் கடும் போட்டி ஆரம்பமாகியுள்ளது.

மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள பகுதிகளை சிறிலங்கா அரசு எட்டுத் துண்டங்களாகப் பிரித்துள்ளது.

இவற்றில் இரண்டு துண்டங்கள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வழங்கப்பட்டுள்ளன. முன்னதாக இந்திய அரச நிறுவனமான கெய்ன் இந்தியா என்ற நிறுவனத்துக்கே இந்த துண்டம் ஒன்று வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் சீனாவுக்கும் ஒரு துண்டம் வழங்கப்பட்டுள்ளதாகத் தற்போது வெளியாகும் செய்திகள் கூறுகின்றன. ஏனைய ஐந்து துண்டங்களையும் விரைவில் அனைத்துலக மட்டத்தில் ஏலத்தில் விற்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டுத் தொடக்கத்தில் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ ரஷ்யா சென்றிருந்த போது நடத்தப்பட்ட பேச்சுக்களில் மன்னார் கடற்படுக்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை மேற்கொள்வதற்கு ரஷ்ய அரச நிறுவனம் இணங்கியிருந்தது.

இந்த நிலையில், மன்னார் கடற்படுக்கையில் எஞ்சியுள்ள ஐந்து எண்ணெய் அகழ்வுத் துண்டங்களுக்கு அனைத்துலக அளவில் கே[illegible] இந்தியா, சீ[illegible] கள் கடும் போட்டியில் இறங்கவுள்ளன.



# சந்தியடிச் சோமு

## ஏவல் பேயுடன் கூட்டுச் சேரும் பெரிய வாத்திமார்

போனகிழமை முழுக்க ஒரே நாய் அலைச்சலாப் போச்சுப் பாருங்கோ! அது என்னெண்டால் என்ர பேத்தி அரக்கால் பவுண் காதுக்குச்சிய துலைச்சுப் போட்டாள். இப்ப பவுண் விக்கிற விலைக்கு சும்மா இருக்கேலுமே வீடு வளவு வாய்க்காலெல்லாம் துருவித்துருவித் தேடி ஒரு இடத்திலையும் கிடைக்கேல்லை.

நான் உந்த விளக்குமாத்துக் கட்டையால மெதுவாத் தடவித் தடவிப் பாத்தும் கிடைக்கேல்லை. பின்ன என்ர மனிசி சொல்லிச்சு, ஒருக்கா வெத்திலையில மை போட்டுப் பாப்பமெண்டு. நான் தொடுகிலும் மாட்டனெண்டு போட்டன். மனிசியின்ர நச்சரிப்பு தாங்கேலாமல் போச்சுது. போதாக்குறைக்கு மனிசி குத்தலாயும் கதையள் விட வெளிக்கிட்டுட்டுது. அதில முக்கியமானது உந்தப் பேப்பருக்க தலையக் குடுத்திட்டு சாய்மனைக் கதிரையில மணித்தியாலக் கணக்காக் கிடக்கிறனாம் எண்டது.

இதுக்கு மேல என்னத்துக்கு வம்பெண்டு போட்டுக் கிளம்பினன். வாலாயத்தில சொல்லுறவன் ஒருத்தன் இருக்கிறானெண்டு போட்டு அவனிட்டப் போனன். நான் போனது பின்னேரக் கை. அவன் பாவி சாடயா 'டிம்'மில நிண்டான். அவன்ர மனிசி சொல்லிச்சு, ''விடிய வெள்ளன சூரியன் உதிக்கேக்க, வெத்தில பாக்கு பழம் காசு வைச்சுக் கேட்டாத்தான் சொல்லுவார்'' எண்டு. சரியெண்டு தலையாட்டிப் போட்டு வந்தனான். அடுத்த நாள் வெள்ளனவே பௌவியமா போய் நிண்டன்.

அங்க ஒரு நாலைஞ்சு பேர் மை போட்டுக் கேட்க நிண்டினம். அதுல எல்லாரும் என்ன மாதிரி நகையத் துலைச்சாக்கள்தான். ஒருத்தர் மட்டும்தான் பேப்பரோட நிண்டார். நான் விடுப்பறியிற நோக்கத்தில மெல்ல பேச்சுக் குடுத்தன். அந்தாளோ தன்ர குறிப்பையும் பேப்பரையும் மறைச்சு மறைச்சு வச்சிருந்திச்சு. நான், ''நீங்களும் ஏதேன் துலைச்சுப் போட்டியலோ'' எண்டு கேட்க, ''இல்லை, இல்லை'' எண்டு அவசரமா மறுத்தவர் பிறகு மெல்லச் சொன்னார், ''இந்தப் பேப்பரில கண்டபடிக்கு எழுதுறாங்கள். அதுதான் யார் ஆக்கள் எண்டு அறிய வந்தனான்'' எண்டு.

எனக்கொருக்கா நெஞ்சுக்குள்ள 'திக்' எண்டுது. இப்பிடி எல்லாத்துக்கும் மை போட்டுப் பாக்கலாமோ எண்டு. வெறுவாயை மெல்லுற எனக்கு அவல் கிடைச்சா விடுவனே, உள்ளுக்க ஊறின பயத்தை மறைச்சுக் கொண்டு மெல்ல மெல்ல கதையளக் கேட்டன். தானொரு ''மிருதங்க வாத்தியெண்டார்'' ஆள். எனக்கு உள்ளுக்க ஒரு பொறி தட்ட ''எந்தப் பள்ளிக்கூடம்; கம்பஸா கிம்பஸோ'' எண்டன். ''உங்களுக்கு என்னெண்டு தெரியும்'' எண்டார். ''முகத்தைப் பாத்தாலே களை தெரியுதுதானே'' எண்டு நான் அள்ளி விட்டன். ஆள் அப்பிடியே பூரிச்சுப் போச்சு. ''அது சரி! யார் உங்களுக்கு எதிரா எழுதுறாங்கள்'' எண்டு மெல்ல நூல் விட்டுப் பாத்தன். ''சோமு எண்ட பேரில எழுதுற ஆள்தான்'' எண்டார். ''என்னைப் பற்றித் தெரியேல்ல அவனுக்கு! மை போட்டுப் பாத்து செய்வினை செய்து விடப் போறன்'' எண்டு ஆள் சும்மா எகிறிச்சுது.

''ஓம்! ஓம்! உவங்கள மாதிரி ஆக்களை விடப்படாது; முடிஞ்சால் உங்களுக்குத் தெரிஞ்ச ஆக்களிட்டைச் சொல்லி சந்தியில கட்டி வச்சுச் சுட்டாலும் பரவாயில்லை'' எண்டன் நான். ஆளுக்கு ஒரே சந்தோஷம். இருந்தாலும் எனக்கு உள்ளூரக் கொஞ்சம் பயன் பிடிச்சிட்டுது. ஏதேன் ஏவிக் கீவி விட்டுடுவாங்களோ எண்டு.

நடந்த உண்மையளச் சொல்லப் போய் இப்ப அது எங்க வரைக்கும் போய் நிக்குது எண்டு பாத்தியளே. எல்லாம் விதிப் பயன். இவையள் படிப்பிச்சு வெளியில வாற பெடியள நினைச்சுத் தான் எனக்கு ஒரே கவலை. ''சரியா நேரம் போகுது'' எண்டு சொல்லிப் போட்டு நான் அங்க இருந்து வெளிக்கிட்டிட்டன்.

நான், பின்னேரக் கையா சந்தியடியில விசயத்தச் சொல்ல, நடா அண்ணை, ''தனக்குப் பிடிக்காதவனுக்குக் கெடுதி செய்ய எந்தப் பேயோடயும் பிசாசோடையும் கொண்டாட்டம் வைக்கிறது கூட்டுச் சேருரது எல்லாம் எங்களோட ஊறிப்போன சங்கதியள்; உதில என்னத்த புதிசாக் கண்டனி'' எண்டு சலிச்சுக் கொண்டார்.

பேயளோட கூட்டுச் சேருற அலுவல்ல படிச்ச பிறவியள் தான் அதிகம் எண்டுறது கதிரண்ணையின்ட அசைக்க முடியாத கருத்து. இரண்டு கால் பேயா இருந்தாலென்ன காலே இல்லாத பேயா இருந்தால் என்ன சுயநலத்துக்கா அவையள் எங்கயும் போய் விழுந்து கிடக்க அவையள் ரெடி எண்டு காரசாரமா விளாசிச்சுது மனுசன்.

எல்லாத்தையும் கேட்டுக் கொண்டிருந்த கம்பஸ் வாத்தி சொன்னார், ''சோமண்ணை நீ எழுதினத்துக்கே செய்வினை சூனியம் எண்டால், போன கிழமை இங்கிலிஸ் பேப்பரில நாறு நாறெண்டு எல்லாத்தையும் நாறடிச்சு வச்சிருக்கிறாங்கள், அத எழுதின ஆளுக்கு அப்ப பெரிய செய்வினையா எல்லோ செய்ய வேணும்'' எண்டார். ''சிலவேளை இந்தியாவில இருந்து சித்தரக் கொண்டு வந்து சூனியம் வச்சாலும் வைப்பினம்'' எண்டார் கனகண்ணை. ''ஆராம் அத எழுதினது'' இது நான். தெரிஞ்சு வச்சா எனக்குக் கூட்டுக்கு ஒரு ஆள் கிடைக்கும் எல்லே! அதுக்குத்தான். ''எல்லாம் உள்ளுக்க வாறத்துக்கு தலைகீழா நிக்கிற ஒருத்தர் தானாம் எண்டு பரவலாக் கதை'' எண்டார் கம்பஸ் வாத்தி. இனி நான் அந்தாள மை போட்டுத்தான் பாக்க வேணும் போல எண்டு நினைச்சுக் கொண்டன். ''பொறுமையும் நாகரிகமும் தெரியாத இவையள்தான் பாருங்கோ எங்கட பிள்ளளையள எதிர் காலத்துக்குத் தயார்ப்படுத்தி விடப்போகினம். நான் கெட்டாலும் பரவாயில்லை மற்றவன் நல்லாயிருக்கக் கூடாது என்றது கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு வாளுடன் முன் தோன்றின தமிழனின் தாரக மந்திரம். அதை அப்பிடியே கடைப்பிடிக்கினம் உந்த புறவிசர்மார்'' எண்டு கிரந்தம் வாசிச்சார் கதிரண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Study & Work In Uk
Dont Miss It Last Opperunite
Payment After Visa "Only March31st"
Admission From 'A' Rated College
Entry Qualification G.C.E (O/L)
Lower Cost
Easy Payment Scheme
Free Sponsor Advice
100% Granteed Visa
For More Details
**Educare International (pvt) Ltd.**
No, 422/1, Galle Road, Colombo-03
- Contact
Senthuran - 077-7359691
Risi - 077-1318544
Our Branch Office
Vivekananda Academy
No- 03, 2nd Lane, Palaly Road, Jaffna
Tel:- 021-3216928
Mobile:- 077-4842464
Email- educareint@mail.com

**கணினி புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | | | |
|---|---|---|---|
| O/L & A/L | Diploma In Ms Office | 2 Months | WORKERS |
| | Diploma In DTP | 2 Months | |
| | Diploma In Web Design | 3 Months | |
| | Diploma In Graphic Design | 3 Months | |
| | Internet & E-mail | 1 Month | |
| | Kids Programe | 1 Month | |

162, Main Street, Jaffna.
T.P.No:-021-222-1417
**Sky Computers (Pvt) Ltd.**
'Today You Learn Tomorrow You Lead'

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்
PHYSICS
Mr.S.Sasi, B.Sc (Edu.)
A/L 2011 - 'மின்புலம்'
Tue, Thurs 6p.m
2011 - 'Sound'
Wed, Fri 6 p.m
2013 - BASIC
Tue, Thurs 5 p.m
(அ-575390)

**German, swiss மொழிகள்**
German, swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் German Embassy யால் கேட்கப்படும் Certificate ஏற்றவாறு நடைபெறுகின்றது.
10 Palaly Road Jaffna,
T.P - 0771604823
(0/9)

**கணனி விற்பனைக்கு**
*Full Set Computers*
Core 2 Duo Laptop
Dlcore 3.06 GHZ
1 Core 3 Laptop

| | |
|---|---|
| PIV 1.7 GHZ | 15750/= |
| PIV 2.0 GHZ | 16750/= |
| PIV 2.4 GHZ | 18750/= |
| PIV 3.0 GHZ | 21750/= |

Pen Drives
650 VA UPS
Colour Printers
Laser Printers
Three Years Warranty 7.2 MbpS Dungel 3G
162, Main Street, Jaffna.
TP. NO :- 021-222-1417 - 0750698608
Sky Computer System.

**புத்தகம் கட்டும் பயிலுநர் தேவை**
புத்தகம் கட்டுநராகப் (Book Binders) பழக விரும்பும் பெண்கள் மட்டும் 14,15-02-2011 திகதிகளில் (திங்கள், செவ்வாய்க்கிழமை) முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை சுயவிபரக் கோவையுடனும், அண்மைய நற்சான்றிதழுடனும் வருகை தருவது விரும்பத்தக்கது.
பாரதி பதிப்பகம்
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**இறைச்சிக் கோழி விற்பனை**
நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் காலை 6.00 இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு - மல்ரிபாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.
(791)

**வீடு விற்பனைக்கு**
கே.கே.எஸ் வீதி, நந்தாவில் - தாவடியில் 2 பரப்புக் காணியும் மேல்மாடி வீடும் கீழ்த்தளம் இரண்டு கடையும் வாகனத் தரிப்பிடமும் விற்பனைக்கு உண்டு
(314) தொடர்பு - 0775320260

### லண்டனில் கல்வி இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்
பெப்-13

லண்டனில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான இலவசக் கருத்தரங்கும் உடனடி அனுமதி வழங்குதலும் எதிர்வரும் 26ஆம் திகதி முற்பகல் 10.30 மணிமுதல் பிற்பகல் 3மணி வரை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடைபெறும்.

இதில் லண்டன் வெஸ்ற்மின்ஸ்ரர் அக்கடமியின் பணிப்பாளர் செல்வி கமிலா கற்றார்ஸியா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

### சைவபரிபாலன சபையின் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் வருடந்தோறும் நடத்தப்படும் முன்னோடித் தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. படிவங்கள் கிடைக்காத பாடசாலைகள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**Deutsch, Dutch, French, Italian**
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
COV.Reg.No W/A76795
T.P : 0774842464, 0213216928, 0779927117

e.com
கம்பியூட்டர் கற்கைநெறிகள்
Head Office :No.95A Temple Road, Nallur, Jaffna
Branch : K.K.S. Road, Kondavil, Jaffna.
Diploma in Microsoft Office 2010
Diploma in Desk Top Publishing
Diploma in Computer Networking
Diploma in Web Designing
Diploma in Computer Hardware
Diploma in Video Editing
Diploma in Computerized Accounting
Certificate in Internet & E-Mail


O/L, A/L மாணவர்களுக்கான ICT, GIT புதிய வகுப்புக்கள் Call : 0217429005

**கார்கள் விற்பனைக்கு**
★ மிகவும் நல்ல நிலையிலுள்ள TOYOTA CORONO, Aloy Wheel, Power Steering , A/C வசதிகளுடன் 17 - xxxx தொடரிலக்க முடைய காரும்
★NISSAN B -11 13 - xxxx, 14 - xxxx தொடரிலக்கங்களுடைய கார்களும் A/C உட்பட Original வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 824 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 0774528818
(C/57601)

Tilko Jaffna City Hotels (Pvt)Ltd.
TILKO hotels




**NOW OPEN**
PRIYA RESTAURANT
IN TILKO JAFFNA CITY HOTEL
உங்கள் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் சுவையாகவும், நவீன வசதிகளுடனும் உண்டு மகிழ்ந்திட இன்றே வாருங்கள், ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்
Celebrate your birthday and other special occations in style.
Specialist chefs will prepare Delicious.
SRILANKAN, SOUTH INDIAN, NORTH INDIAN and CHINEESE foods at reasonable cost and to your entire satisfaction.
*Business Meeting Rooms are available to hire with or without meals.*
*Fully air-conditioned, Car park is available.*
*"we care and it shows"*

**NOW OPEN**
KABRI BAR
IN TILKO JAFFNA CITY HOTEL
After a hard day's work you deserve a rest in comfortable and pleasurable atmosphere.
KABRI BAR உங்களை வரவேற்கிறது.
எல்லா வகையான வெளிநாட்டு உள்நாட்டு மதுபானங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
Treat yourself and your friends and business colleagues at KABIRI BAR.
Tastefully and comfortable set in TILKO JAFFNA CITY HOTEL.

100/-
(One Hundred Rupees)
Enjoy Your Meal at
PRIYA RESTUARANT
IN TILKO JAFFNA CITY HOTEL
70/6, K.K.S. Road,
Jaffna.
This voucher could be Rs. 500 redeemed when you spend or over at
PRIYA RESTUARANT
Valid until 31st March 2011.
T.P: 021-222-5969

100/-
(One Hundred Rupees)
KABIRI BAR
IN TILKO JAFFNA CITY HOTEL
70/6, K.K.S. Road,
Jaffna.
This voucher could be Rs. 600 redeemed when you spend or over at
KABIRI BAR
Valid until 31st March 2011.
T.P: 021-222-5969

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகள்

45ஆம் நாள் நினைவு  11ஆம் ஆண்டு நினைவு




அமரர் தேவராசா
கேதீஸ்தரன் (தீசன்)
மண்ணில்: 03.12.1983
விண்ணில்: 31.12.2010

அமரர் சிதம்பரப்பிள்ளை
தேவராசா (தேவன்)
தோற்றம்: 15.05.1938
மறைவு: 16.06.1999

எம் உதிரத்து உறவாகி, ஏற்றத்தின் தோற்றமாகி
பழகுதற்கு இனியவனாய் பல்லோரின் நல்லோனாய்
பாரிலேயே வாழ்ந்தாய், இடையினிலே உன்னைப் பிரிந்தோம்
நிறைநிலிலே நாம் விழுந்தோம் நாள்கள் எத்தனை கழிந்தாலும்
மருமகனே உன் நினைவு மறாது.

உன் நினைவு மறவா
சோழாவத்தை, மாமா, மாமி
வதிரி, கரவெட்டி. சி.விசுவலிங்கம், வி.தவமணிதேவி,
மைத்துனர் வி.கோகிலன் (பிரான்ஸ்).

(108608)

## மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்களை விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை

* ப்றேக் பார்ட்ஸ் * கேபள்ஸ் * பல்ப்ஸ் * பிஸ்டன்ஸ் * ப்பின்டர்ஸ்
* ச்செயின் ஸ்ப்ரோகட் * ஸ்பார்க் ப்ளக்ஸ் * சஸ்பென்ஷன் பார்ட்ஸ்
* ப்றேக் ஒயில் * க்ளச் பார்ட்ஸ் * பெயாரின் * டயர்ஸ்
* காஸ்கட்ஸ் * ஸ்டாடர் மோடர்ஸ் * ஹோர்ன்ஸ்
* றஸ்ட் ரிமூவர்ஸ் * கண்டக்ட் க்ளீனர்ஸ்

### எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

மோட்டார் ஸைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் தொடர்பான சந்தையறிவைக் கொண்டிருத்தல்.

பொருட்கள் விற்பனைச் சேவைக்காக போதியளவு உறுப்பினர்களைக் கொண்ட குழு காணப்படுதல்.

பொருட்கள் கொண்டு செல்லும் வசதிகள் காணப்படுதல்.

காட்சியறை மற்றும் களஞ்சிய வசதிகள் காணப்படுதல்.

நிதி நிறுவனத்தால் அங்கிகரிக்கப்பட்ட உத்தரவாதச்சான்று ஒன்றை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் உட்பட இலங்கையின் சகல பிரதேசங்களிலிருந்தும் புதிய விநியோகஸ்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் விண்ணப்பியுங்கள்.

WD-40 BOSCH Fenner KBX MICO ESCORTS

DIMO TECHNOLOGY
[illegible]
DIESEL & MOTOR ENGINEERING PLC
65, [illegible] வீதி, கொழும்பு 14.
www.dimolanka.com
[illegible] 0777 347 850

## HNB அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.12.2009 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 19.02.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212,214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(சி/575331) -ஹற்றன் நஷனல் வங்கி

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பூச நட்சத்திரத்தில் பிறந்த, கிரகபாவம் 40, 2 இல் செவ்வாய், B.Sc இஞ்சினியர் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. மணமகள் தற்போது லண்டனில் உள்ளார்.

தொடர்பு: 0776617430

## வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டுக்குளிப் பகுதியில் (பழைய பூங்கா வீதியிலும், சுவாமியார் வீதியிலும்) வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776146434

## கட்டடம் வாடகைக்கு

யாழ். நகருக்கு அருகில், K.K.S வீதியிலிருந்து 20 மீற்றர் தூரத்தில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய 3200 சதுர அடியிலான கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படும். வியாபார ஸ்தாபனம்/ களஞ்சியசாலை/ அலுவலகப் பாவனைக்கு ஏற்றது. தொடர்புகளுக்கு:
0776083397, 0212221480, 0112679582

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/=). கல்பேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொடர்பு : 0212226944

## வீடு விற்பனை

கொழும்புத்துறை றோட்டில் கணக்கர் சந்திக்கு அருகாமையாக விபுலானந்தர் வீதியில் வாகனத் தரிப்பிட வசதி மற்றும் சகல வசதிகளுடன் கூடிய 4 பரப்புக் காணியில் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776146434.

## வீடு வளவு விற்பனைக்கு

கழிபுரம் பறாளாய் வீதியில் தபாற்கந்தோருக்கு அருகில் விக்ரோறியாக் கல்லூரிக்கு மிகவும் அருகில் 6½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:001 416265 8455, 0779258934, 0774747209.

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ்.நகர், ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை பிரதான வீதி யில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* குடியிருப்புக்கு
* தொழில் நிறுவனங்கள்
* வியாபார ஸ்தாபனங்கள்/
* [illegible]
[illegible]
தொடர்பு: 0725305782,
0783088249.

## எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி



* சகல விதமான சளி, இருமலுக்கும் சிறந்த நிவாரணி
* தொடர்ச்சியாக பாவித்துவரும்போது ஆஸ்மா நோய்க்கு சிறந்த நிவாரணி
* 100 வீதம் மூலிகை கொண்டது
* ஆயுர்வேத சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்
AY/MF/JA/295, உசன், மிருசுவில்.

(109685)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/-) 17.02.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | 0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |
| துர்க்கா பாம், சுன்னாகம் | 0779346599 |

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 2226944

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கருணாகரன்
தெய்வேந்திரன்

தோற்றம்
09 ★ 04 ★ 1948

மறைவு
14 ★ 01 ★ 2011

கடந்த 14.01.2011 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கருணாகரன் தெய்வேந்திரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை அவரது இல்லத்தில் இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

(267)

## தேவை

நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்
NARAYANA HARDWARES TRADER
யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்தின் கொழும்பு - 10 இல் உள்ள காரியாலயத்தில் நிர்வாகப் பணியாற்றுவதற்குத் தகுதியான ஆண் ஒருவர் தேவை.

* இவர் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* கொழும்பை வதிவிடமாகக் கொண்டவர் விரும்பத்தக்கது.

விண்ணப்பத்தினை 23.02.2011 இற்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர்,
நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்,
87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 0212225390

(272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்களுடன் பாம்பு எலும்புக்கூடு



கால்களுடன் வாழ்ந்த பாம்பின் எலும்புக்கூடு லெபனானில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பாம்புகள் ஊர்வன இனத்தை சேர்ந்தவை. அவைகளுக்கு கால்கள் கிடையாது.

இதற்கு முன்பு கால்களுடன் பாம்புகள் இருந்ததற்கான ஆதாரம் தற்போது கிடைத்துள்ளது. பழங்காலத்தில் வாழ்ந்த அரிய உயிரினங்கள் குறித்து ஆய்வு செய்யும் நிபுணர்கள் லெபனானில் ஒரு பாம்பின் எலும்பு கூட்டைக் கண்டெடுத்தனர்.

சுமார் 19 இஞ்ச் நீள முள்ள அந்த பாம்பின் எலும்புக் கூட்டில் கால்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இவை சுமார் 9 1/2 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

லெபனானில் கண்டெடுக்கப்பட்ட பாம்பின் எலும்புக் கூட்டில் சுமார் 1 இஞ்ச் அளவுக்கு கால் எலும்புகள் இருந்தன. அதே நேரத்தில் பாம்பின் வயிற்றுப் பகுதியில் கால்கள் வளர்ந்து வந்ததற்கான அறிகுறிகளும் இருந்தன.

அந்த எலும்புகள் 1/2 இஞ்ச் அளவில் வளர்ந்திருந்தன.இந்த வகை பாம்புகள் கால்கள் மூலம் நடந்து திரிந்ததால் நிலத்திலும், நீரிலும், பொந்துகளிலும் வாழ்ந்து இருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்த வகை பாம்புகளின் கால்கள் காலப்போக்கில் படிப்படியாக மறைந்து அவை ஊர்வன இனத்தைச் சேர்ந்தவையாக மாறியிருக்கலாம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

# தூக்கமின்மை கொலோன் புற்று நோய்க்கு வழிவகுக்கும்



தூக்கமின்மை அதிகக் கொழுப்பு, உடல் பருமன், இதய நோய்கள், நீரிழிவு மற்றும் இறப்பு ஏற்படக் காரணமாக அமைவது போலவே கொலோன் புற்றுநோய்க்குக் காரணியாக அமைகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலை மற்றும் 'கேஸ் வெஸ்டர்ன் ரிசர்வ்' பல்கலைக்கழகங்கள் 'ஆப் மெடிசின்' ஆராய்ச்சியாளர்கள் ஒரு நாளில் இரவில் ஏழுமணி நேரம் உறங்குபவர்களைக் காட்டிலும் ஆறுமணி நேரம் உறங்குபவர்களுக்கே 50 சதவீதம் கொழுப்பு அதிகமாக இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இவை புற்று நோய்க்கு காரணிகள் ஆகும்.

இந்த ஆராய்ச்சி நிறுவனங்களின் முதன்மை ஆய்வாளரான மருத்துவர் லீ கூறுகையில், ''எங்களைப் பொறுத்தவரை தூக்கமின்மை இருப்பது பற்றி அறியவந்திருக்கும் இந்த ஆய்வு முடிவு இதுவே முதன் முறை. இது புற்று நோய்க்கு காரணமாக அமைகிறது'' என்றார்.

தூக்கத்தை அதிகரிப்பது மற்றும் நன்றாக உறங்குவதற்கான முயற்சிகள் இந்த புற்று நோய்க்கு நல்லதல்ல என மருத்துவர் 'லீ' கூறினார். மேலும் குறைவான தூக்கமின்மை எவ்விதத்தில் கொலோன் புற்று நோயை உருவாக்குகிறது என கண்டறியப்பட்டாலும், குறைவான தூக்கத்தால் மெலாடோனின் என்ற ஹோர்மோன் உற்பத்திக் குறைபாடு ஏற்படுகிறது. இதுவே தூக்கமின்மைக்கும், புற்று நோய் வளர்ச்சிக்கும் காரணமாகிறது என்கிறார்.

## Build a career in sales with a global leader

### Lay a solid foundation for a future in sales



At HSBC we thrive on local understanding and people. We believe it is important to be a part of a country's culture. That is why we have more than 300,000 employees serving over 100 million customers in 87 countries and territories around the world, and it is our on-the-ground local knowledge that sets us apart as the world's local bank. As an international bank, we believe this expertise and understanding is precious. We are looking to strengthen this further. This is where you come in. In order to recruit the best talent, we are encouraging young, dynamic and motivated individuals to join the HSBC team as:

**Senior Personal Banking Advisor**

- G.C.E. Advanced Level qualification (G.C.E. Ordinary Level will also be considered, subject to candidates having a proven track record in sports / extra-curricular activities)
- Experience in selling financial services products would be an added advantage
- Strong ability to build and develop customer relationships
- Full or part academic / professional qualifications will be an advantage
- Willing to spend time on the field in order to meet business objectives
- Excellent communication skills
- Excellent negotiation and persuasion skills
- Ability to work under pressure and meet targets

**Personal Banking Advisor**

- G.C.E. Advanced Level qualification (G.C.E. Ordinary Level will also be considered, subject to candidates having a proven track record in sports / extra-curricular activities)
- Experience in selling financial services products would be an added advantage
- Should possess a flair for sales
- Excellent communication skills
- Excellent negotiation and persuasion skills
- Ability to work under pressure and meet targets
- Willing to spend time on the field in order to meet business objectives

**If interested, please send in your resumé to P.O.Box 73, Colombo, mentioning the position on the top left hand corner of the envelope or email to career@hsbc.com.lk, indicating the position applied for, before 22 February 2011.**

HSBC IS AN EQUAL OPPORTUNITIES EMPLOYER

HSBC
The world's local bank

Issued by The Hongkong and Shanghai Banking Corporation Limited. Fitch rating of AAA (lka)

# இருதய அறுவை சிகிச்சைக்கு வரப்பிரசாதம்

இருதய நோயாளிகளின் மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னர் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் இரத்த நாளங்கள் உருவாக்கப்படுகின்றன.

இவற்றைச் சம்பந்தப்பட்ட நோயாளியின் உடலில் உள்ள செல்கள் மூலம் உருவாக்குகின்றனர். இதற்கு சுமார் 9 மாதங்களாகின்றன. இதுவரை நீண்ட நாள்களாக நோயாளிகளால் காத்திருக்க முடிவதில்லை.

எனவே தற்போது பரிசோதனைக் கூடங்களில் செயற்கையான முறையில் இரத்தநாளங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மற்றவர்களிடம் செல்களைத் தானமாகப் பெற்று அவற்றை இயற்கையாகப் பெறப்படும் புரோட்டீன்களுடன் சேர்த்து வளர்த்து உருவாக்கியுள்ளனர்.

இவற்றை ஒரு வருடத்துக்கும் மேலாகப் பத்திரமாக வைத்திருக்க முடியும். இந்த இரத்தநாளங்களை இருதய அறுவை சிகிச்சையின் போது நோயாளிகளுக்குப் பொருத்த முடியும். இது இருதய மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது.

# ஆரோக்கியம் வேண்டுமானால்...

ஆரோக்கியம் வேண்டுபவர்கள் சீனியை அறவே தவிர்த்து விட வேண்டும் என்று கூறுகிறார்கள் மருத்துவர்கள்.

இதற்குப் பதிலாக கலோரிகள் குறைவாகக் கொண்ட மாற்று சீனியை பயன்படுத்தலாம் என்கிறார்கள்.

மாற்று இனிப்பை வழங்கினாலும், சீனி அளவுக்கு கலோரியைத் தராது. சுக்ரலோஸ் போன்ற மாற்று பொருள்கள் சீனியை விட 600 மடங்கு இனிப்பு உள்ளதாகும்.

சுத்திகரிக்கப்பட்ட, நாம் தினமும் பயன்படுத்தும் ஒரு ஸ்பூன் சீனியில் (3 கிராம்) 16 கலோரிகள் உள்ளது.

ஒரு நாளைக்கு மூன்று முறை சீனிக்கு பதிலாக சுக்ரலோஸ் மாற்றுப் பொருளை உபயோகித்தால் 96 கலோரிகள் நம் உடம்பில் சேருவதைத் தவிர்க்கலாம். ஒரு வருடத்திற்கு 35,040 கலோரிகள் (5 கிலோ) நம் உடம்பில் சேருவதைத் தவிர்க்க முடியும்.

இந்தக் கலோரிகள் தான் உடல் எடைக்கு முக்கியக் காரணம். இந்திய ஊட்டச்சத்து நிறுவனத்தின் சமீபத்திய ஆய்வின்படி, இந்திய ஆண்களில் 32% பேர் அதிக எடையுடனும், பெண்களில் 50 % பேர் அதிக எடையுடனும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சீனியைத் தவிர்ப்பதன் மூலம் உடற்பருமன், நீரிழிவு நோய், மாரடைப்பு போன்றவற்றை தவிர்க்கலாம்.

உங்கள் கால் முட்டியை மடக்காமல் குனிந்து, கையால் உங்கள் காலைத் தொட முயற்சியுங்கள். முடியவில்லையா, உங்கள் சீனிப் பழக்கத்தை மாற்ற இதுவே சரியான தருணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொக்லற்களில் அதிக சத்து

பழங்களில் அதிக சத்து இருப்பதால் அது உடலுக்கு உகந்தது என்ற கருத்து பரவலாக உள்ளது. தற்போது பழங்களை விட சொக்லற்களில் தான் அதிக அளவு சத்து உள்ளது.

அதுதான் சிறந்த உணவு, ஆகவே பழங்களை விட சொக்லற்களை அதிகம் சாப்பிடலாம் என்று புதிய தகவல் வெளியாகி உள்ளது.

பொதுவாக சொக்லற்கள் தயாரிக்க அதிக அளவில் ''கொக்கோ''ப் பவுடர் சேர்க்கப்படுகிறது. இது சத்துமிக்கது.

அவை தவிர மற்ற மூலப்பொருள் பவுடர்கள் மாதுளம் பழம் உள்ளிட்ட பல பழங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இவை பழங்களில் இருக்கும் சத்துக்களை விட அதிகமாகும்.

இருந்தும் சொக்லற்கள் அளவாக சாப்பிட வேண்டும். அதில் கொழுப்பு, சர்க்கரை சத்துக்கள் அதிகம் உள்ளன என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# நறுமணத்தோடு மருத்துவ குணமும் நிறைந்த ஏலக்காய்

ஏலக்காய் இஞ்சிச் செடி வகையைச் சார்ந்தது. இது பச்சை நிறத்திலும், அடர் பழுப்பு நிறத்திலும் இருக்கும். இது நறுமணப் பொருளாக மட்டும் இல்லாமல், பல மருத்துவக் குணங்களையும் கொண்டதாகும்.

மன இறுக்கத்தைக் குறைத்து உடல் புத்துணர்ச்சியைப் பெற ஏலக்காய் பயன்படுகிறது.

பல் மற்றும் வாய் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு ஏலக்காய் நல்ல தீர்வாக அமைவதோடு செரிமானத்திற்கும் உதவும். இதனால்தான் நெய் சேர்த்து செய்யப்படும் இனிப்புகளில் அவசியமாக ஏலக்காயைச் சேர்ப்பார்கள். குரல் வளை மற்றும் தோல் தொடர்பான நோய்களைத் தீர்க்கும் ஆற்றலும் ஏலக்காய்க்கு உள்ளதோடு மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கும் ஏலக்காய் பயன்படுத்தப்படுகிறது.



# குடல் புழுவை வெளியேற்றும் மல்லிகை



மணம் கமழும் மல்லிகை என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் மருத்துவ மல்லியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

தலையில் சூடுவதற்கும், மாலை அலங்காரங்களுக்கும் பயன்படும் மல்லிகையின் மருத்துவ குணங்களை இப்போது பார்ப்போம்.

சிலருக்கு வயிற்றில் கொக்கிப் புழு, நாடாப் புழு போன்றவைகள் உருவாகும். இதற்குப் பெரிதாகக் கவலைப்பட வேண்டாம். மல்லிகைப் பூக்கள் சிலவற்றை தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து, அதனை வடிகட்டி அருந்தி வந்தால் போதும் குடற்புழுக்கள் தானாக வெளியேறிவிடும்.

புழுக்களைத்தான் வெளியேற்றும் என்று நினைக்காதீர்கள், சிறுநீரகக் கற்களையே கரைய வைக்கும் குணம் இந்த மென்மையான மல்லிகைப் பூக்களுக்கு உண்டு. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

மல்லிகைப் பூக்களை நிழலில் நன்கு உலர்த்திப் பொடி செய்து காலை மாலை தேநீர் அருந்துவது போல் தண்ணீரில் கலந்து அருந்தி வந்தால் போதும், சிறுநீரகக் கற்கள் காணாமல் போகும்.

பொதுவாக மாத விலக்குக் காலங்களில் பெண்கள் சோர்வுடன் காணப்படுவார்கள். இனிக் கவலை வேண்டாம். சில மல்லிகைப் பூக்களை எடுத்துத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து ஆறிய பின் வடிகட்டி அருந்தினாலே போதும் மாத விலக்கு காலங்களில் சோர்வு நீங்கிவிடும்.

இவை அனைத்திற்கும் மேலாக மணம் கமழும் மல்லிகையை ஒன்றிரண்டு தினமும் உட்கொண்டால் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும் என்பது மருத்துவர்களின் கருத்தாகும்.




அனைவருக்கும் ஓய்வூதியம்!

**AVIVA NDB காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மாதாந்த ஓய்வூதியம் ஒன்றைப் பெறுங்கள்**

அறிமுகப்படுத்துகின்றோம்! இலங்கையிலுள்ள அனைவருக்கும் ஓர் ஓய்வூதியம். இப்பொழுது AVIVA NDB Pensions மூலம் மாதாந்த ஓய்வூதியத்துடன், ஆயுள் மற்றும் சுகாதார காப்புறுதி அனுகூலங்களையும் அனுபவியுங்கள். நீங்கள் தீர்மானிக்க வேண்டியது, எப்போது ஓய்வு பெறுவது, எவ்வளவு தொகை ஓய்வூதியம் தேவை மற்றும் எவ்வளவு காலத்திற்கு என்பன மட்டுமே.

- உங்களுக்கு ஓர் மாதாந்த ஓய்வூதியம்
- நீங்கள் இல்லாதவிடத்து, உங்கள் வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கியிருப்போருக்கு ஓர் ஓய்வூதியம்
- நீங்கள் விரும்பும் வகையில் ஓய்வூதிய நிதியத்தை அதிகரிக்கவென, திறைசேரி உண்டியல் முதல் பங்குச் சந்தை வரையான முதலீட்டுத் தெரிவுகள்.

இப்பொழுதே உங்கள் ஓய்வுகாலத்தைத் திட்டமிடுங்கள். இன்றே AVIVA NDB வெல்த் பிளானரை நாடுங்கள்.

24 மணிநேர தொலைபேசி 011 2310310 மின்னஞ்சல் info@avivandb.com இணையதளம் www.avivandb.com

AVIVA NDB
Pensions
ஓய்விற்கு ஓர் சிறந்த வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள் தேவை

ஸ்தாபனம் ஒன்றுக்கு பில் கிளாக் (Bill Clerk) ஆண்கள் உடன் தேவை.
O/L படித்திருத்தல் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0776722055

## ஐக்கியா பாம் சென்ரர்

எம்மிடம் இறைச்சிக் கோழிகள் மலிவு விலையில் கிடைக்கும். சுத்தம் செய்யப்பட்டவை. புறோயிலர் 420/-, கல்பேட் 500/-
816, கண்டி வீதி (A9 வீதி), அரியாலை.
தொ.பே. : 0729827024, 0213001997

முதல் முறையாக யாழ். மண்ணில்...

## கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி

சர்வதேச தரத்திலான டிப்ளோமா பாடத்திட்டம் படித்து விட்டு சுயதொழில் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்காக

**கையடக்கத் தொலைபேசி திருத்துவதில் நீங்களும் ஒரு வல்லுநராகலாம்!**

உங்கள் எதிர்காலத்துக்கு
மாதம் 50,000 முதல் 100,000 இற்கும் மேல் வருமானம் பெறும்
உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு
★ ஆரம்பம் முதல் பூரணமாக கற்பித்தல்
★ கையடக்கத் தொலைபேசி 1000 இற்கும் மேற்பட்ட படங்கள்
★ தனிப்பட்ட கண்காணிப்பு

**வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும்**

இப்பாடநெறியை நிறைவு செய்யும் மாணவர்களின் பெயர்களை இணையத்தளத்தில் பார்வையிடலாம். இலங்கையில் பல பாகங்களிலும் பல கையடக்கத் தொலைபேசி திருத்துநர்களை உருவாக்கிய Ganesh.K அவர்களால் நடாத்தப்படும் 4 நாள்கள் கொண்ட முழுநேரப் பாடநெறி

பெப்ரவரி 21ம் திகதி காலை 9மணி முதல் 21,22,23,24 ஆகிய நாள்களில்

பதிவுகளுக்கு முந்துங்கள்
ELITE Computer and Business College
இல: 1/5, மடம் வீதி, (குழந்தை இயேசு பின் வீதி), யாழ்ப்பாணம்.
0214922396, 0750445070, 0716161822, 0771882158.

## மாணவர்களுக்கான விசேட கல்விக் கருத்தரங்கு

* நினைவாற்றலை அதிகரித்துக் கொள்ளும் முறைகள்
* இலகுவான கற்றல் நுட்பங்கள்
* பரீட்சைக்குத் தயார் படுத்தும் வழிகள்
* குறுகிய நேரத்தில் கணித்தலை சுருக்குவதும் சரிபார்ப்பதும் போன்ற நுட்பமான கற்றல் விடயங்களை மாணவர்களுக்கு நிகழ்த்தவுள்ளோம்.

இடம்: திகதி: யாழ்.மத்திய கல்லூரி 16.02.2011
நெல்லியடி ம.ம.வி 17.02.2011

பதிவுகளுக்கு :
அன்னை புத்தகசாலை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
சிதம்பரப்பிள்ளை புத்தக நிலையம்,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொடர்பு: 0212229881, 0212263223, 0779221961

ஒருங்கமைப்பு: ஐன்ஸ்டீன் அறிவியல் கழகம்.

## நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் வெறுவெளி அரங்கக் குழுவின் ஏற்பாட்டில் மகாகவி காளிதாசனின் "அபிக்ஞான சாகுந்தலம்" என்னும் நாடகஆற்றுகை இன்று ஞாயிற்றுக்கிழமையும் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. ஆற்றுகைகள் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரையும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை5மணிவரையும் நடைபெறும். (த-10)

## கட்டடம் வாடகைக்கு

யாழ்.பலாலி றோட்டில் இலுப்பையடிச் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில் 3 தொடர் கட்டடங்கள் வாடகைக்கு விடப்படும். வாகன தரிப்பிட வசதி உண்டு. வியாபார ஸ்தாபனம், அலுவலகப் பாவனை, களஞ்சியசாலைக்கு ஏற்றது.
தொடர்புக்கு: 0773351671. (04-)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக்காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விவசாயப் பண்ணைக்கு அருகில். தொடர்புக்கு - 0777111400

## Monitoring & Evaluation Officer
## Walk in Interview - SHANTHIHAM

Walk in Interview will be held at Shanthiham to fill the above post on Contract basis on 15.02.2011 between 12.00 - 2.30 p.m.

**Qualification**

Graduate with Sociology & Psychology, Good knowledge in Information Technology, Research software, English Literacy and Communication skill are essential.

Pl. bring your certificates of Education, Experience & Character, Expected to work for a minimum of one year.

**Executive Director,**
*"Shanthiham"*
No.8/1, Katpaha Vinayagar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna.
Tel. No. 021 222 3338 / 9720.

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



தாயின் மடியில்
22.02.1921

சிவன் அடியில்
14.01.2011

## அமரர் அருணாசலம் சிவானந்தன்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தர்மகர்த்தா- உரும்பிராய் சிவன் கோவில்)

சிந்தையை சிவனிடம் வைத்து
சிவயோக சுவாமிகள் ஆசிபெற்று
திருமுறைச் செல்வத்தை ஒதியுணர்ந்து
தினமும் மௌனம் அனுட்டித்து
நயம்பட நல்லுரைகள் சொல்லி
நம் வாழ்வில் வழிகாட்டியாகத் திகழ்ந்து
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து
சிவன் பாதம் சேர்ந்தீர்கள்
உங்களது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகை வாசம்,
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## கல்வி - ஆங்கிலம்

பாடசாலை மாணவ, மாணவிகள், வெளிநாடு செல்ல விரும்புவோர், தொழில் புரிவோர், தொழில் தேடுவோர் அனைவருக்கும் உகந்த வகையில் யாழ். நகர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வீடுகளுக்கு வந்து 30 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆங்கில இலக்கணம் , ஆங்கில மொழிமூல பாடங்கள், ஸ்போக்கன் இங்கிலீஷ் ஆகியன கற்பிக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0779389201, மாலை 7மணியின் பின் தொடர்பு கொள்ளவும் அல்லது SMS செய்யவும்.
(250)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் கோப்பாய் வீதியில் மருதனார்மடச் சந்திக்கு அருகில் வலிகாமம் வலயக்கல்விப் பணிமனைக்கு எதிரில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

★ குடியிருப்புக்கு
★ தொழில் நிறுவனத்திற்கு
★ வியாபார ஸ்தாபனங்களுக்கு
★ வர்த்தகக் கடைத்தொகுதிக்கு உகந்தது.

தொடர்பு: 021 3007081
077 9672122
(225)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்
## நன்றி நவிலலும்

எம் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கெடுத்து எமக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.
கடந்த (31.12.2010) அன்று அகாலமரணமடைந்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (13.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



அன்னையின் மடியில்:
03.12.1983

அரக்கரின் தறிப்பில்:
31.12.2010

மலை ஒன்று மாண்டுவிட்டதே மண்ணுள்
கொலை ஒன்றை முடித்தார்களே படுபாதகர்
தலையாக வாழ்ந்த எங்கள் குலவிளக்கு- இன்று
சிலையாக மாறிவிட்டதேனோ?
நிலையாக எம்முடன் நீ வாழ்வாய் என்று
கலையாத பல கற்பனைகள் கட்டியிருந்தோம்
கானல் நீராகிப் போனதே அத்தனையும்
மாலையிட்டவள் மடியில் நீ விழுந்தபோது
சாலைகளெல்லாம் கண்ணீர் வடித்ததே அன்று
பெற்றவளுக்கு நீ கூறிய இறுதி வார்த்தை
மௌனத்தின் தேடலாய் புதையுண்டதே
உற்றவள் ஊமையாகி உறைந்துபோக
பெற்றவள் பேதலித்து பேச்சிழக்க - உடன்
கற்றவரெல்லாம் கண்ணீரில் மிதக்க
சுற்றத்தார் வேதனையில் வீழ்ந்து வெம்ப
ஊரார் உளம் வெம்பி விம்மியழ-நீ
போகும் இடம்தான் எங்கே?
சுற்றும் இவ்வுலகில்
உனை மீண்டுமொருமுறையாவது
சந்திக்கவேண்டும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



தேவராசா கேதீஸ்தரன்
(தீசன்)

குடத்தனை கிழக்கு,
குடத்தனை.

மனைவி, தாய், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org